[illegible]

நவம்பர், 1926

ப

[illegible]
N26·1·8
169819

## விஷய அட்டவணை.


| | | |
|---|---|---|
| 1. | ஆநந்த தரிசனம் ... ... ... | |
| 2. | உதார குணத்தின் உன்னதம் ... ... | |
| 3. | நட்பு ... ... ... ... | |
| 4. | சிறுமையும் பெருமையும் ... ... ... | [illegible] |
| 5. | பழமொழிக் குறிப்புகள்—அன்பு ... ... | 3 |
| 6. | கார்த்திகை தீபம்—அதன் வரலாறு ... ... | 3 |
| 7. | பத்திரிகாசாரம் ... ... ... | 38 |
| 8. | கவிதா விலாஸம்—I ஸ்ரீஹரிக் கண்ணி ... ... | 38 |
| | II இதுவே போதுமென்னல் ... | 383 |
| 9. | சென்ற மாதம் ... ... ... | 34 |
| 10. | பிரபஞ்ச தரிசனம் ... ... ... | 386 |
| 11. | இயந்திர தெய்வம் ... ... ... | 389 |
| 12. | பத்திரிகா அபிப்பிராயங்கள் ... ... | 396 |
| 13. | விகடப் பிரதாபன்—சென்னப்பட்டினத்துச் சிறப்பு ... | 398 |
| 14. | பெண்கள் பக்கம்—பால்ய சிநேகிதிகள் ... ... | 402 |
| 15. | சிறுமணித்திரள் ... ... ... | 404 |
| 16. | பண்டிதை விசாலாக்ஷி அம்மாள் ... ... | 406 |
| 17. | விநோதம் ... ... ... ... | 407 |
| 18. | பெரியாரின் மொழிகள் ... ... ... | 408 |


---

"ஆநந்த குண போதினி" அடியில் கண்டவர்களிடம் கிடைக்கும். அவர்களிடம் சந்தாவைச் செலுத்தி ரசீது பெற்றுக்கொண்டு எமக்கு எழுதினால் நாங்கள் இங்கிருந்து மாதாமாதம் சஞ்சிகைகளை நேரே அனுப்பிக்கொண்டு வருவோம்.

ஸ்ரீ. பி. பழனிக்குமாரு பிள்ளை,
மெய்கண்ட விலாசம் புக் டிபோ, விருதுநகர்.

இன்டோ மலேயன் ஸ்டோர்ஸ்,
17, சைனா தெரு, பினாங்கு.

ஸ்ரீ வாணி விலாஸ் புத்தகசாலை,
திருப்பாதிரிப்புலியூர்.

டி. வெங்கோபன், ஜெனரல் நியூஸ் ஏஜென்ஸி,
15, அண்ணா சாஸ்திரி தெரு,
சைதாப்பேட்டை, வேலூர்.

ஜெனரல் நியூஸ் ஏஜென்ஸி
சுவினிங் பஜார், மதுரை.

ஜெனரல் ஏஜென்ஸி அண்டு கம்பெனி,
31, கிங் தெரு, கண்டி, ஸிலோன்.


ANANDA GUN
Regd. No. M. 215
ஆநந்தகுணபோதினி.
இராஜகோபால் முதலியார்
2, தங்கசாலைத் தெரு, மதராஸ்
(காபிரைட் ரிஜிஸ்டர்டு).

ஓம் பரப்பிரம்மணே நம:

# ஆநந்தகுணபோதினி

அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான அநுபவ
விநோத நீதிகள் நிறைந்த உயரிய மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர் :— திரிசிரபுரம்-எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

“ எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.”—திருக்குறள்.

| | | |
|---|---|---|
| கமலம் - 1. | சென்னை: அக்ஷய௵ கார்த்திகைமீ 1௳ | இதழ் - 8. |
| Vol. 1. | 1926-ம்௵ நவம்பர் மீ 16௳ | No. 8 |

OFFICE OF THE REGISTRAR OF ... 4 ... 1926

## ஆநந்த தரிசனம்

“ தெய்வத்தை நினைந்து தீவினையகற்று ” என்றபடி நமது பாவ தோஷங்களின் நிவாரணார்த்தம் நாம் பிரதிநித்யமும் பகவானைப் போற்றக்கடவோம். அவரை நமது தியானத்தால் அறியக்கடவோம். அவ்வாறு அறிந்துகொண்டவன் அமிருதனாகிறான். ஓ புருஷோத்தமா! ஸர்வ கர்மங்களையும் ஒழித்து ஏக நாயகனாகிய நின்னை யொருவனையே சரணமாக அடைகின்றோம். அடியாரைச் சகல பாபங்களினின்றும் விடுவித்து அபயம் கொடுத்தருள்வாயாக. சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார கர்த்தனே! மோக்ஷப்பிரத, ஸர்வக்ஞ, சர்வசக்த, ஆநந்தமய, ஸத்ஸ்வரூப, அதிருசிய, ஏக. பிரம புருஷனாகிய பகவானே! உம்மை அன்பாலும், உமது நிமித்தமாகச் செய்யப்படும் ஸத்கருமங்களாலும் வணங்குகின்றோம். எவன் யாவற்றையும் விளங்கச் செய்கின்றானோ, எவன் எல்லாவற்றையும் ரக்ஷிக்கின்றானோ, எவனிடத்துநின்று யாவும் ஜனிக்கின்றனவோ, எவனிடத்து மீண்டும் யாவும் லயிக்கின்றனவோ, மோக்ஷத்தின் [illegible] மனோவிருத்திகளைச் சன்மார்க்கத்தில் பிரவ[illegible] எவன் உதவுகின்றானோ அப்படிப்பட்ட திவ்ய பு[illegible]பாதபத்மங்களை மேன்மேலும் கொண்டாடித் தொழுகின்றோம்.

"உனக்கே நாம் ஆட் செய்வோம்" என்றவாறு கடவுளை வழிபடுதற்கென்றே நாம் இங்கு உயிர் வாழ்கின்றோம். ஓ! பகவானே! உமது மங்களகரமான ரூபத்தை நான் தரிசிக்க அருளுவாய். ஓ! தேவனே! எங்களை ஆநந்த மார்க்கத்தால் போகத்தை அடைவிப்பாயாக. எங்களின் கோணலான பாவங்களை யழிப்பாயாக. நாங்கள் உனக்கு எங்களின் உத்தமமான ஸ்தோத்திரங்களை யமைப்பிப்போமாக. பிரமாநந்த ஸ்வரூபமாகியும், சிரேஷ்டமான சுகத்தைக் கொடுப்பதாகியும், நிர்விகாரமாகியும், ஞானவடிவமாகியும், பிரபஞ்சாதீதமாகியும், ஆகாசத்துக்குச் சமானமாகியும், மகா வாக்கியங்களுக்கு லக்ஷியார்த்தமாகியும், ஒன்றாகியும், நித்தியமாகியும், நின்மலமாகியும், அசைவற்றதாகியும், எப்போதுஞ் சாக்ஷி மாத்திரமாகியும், பாவனைகளுக் கப்புறப்பட்டதாகியும், முக்குணங்களு மில்லாததாகியுமிருக்கின்ற பரம்பொருள் எதுவோ அதனைத் தியானிக்கின்றோம்.

***

"ஆத்ம விசாரம்" என்னும் அக்கினி பிறந்து குருவென்கிற இடத்தில் வியாபித்து, வேதாந்த சாஸ்திரமென்கிற விறகினாற் பிரகாசித்து, மானிட ஜென்மமென்கிற பாத்திரத்தில், சாந்தகுணமென்கிற ஜலத்தில் அறிவு என்கிற அரிசியைப் பாகம் பண்ணி, இவ்வாறு சமைத்த பூர்ணமான அன்னத்தைப் புசித்து, ஜநந மரணமென்கிற துக்ககரமான பசி நீங்கி, தனக்கெதிரில்லாத பரமானந்தத்தால் திருப்தியுற்று, அதிருப்தியினால் ஜலத்திலுண்டான உப்பு ஜலத்திலேயே மறைவதுபோல் ஞாநாநந்தத்தினா லுண்டான விசாரமும் ஞாநாநந்தகாரமாய் மோக்ஷத்தை அடையப் பெறுகின்றது.

***

"பக்தியுடையார் பதம் பெறுவார்" என்பது உண்மையான மொழி. பக்தி என்பது அன்பு என்று பொருள்படும். அன்பாவது தனக்கு வேண்டியவர்களிடம் தோன்றும் ஆசை. வேண்டியவர் யாரெனில் தனக்கு ஹிதத்தினை விளைவிப்பவர். அவர் யாரெனில், தாய்-தந்தை-பெண்டு-பிள்ளை-உற்றார் முதலியோர். இவர்களுள் தாய்தந்தையர் ஒருவனின் உற்பத்திக்குக் காரணராயினும், அவனது கஷ்டகாலங்களில் அவனோடு மனங்கலந்து அக்கஷ்டங்களை ஒக்க அனுபவிக்கும் உணர்வு குன்றி அவனை அயலானைப்போல் அருவருத் தொதுக்கின்றார்கள். அல்லது அங்ஙனம் செய்யாது உடனிருந்து கொட்டியும் ஆம்பலும் போலும் வருந்தி நிற்பரேனும், இராஜ தண்டனைக் காலங்களில் அவனுக்கு விதித்த தண்டனைகளுக்குத் [illegible] நில்லார்கள். அல்லது அங்ஙனமே ஏற்று நிற்கினும், யம[illegible]ப்பட்டு உடலை விட்டு நீங்க நேரும் மரணகாலத்தின் துணையா[illegible]னித்து விடுகிறார்கள். ஆதலால் பெற்றோர்களை ஹிதத்தினை வி[illegible]பவராக எண்ணவோ இடமில்லை. இனி, பெண்டு பிள்ளைகளோ [illegible]எனில், மேற்கூறிய பிதா மாதாக்களைப்

169819



போலத் தனக்குக் காரணர்களாகாமல், சந்தையின் சிநேகம்போல் இடைவழியிற் சேர்ந்து பின்னர் இடையிலேயே பிரிந்துவிடும் தன்மையராவர். இவரும் மேற்கூறிய காரணங்களாலேயே ஹிதத்தினை விளைவிப்பவராக எண்ணப்படமாட்டாராய் விலக்கப்படுவார்கள். உற்றார் முதலியரோ வென்னில், அவர் பெற்றோர்களைப்போலக் காரணராகார். பெண்டு பிள்ளைகளைப்போலச் சுகரூபிகளுமாகார். அவரும் செல்வம் இருந்தக்கால் உடனிருந்து உண்ணுதலும், அச்செல்வம் பிரியும் காலத்தில் அதன் முன்னரே பிரிதலுமுடையவராய் ஒதுங்கப்படுவர்.

***

"உற்றுப் பார்க்கில் உண்மை விளங்கும்" என்பதற்கிணங்க, உலகினரால் இதத்தினரென்று எண்ணப்படும் இவர்கள், ஒருவனைக் கடைத்தேற்றுவிப்பதற்குச் சாதகராகாமல், பந்தப்படுத்துதற்கே காரணராய்ப் 'பந்துக்கள்' என்ற காரணக் குறிப்பெயரினையும் பூண்கின்றார்கள். பின்னர், வேண்டியாராக வேண்டப்படுபவர் யாவரோ என்னில், ஒருவனை இதத்திலும், அஹிதத்திலும் விலகாமல், அவனுக்கு உண்பன உண்பித்து, வெறுப்பன வெறுப்பித்து, எல்லோராலும் வெறுக்கவேண்டிய அந்திய காலத்திலும் கைநழுவவிடாமல் கடைக்கண்ணாற் கருணைபுரியும் கருணாம்பதியான கடவுளே உரிய துணையானவர்; அவரே ஒருவனை ஈடேற்றுபவர்; அவரே ஒருவனை அவன் கர்மங்களுக்காகத் தண்டித்துச் சுத்தனாக்குபவர்; அவரே எக்காலமும் விடாது தொடர்ந்துள்ளவர். ஆகையால் அவர் தாம் நமக்கு இதங்களைப் புரிபவர் என்று நினைக்கவேண்டும். இக்கருத்துடனன்றோ—"என்னில் யாருமெனக் கினியாரில்லை—என்னிலும் மினியானொருவ னுளன்" என்று தமிழ் வேதமும் கூறிற்று. ஆகையால் ஒருவனுக்கு அன்பு கடவுளிடம் தோன்றுவதே தகுதியன்றி, ஏனையோரிடம் தோன்றுவது தக்கதன்று. கடவுளிடமாக உண்டான அன்பினைத்தான் பக்தி என்று கூறுவது.

***

"பக்தியின் மகிமை பகருவதருமை" என்பதற்கிணங்க, அப்பக்தியைக் கடவுளிடத்தில் எப்படிச் செய்வது எனில், மனோவாக்கு காயங்களினாற் செய்யல் வேண்டும். எங்ஙனமெனில், (1) மனத்தால் அக்கடவுளின் பெயர்களையும், அவன் குணங்களையும், அவன் குறிகளையும், பரோபகாரங்களையும் சிந்தித்து வியத்தல். (2) வாக்கால் அங்ஙனம் சிந்தித்து வியந்தவற்றைப் பேசுதல். (3) காயத்தால் அக்கடவுளின் ஆலயத்தை வலம் வருதல், அரிய பணிகளைப் புரிதல்—முதலியவையாம். இப்படியன்றி, பக்தியை முற்கூறிய பெண்டு பிள்ளைகளிடத்துச் செய்து வாணாளெல்லாம் வீணாக்கின், அம்மனித சரீரம் பயனுடையதாகாது. அதுவோ நீரில் எழுத்துப்போல மின்னி மறையும் நிலையாதலால், இவ்வரிய மானிட சரீரத்தைப் பெற்றதற்கு, எம்பெருமானிடம் பக்தி பண்ணி எல்லாராலும்

விரும்பப்படும் முக்தி நாட்டுக்கு முந்திய விருந்தாகவேண்டும். இவ்வண்ணம் கூறியதனால், பெற்றோர் உற்றோரிடம் அன்பு வேண்டியதில்லை; அவர்களைத் திரஸ்கரித்துத் தள்ளிவிட வேண்டுமென்பது கருத்தல்ல. பின்னர் என்னவெனில், அவரே தாரகமாக நம்பி ஈச்வர வந்தனையை விடப்படாதென்பதொன்றே கருத்து. பெற்றோரைப்போற்றி வழிபடவேண்டியதே. அவர் சேவை ஈச்வர சேவை போன்றது. ஏன்? கடவுள் நிலையை முந்திக்காட்டித் தந்த கடவுளராகையாலே. பெண்டு பிள்ளைகளையும் போஷிக்கவேண்டியதே. ஏன்? அவர்கள் ஈச்வர குணானுபவம் பண்ணுதற்கு அனுகூலிகளாக இருக்கிற பக்ஷத்து. உற்றோரைப் போஷிக்க வேண்டியதே. ஏன்? அவரும் அப்படி ஈச்வர குணானுபவம் பண்ணுதற்குச் சாதகராக இருக்குமிடத்து. இக்கருத்து தான் ஆன்றோரால் அங்கீகரிக்கத் தக்கது.

***

“முதிர்ந்த மாங்காய்களை” யறுத்து உலர்த்தினால் வற்றலாகி அளவிற் குறைந்துபோம். மாங்காயின் ரஸம் சுண்டுவதே இதற்குக் காரணம். இப்படியே பணமாகிய ரஸம் துஷ்டனிடமிருந்து சுண்டிப்போனால், அவனது அகங்காரம் அடங்கிவிடும். பல்லிழந்த பாம்பும், நடக்கமுடியாத கிழப்புலியும் மனிதர்களை ஹிம்ஸியா. ஆயினும் அவைகட்கு நல்ல எண்ணம் உண்டாகாது. இதைப்போல் பிறர் வீட்டுக் குடும்ப காரியங்களில் பிரவேசித்து சண்டையை விளைக்கிறவர்கள் பின்னுக்கு அதன் பலனை யடைந்து அடங்குவர். ஆயினும் அவர்களுடைய தீய நெஞ்சம் மட்டும் அடங்காது. கையால் கிள்ளுவதைக் கோடாலி கொண்டு பிளப்பதுபோல் அதிசுலபமாய் அடக்கக்கூடிய மனஸ்தாபத்தை வெகு தீவிரமாய்ப் பலப்படுத்திக்கொள்வது துர்க்குணிகளின் இயல்பு.

***

“தியாகம் என்பது என்ன” ஒரு மனிதன் பாபமற்ற தொழிலைப் புரிந்து பொருள்தேடி, அதைத் தான் அனுபவியாமல் தானம் செய்வானாகில் அது தியாகம் எனப்படும். கர்மத்தைச் செய்து அதன் பலனை இச்சியாமல் வேறொருவருக்குக் கொடுப்பதே தியாகமாம். பலனை இச்சியாமற்போயினும் பகவானுக்கு அது தெரியாமற் போகாது. ஒரு ராஜ ஸபையில் ஸங்கீதம்பாடி தோடா பெற்றுக்கொள்வோன் அதைத் தரியாவிட்டாலும் பரிசடைந்தது பொய்யாகாது. ஸந்யாசிகள் கர்மங்களைச் செய்து ஈசுவரார்ப்பணம் பண்ணுவதால் அவர்களைச் சுகதுக்கங்கள் பீடியா.

***

“குலம் பெரிதோ குணம் பெரிதோ?” குணமே பெரிது. தெய்வபக்தி, குருபக்தி, மாதா பிதாக்களிடம் பூர்ணாபிமானம், மரியாதை, அன்பு முதலிய நற்குணங்கள் மனிதனிடம் அமைந்திருந்



வேண்டும். உலகத்தில் பிறந்தபோதே இறப்பும் பின் தொடருகிறது. எதை மறந்தாலும் ஈசுவர பக்தியை மறக்கலாகாது. உத்தமர்களின் நேசம் மனிதனுடைய ஜீவித காலத்தை ஸந்தோஷமாய் விளங்கச்செய்யும். மத்திமர்களுடைய ஸ்நேகம் ஸுக துக்கத்தை விடாமல் தந்து கொண்டிருக்கும். அதமர்களின் தோழமை ஸதா துக்கத்தையும், வெறுப்பையும், கோபத்தையும், தரித்திரத்தையும் ஒரே தடவையில் கொண்டுவந்து விடும். மனிதன் கெடுவதற்கும் நலமா யிருப்பதற்கும் ஸகவாஸமே காரணமாகும். துஷ்டனோடு சேர்ந்தால் துர்ப்பாஷைகளும், தரித்திரனுடன் கூடினால் அற்ப புத்தியும் ஏழைத்தனமும், கோபியுடன் சேர்ந்தால் குரோத வார்த்தைகளும் அதிசீக்கிரத்தில் அப்யாசமாய்விடும். ஸாதுக்களிடமும் ஸஜ்ஜனர்களின் மத்தியிலும் சஞ்சரிக்கும் மனிதர்கள் துர்க்குணங்களை மறந்து ஸுக குணங்களையே அனுபவிப்பார்கள். இதற்காகவே சிறுபோது முதல் பக்தியைக் கற்பிப்பது நன்மை. பக்தியால் ஸகல ஸித்திகளும் கிடைக்கும். அவரவர்களின் நித்ய கர்மானுஷ்டானங்களை விடாமற் செய்து வந்தால் மனச்சாந்தி யுண்டாகும். குருவை சரணாகதியடைந்து ஸுக மார்க்கத்தைத் தேடுவோர்க்குப் பகவானுடைய அனுக்கிரகம் எளிதிற் கிடைக்கும். தமது பக்தர்கள் ஸர்வ துக்கங்களிலிருந்தும் விடுபட வேண்டுமென்றே பகவான் அவதாரங்களை எடுத்தார். அவ்வாறு செய்யாவிடில் ஜனங்களுக்கு ஈசுவரனிடம் எங்கிருந்து பக்தி யுண்டாயிருக்கும்? அவர்கள் ஈசுவரனுடைய மகிமையை எவ்வாறு அறிய முடியும்? ஆகவே, பகவானுடைய திருவவதாரங்களைக் கூறும் புராண இதிகாசங்கள் பூஜார்ஹமானவை. அவற்றில் பிரீதி கொள்வது தான் பக்திக்கு அஸ்திவாரமாம்.

---

கல்கத்தா முதலிய வட இந்தியப் பட்டணங்கள் தசரா உத்ஸவத்திற்குப் பிரஸித்தமானது. மிக்க மதாபிமானத்துடன் கொண்டாடப்பட்டுக் கடைசி தினத்தில் தீர்த்தவாரி என்ற உத்ஸவமும் நடைபெறும். அப்போது ஊர்வலங்கள் நடக்கும்.

---

ஒரு ஐரோப்பியன் வெகு நாள் விலகி யிருந்து தன் சிநேகனுடைய குழந்தையைப் பார்த்தால், ‘பையன் அழகா யிருக்கிறான், பையன் நல்ல வளர்த்தி’ என்பான். இத்தேசத்தானோ அப்படிப்பட்ட தருணத்தில், ‘என்ன, பையன் இப்படி இளைத்துப்போயிருக்கிறானே; உடம்பு செம்மையில்லையா’ என்பான். இருவரும் குழந்தையினுடைய க்ஷேமத்தைக் கருதுபவர்கள்தான்; ஆனால், வித்தியாஸம் யென்னவெனில், ஐரோப்பியனுடைய கொள்கை நன்மையைக் கோருதல், ஹிந்துவினுடைய கொள்கை தீமையை விலக்கல். இதனால்தான் அவர்களுடைய பேச்சும் நடத்தையும் [illegible]கப் பேதப்படுகிறது.

---

# ஆநந்த குண போதினி

அக்ஷய௵ கார்த்திகை௴ 1உ

## உதார குணத்தின் உன்னதம்

கடவுளால் படைக்கப்பட்ட இப்பூமண்டலத்திலே முற்காலத்து இருந்தவர்களும் இப்போது இருக்கின்றவர்களுமான மானிடர்கள் கோடீசுவரன் தொடங்கிக் கோவணாண்டி வரையிலுமுள்ள சகலமான பேர்களும் நல்லோர்-தீயோர் என இருவகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். இப்பிரிவு அவரவர் கொண்டிருக்கும் குணத்தின் வேறுபாட்டால் உண்டானதேயன்றி வேறன்று. நற்குணமுள்ளவர்கள் நல்லோரெனவும், தீக்குணமுள்ளவர்கள் தீயோரெனவும் வழங்கப்படுகின்றனர். அவற்றுள் நல்லோராவதற்கு வேண்டிய நற்குணங்கள் நாநா விதமாயிருப்பினும், அவைகளில் முதன்மையானதென்று அனுபவத்தில் தேர்ந்து சிறப்புற்றோங்கிய சான்றோரனைவராலும் புகழ்ந்து கூறப்பெற்றது உதார குணமேயாம். உதார குணமாவது 'ஐயமிட்டுண்', 'தானமது விரும்பு' எனக் கூறியிருக்கின்றபடி, இல்லாதவர்களுக்குத் தம்மாலியன்றளவு ஈந்து உபகரிக்க வேண்டுமென்கிற உட்கருத்துடைமையாம். இவன் 'ஈவிரக்க முடையவன்' என்கிற உலக வழக்கினாலும் எல்லாக் குணங்களினும் ஈவே உத்தமமான குணமென விளங்குகின்றது. "இட்டார் பெரியோர், இடாதா ரிழிகுலத்தோர்" என்றபடி இப்பூமியில் ஈகைக் குணமுடையோரே உயர்ந்தோர்; அக் குணமில்லாதவர் இழிந்தோர் என்றும் கூறியிருக்கின்றனர்.

* * *

உதார குணத்தில் சிறந்து விளங்கியவர்களில் கர்ணனைச் சிறப்பாகச் சொல்வர். "கர்ணனுக்குப் பின் கொடையுமில்லை, கார்த்திகைக்குப் பின் மழையுமில்லை" என்று அவனுடைய உதார குணம் ஒரு பழமொழியாகவும் வழங்கலாயிற்று. துஷ்டர்களான துரியோதனாதியர் பக்கலில் கர்ணன் இருந்துவந்த போதிலும், உத்தம புருஷராகிய தர்மராஜனுக்கு உண்மைத் தமயனாகக் கூடிய உயரிய குணங்கள் அனைத்தையும் பெற்றே இருந்தான்.

* * *

கர்ணனுக்குப் பின் இரண்டாவனாக விளங்கிய பெருங்கொடை வள்ளல், பிற்காலத்து தாரா நகரத்தில் அரசு புரிந்து வந்த மகாப் பிரபுவாகிய போஜராஜனாவர். இம்மகாராஜன் தனது குணத்தினால் காமதேனு, கற்பகத்தரு, சிந்தாமணி முதலியவற்றின்



மகிமையையும் அற்பமாக்கி உலகமெங்கும் பரந்தோங்கிய புகழையுடையவன். போஜராஜன் அரசு செலுத்தி வரும் நாளில், அவன் வித்வான்களிடத்திலும் கவிகளிடத்திலும் மிகுந்த அபிமானம் உடையவனாய்த் தன் சபைக்குக் கவி பாடிக்கொண்டு வருகிற ஒவ்வொருவருக்கும் அவரவருடைய யோக்கியதைக்குத் தக்கவாறு யானை, குதிரை முதலியவைகளும், பொருள்களும், பூஷணங்களும் பரிசு அளித்துவரத் தொடங்கினான். அதனால் நாளுக்கு நாள் பொக்கிஷத்தில் பணம் வெகுவாகக் குறைவு பட்டுக் கொண்டே வந்தது. அது கண்டு மந்திரியானவன் ஒருநாள் அவனை நோக்கி, "நீர் இப்படிப் பணத்தை அளவு சங்கியை இல்லாமல் செலவு செய்து விடலாமா? கைப் பொருள் மிகுந்திருந்தாலல்லவோ அரசருக்குப் பெருமை. சேனாபலம், ராஜ்யபலம், கோசபலம், துர்க்கபலம்—இவை முதலியன எவனுக்கு அதிகமாயிருக்கின்றனவோ அவனே பகைவர்களால் வெல்லக் கூடாத ஜயசீலனான அரசனாவான் என ராஜநீதி நூல்கள் முறையிடுகின்றன. அன்றியும் உலகத்தில் வறியனாய்ப் போனவனுக்குப் பொருளின் மேல் ஆசை அத்தனை அதிகம் கிடையாது; தனவான்களுக்கே மேன்மேலும் பொருளாசை அதிகமாகும். இரண்டு * 'கோடி'யுடன் கூடிய ‡ லக்ஷத்தின் மேலே கண் வைத்திருப்பது யாவரும் அறிவோமே. பொருளாசையற்றால் அரசர்களுக்கு அபிவிர்த்தி யுண்டாகாது; 'வேந்தர் தனமே விரும்புவார்' என நீதி நூல் முறையிடுகின்றது என்று கூற, அது கேட்டு ராஜா, நீர் சொல்வது சரியன்று; செல்வமிருந்தால் அதற்குத் தக்கதான தருமம் முதலாகிய செலவும் கூடவே இருத்தல் வேண்டும். இல்லாவிடின் அச்செல்வம் உடனே அவனை விட்டு நீங்கி விடும் என்று சொல்லி, அவ்வமைச்சனை அந்த அதிகாரத்தினின்றும் நீக்கி அதற்குப் பதிலாக மற்றொருவனை நியமித்து, அவனுக்குக் கண்டிதமான கட்டளையொன்றும் செய்தான். அதாவது, இந்த ராஜாங்கத்து அதிகாரிகளுள் எவனாயினும் சரி, கொடுப்பதைக் கண்டு பொறாமைப் படுவானாயின் அவனை உடனே நீக்கி விடுதல் வேண்டும். பிறர்க்கும் தமது கையால் கொடுத்துத் தாமும் எவ்வளவு அனுபவிக்கிறார்களோ, அவ்வளவுதான் அவர்களுக்குச் சொந்தமான பொருள். நாம் இறந்து போனபிறகு அந்நியர் நமது பொருளை எடுத்து அனுபவித்துக்கொண்டு கோலாகலமாயிருந்தால் அதனால் நமக்கு என்ன சுகமாயிற்று, ஒன்றுமில்லை. அன்றியும், கொடுப்பவனை உலகத்தார் கொண்டாடுவார்களேயன்றிப் பணக்காரனைக் கொண்டாடார்கள். எல்லாரும் மேகத்தை விரும்புகிறார்களோ,

---

* கோடி=வில்லுக்கானபோது நுனி; தனவானுக்கானபோது நூறு லக்ஷம் என்னும் அளவு.

‡ லக்ஷம்=வில்லுக்கானபோது இலக்கு; தனவானுக்கானபோது நூறாயிரம் என்னும் அளவு.

கடலை விரும்புகிறார்களோ? மேலும், நீரைத் தன்னிடம் சேர்த்து வைத்திருக்கின்ற கடல் கீழேயே இருந்து கொண்டிருக்க, பெருங்கொடை வள்ளலாகிய மேகமோ பூமியின்மேல் எவ்வளவு உயரத்தில் கம்பீரமாகக் கர்ச்சித்துக்கொண்டிருக்கின்றது பார் என்றான்.

* * *

அன்று முதல் இராஜாவினுடைய உதார குணம் இன்னும் அதிகமாக விருத்தியடைந்து வந்தது. இப்படியிருக்க ஒரு சமயத்தில் அந்த மந்திரி, இதேது; கரைகடந்து போகின்றதே என்று ஆலோசித்து, ராஜாவின் எதிரே யாதொன்றும் மறுத்துப் பேசத் துணியாமல், அவன் பள்ளியறைச் சுவரிலே,

"ஆபத்து நேர்ந்த விடத்து உதவியாகும்படி பொருளைக் காப்பாற்றி வைக்கவேண்டும்" என்னும் கருத்துள்ள ஒரு அடியை எழுதிப்போயினான். மறுநாள் போஜராஜன் நித்திரை தெளிந்து எழுந்திருக்கும் பொழுது சுவரில் எழுதியிருப்பதைக் கண்டு, அது தனக்காகவே எழுதினதெனத் தெரிந்து,

"திருமகள் கடாக்ஷம் பெற்றவர்களுக்கு ஆபத்து ஏது?" எனப் பொருள் கொண்ட இரண்டாவது அடியை அதன்கீழ் எழுதிவைத்தான். பிறகு மந்திரி வந்து அங்கு எழுதிவைத்திருப்பதைக் கண்டு,

"அத்திருமகள் கடாக்ஷம் போய் விட்டாலோ?" என்னும் அர்த்தமுள்ள மூன்றாவது அடியை வரைந்தான். மற்றுநாள் அரசன் சயனிக்க வரும்போது அதைப் பார்த்துவிட்டு அதன் கீழ்,

"தேடிவைத்த பொருளும் அதனோடுகூடவே போய்விடுகின்றது" என்றதான பொருளில் நான்காவது பாதத்தை எழுதி முடித்தான். மறுநாள் மந்திரி வந்து பார்த்து ராஜாவின் மனவுறுதியைக் கண்டு மிகவும் மகிழ்ச்சிகொண்டு அவன் கால்களில் வீழ்ந்து தான் தெரியாமையால் செய்த பிழையைப் பொறுத்துக்கொள்ள வேண்டுமென வேண்டிக் கொண்டான்.

"மருவினிய சுற்றமும் வான்பொருளு நல்ல
உருவு முயர்குலமு மெல்லாம்—திருமடந்தை
ஆம்போ தவளோடு மாகு மவள் பிரிந்து
போம்போ தவளோடும் போம்"

எனவும் கூறியிருக்கின்றனர்.

* * *

சொற்ப உபகாரம் செய்தவர்களுக்கும் போஜராஜன் அளவற்ற ஐசுவரியங்களைக் கொடுத்துக் காப்பாற்றிய சந்தர்ப்பங்கள் அநந்தம். ஒருநாள் போஜராஜன் வேட்டையாட மனமுற்று ஆரணியத்திற்குப்போய் வெகு நேரம் வேட்டையாடிக் களைத்துத் திரும்பி அரண்மனை நோக்கி வருகையில், வழியில் ஓர் இடைப்பெண் தாராநகரத்தில் விற்பதற்குத் தயிர்க்கூடையைத் தலையில் வைத்துக்கொண்டு



போவதைப் பார்த்தான். உடனே அரசன் அந்த இடைப்பெண்ணின் அருகே சென்று, ஓ பெண்ணே! நான் இவ்வனத்தில் வேட்டையாடி மிகவும் களைத்து வருகிறேன்; நீ என்னுடைய களை தீரும்படி எனக்குக் கொஞ்சம் மோர் கொடுப்பாயா என்று வேண்டினான். அப்பெண் அவ்விதமே ஆகட்டுமென்று அதிக சந்தோஷத்துடனே தலைமேலிருந்த கூடையைக் கீழே இறக்கி, தமக்கு வேண்டியவளவு தயிர் குடித்துக் களைதீரலாமென்று சொல்ல, போஜராஜனும் அப்படியே தனக்கு இஷ்டமான மட்டில் வேண்டிய தயிரைப் பருகித் தனது தாகத்தைத் தணித்துக்கொண்டான். பிறகு சந்தோஷமாய் அவன் இடைப்பெண்ணைப் பார்த்து, உனக்கு என்ன வேண்டும் கேள், கொடுக்கிறேனென்று சொல்ல, அதற்கு அச்சிறுமி, ஓ மகாப்பிரபுவே! நான் இன்னும் கன்னிகழியாத சிறுமகள்; உம்மை மணம் புரிந்து உமக்குப் பத்தினியாக வேண்டுமென என் மனம் ஆசை கொள்ளுகின்றது என்று சொன்னாள். அது கேட்ட அரசர்பிரான் தமது அந்தஸ்துக்குத் தாழ்ந்ததான இடைப்பெண் என்று அலக்ஷியம் செய்யாமல் அப்பெண்ணின் சாதுரியத்தைக் கண்டு வியந்து, அவ்விதமே ஆகட்டுமென்று கூடவே அப்பெண்ணையும் அரண்மனைக்கு அழைத்துக் கொண்டுபோய் விவாகம் செய்து கொண்டு வெகு மேன்மையாகப் பரிபாலிப்பதானான். "கேள்—கொடுக்கிறேன்"—என்று தான் கூறிய வாக்கைக காப்பதற்காகக் காட்டிய உதாரகுணம் இதுவாகும். போஜராஜனுடைய சரித்திரத்தில் இத்தன்மையான உதார குணத்தைப்பற்றிய கிளைக்கதைகள் இன்னும் அநேகம் இருக்கின்றன. அவற்றை விவரிப்பின் பெருகும்.

இன்சொல், தாழ்நடை, உண்மை, ஊக்கம், ஆண்மை, கல்வி முதலாக நற்குணங்கள் பலவாயிருக்க, அவை அனைத்தினும் ஈகைக்கு மட்டும் வந்த ஏற்றம் யாதென்பீர்களோ, இது வெகுவாய்ப் பலர்க்கும் தெரிந்த விஷயமே. நாம் பிறக்கும்போதே இறப்பும் கூடப் பிறந்ததன்றோ? அதற்கு நம்முடல் இரையாகிவிட்ட பின்பு நாம் யாது செய்யக்கூடும்? எவ்வளவு பெருமை பெற்று வாழ்ந்தோமாயினும், நமது பேர் ஊர் எல்லாம் அப்போதே அழிந்துபோனவைதாமே. ஆதலின், கடவுள் கருணைகூர்ந்தருளிய இம்மானிட தேகம் அவ்வாறு இறப்பென்னும் பகைவனால் அழிக்கப்படுவதற்கு முன்னரே, இம்மை மறுமையிரண்டிடத்தும் நாம் என்றும் அழியாவுடம்பு பெற்று வாழ்ந்திருப்பதற்கேற்ற வழி தேடிக்கொள்ள வேண்டுவது அவசியம். தத்துவஞானம் முதலியவற்றால் மறுமையில் சுகித்து வாழ்வதற்கு ஏற்றவழி ஒருவாறு தேடிக்கொள்ளக் கூடுமாயினும், இம்மையிலே என்றும் அழியாததாகிய புகழுடம்பு பெற்று வாழ்வதற்கு உதாரகுணமொன்று தவிர மற்றெதுவும் அத்துணைச் சாதன மாகமாட்டாது. அன்றியும் ஈகைக்குணம் ஒருவன்

உயிரோடிருக்கையிலும் அவனுக்கு அளவில்லாத பெருமைகளை விளைவிக்கவல்லது. "இரப்போர்க்கீதலி னெய்துஞ் சிறப்பில்லை." ஆனது பற்றியே இந்த நற்குணமானது ஒப்புயர்வில்லாத உத்தம குணமென்று அனைவராலும் கொண்டாடப்படுகின்றது. இந்தக் குணமொன்று உண்டாயின் தேவலோகத்தவர்களும் நல்லறிவினும் இதனையே மேலானதாகக் கொள்வார்கள். இதுகாறும் கூறியவற்றிலிருந்தும் உதார குணத்தின் உன்னதத்தினை ஒருவாறு உணர்க. உணர்ந்து, அவ்வழி சென்று புகழ்தாங்குக.

"உத்தமர்தா மீயுமிடத் தோங்குபனை போல்வரே
மத்திமர்தாந் தெங்குதனை மானுவரே—முத்தலரும்
ஆங்கமுகு போல்வ ரதம ரவர்களே
தேங்கதலி யும்போல்வர் தேர்ந்து."

---

ஜாதிப் பகைக்கு மூடத்தனம் அல்லது அறியாமை அடிவேராயிருக்கிறது. புத்தி விகாஸம் உண்டாயிருக்கிற விடத்தில் மதப்பகை அல்லது மதி கேடு ஒரு நிமிஷமாகிலும் நில்லாது. ஜாதியும் மதமும் வேறாயிருக்கிறபடியாலே, ஒருவருக்கொருவர் சிநேகமாய்க் கூடி வாழக்கூடாதென்பதில்லை யென்று கற்றறிந்தோர் அறிவார்கள். இங்கிலாந்தில் பிறந்தாலென்ன, இந்தியாவில் பிறந்தாலென்ன ; ஒருவரை யொருவர் சேரவொட்டாமல் பிரிக்கும் சமய பேதங்கள் எப்படி யிருந்தாலென்ன ;—'நல் வாழ்க்கைக்கு உரிய கடமை எல்லாருக்கும் ஒன்றே' என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர். நட்பு என்பது உத்தமர்களுக்குள் எவ்விடத்திலும் பொருந்திவிடும். எவ்விதமேனும் எல்லோரும் ஒன்றா யிருக்கப் பாருங்கள். அதுவே இவ்வுலகின் பெரிய போதனை.

---

"மோட்டார் எமன்" என்ற பதம் முதன்முதலில் "லோகோபகாரி" பத்திரிகையில் தோன்றியதாகும்.

---

லார்ட் ஹபார்ட் என்பவர் முன்பு சென்னை மாகாணத்தின் கவர்னராக இருந்து இங்கேயே திடீரென்று காலமானார். அவர் தயாள குணபூரணர். அவர் இறக்குமுன்பு கடைசியாகச் செய்த உபன்யாசமொன்றில் பின் வருமாறு கூறி யிருக்கிறார். "இத்தேசத்தில் 'பிரஜா—மூடத்தனம்' பெருத்த நோயா யிருக்கிறது. * * இந்தியாவில் கல்வியை அபிவிர்த்தி செய்தால் ஜனங்களுக்குச் சுதந்தரங்களைப் பெற இச்சையும் ராஜ நீதியில் அதிர்ப்தியும் பிறக்குமென்றும், அதனால் இந்தியாவுக்கே கேடு வருமென்றும், நம்முடைய துரைத்தன அதிகாரத்துக்குத் தளர்ச்சி உண்டாகுமென்றும் சிலர் சொல்லுகிறார்கள். அதை ஒருவரும் நம்பவேண்டாம். இராஜாங்கத்திற்குக் கேடும் நீதிக்குத் தவறும் தெரியாமையினால் வருமேயன்றி ஞானத்தினால் உண்டாகாது. * *"

---

# * நட்பு

(301-ம் பக்கத் தொடர்ச்சி.)

*எப்படிப் பட்டவர் களுக்குள் நட்பு ஏற் படுகிறது?*

சாதாரணமாய் உலகில் சமானஸ்தர்களுக்குள்ளேயே சிநேக முண்டாகிறது. தரித்திரன் தனவானுக்கும், முழு மூடன் மூதறிஞனுக்கும், பலமற்றவன் பலவானுக்கும் சிநேகமாவதில்லை. தத்தம் வயது, குணம், நடக்கை முதலியவற்றிற்குத் தக்கவரோடு சேர்வதுதான் மனித வியற்கை. 'இனம் இனத்தோடு சேரும்'; அவரவர் இயற்கைக் கேற்ப இணக்கம்.— 'சிற்றெறும்பைச் சிற்றெறும்பும், கட்டெறும்பைக் கட்டெறும்புந் தேடும்.' அன்றியும்,

"நற்றாமரைக் கயத்தில் நல்லன்னஞ் சேர்ந்தாற்போற்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்—கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டிற்
காக்கை யுகக்கும் பிணம்." (ஔவையார்)

*நட்பாதற்குக் காரணம்.*

ஒரே விடத்திற் பிறந்து, ஒன்றாக வளர்ந்து, ஒரே விடத்தில் வசித்து, ஒரே சீதோஷ்ணத்தை யனுபவித்து வருபவர்கள் ஒருவரை யொருவர் அறிந்துகொள்ளப் போதுமான காரணமுண்டு. இப்படிப்பட்ட பல வருஷ-பழக்கம்-சகவாசம்-அறிமுகம் காலக்கிரமத்தில் மிக்க அந்நியோன்னியமான கூட்டுறவை யுண்டாக்கவும் இடமுண்டு ; ஏனெனில் எப்படியோ இன்னொருவனோடு கூடி யிருக்கவே மனிதன் முயற்சிக்கிறான். இவ்வாறு மனிதர் கொள்ளும் சம்பந்தம் அவர்களைப் பங்காளிகள் போலவும் சகோதரர்கள் போலவும் பிணைக்கப் போதுமானதாயிருக்கும். இச்சம்பந்தங்களே நாளா வட்டத்தில் உண்மையான நட்பைக் கொடுக்க வாய்க்கும் சந்தர்ப்பங்களாக விருக்கின்றன. எனவே, ஒரே விடத்திலிருத்தலால் அறிமுகத்திற்கும், அவ்வறிமுகத்தால் அடிக்கடி கண்டு பழகுதற்கும், அப்பழக்கத்தால் ஒருவர் குணங்களை யொருவரறிந்து ஒருவரை யொருவர் விரும்புதற்கும், அவ்விருப்பத்தால் ஒருவர்மேலொருவருக்கு அன்பு உதிப்பதற்கும், அவ்வன்பால் பிறகு அவர்களுக்குள் நட்பு என்னும் உறவைப் பிறப்பிப்பதற்கும் கூடுமானதாகிறது. இங்கு

"அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு."

என்ற திருக்குறள் ஆராய்ந்தறியற் பாலது.

*நட்பிற்குச் சிறந்த காரணம்.*

"புணர்ச்சிப் பழகுதல் வேண்டா - வுணர்ச்சிதான் நட்பாங்கிழமை தரும்" என்றபடி ஒருவரோடொருவர் நட்புரிமை பெறுதற்கு, ஒரு தேயத்தாராதலும், அடிக்கடி சந்தித்துஞ் சம்பாஷித்துஞ் சேர்தலும், ஒத்த வுணர்ச்சியாதலுமே காரணங்களாம் ; இவற்றுள் தேய வொற்றுமையும், பழக்கமும் நட்புக்கு அவ்வளவாக இன்றியமையாதனவல்ல, தாம், அவர்—என்ற வேற்றுமையின்றி உள்ளும் புறமும் ஒத்த உள்ளன்புடையாதலே

நட்பிற்குச் சிறந்த காரணமாம். இன்னும் நட்பிற்கும் நட்பின்மைக்குங் காரணம், எப்பொழுதும் அருகிலிருத்தலும் இல்லாமையு மன்று, மனம் கலந்திருத்தலேயாம். இவ்வாறு யாதேனுமொரு நிமித்தத்தினாலேயே மனிதர் சிநேகத்துவத்தை யடைகின்றனர். அச்சத்தினாலாகிலும், யாதோ ராசையினாலாகிலும், மூடர்களுக்குள்ளும் தீயவர்களுக்குள்ளும் சிநேக முண்டாகிறது. ஆனால், பெரியோர்களுடைய சிநேகமோ—பாலும் நீரும் கலந்தவளவில் ஒன்றாவதுபோல்—மன மொன்றுபடுதலால் பார்த்த மாத்திரத்திலேயே நட்பு ஏற்பட்டுவிடுகின்றது.

> "தொல்லருங் காலமெல்லாம் பழகினுந் தூயரல்லார்
> புல்லலர் உள்ளந்தூயார் புல்குவர் எதிர்ந்த ஞான்றே"

* * என்று இராமவதாரங் கூறுவதையுங் காண்க.

**காரணத்தால் மூவகை நட்பினர்**

இங்ஙனம், தான் சிநேகிக்குங் காரணத்தால் நண்பனாகிறவன் மூவகைப் படுவான். நட்புரிமையையே யன்றித் தனக்கென யாதொரு பயனையும் எதிர்பாராது சிநேகிப்பவன் நண்பரில் உத்தமனாவான். ஒன்றும் பெறாவிடினும், 'செல்வமுங் கீர்த்தியுங் கொண்ட உயர் பதவியிலுள்ளோர் நண்பன்' என்று பெயர்பெறும் பெருமையை யுத்தேசித்தே நேசிப்பவன் மத்திமன். சுயகாரியப்புலியாக யாதாமொரு பயனை விரும்பி அதன் பொருட்டே ஸ்நேகிப்பவன் அதமனெனப் படுவான். இம்மூவகைப்பட்ட நட்பினர் திறத்தையுங் கீழ்வரும் வெண்பாவினால் உய்த்துணர்ந்து கொள்க—

> "கடையாயார் நட்பிற் கமுகனையர் ஏனை
> இடையாயார் தெங்கி னனையர்—தலையாயார்
> எண்ணரும் பெண்ணைபோன் றிட்டஞான் றிட்டதே
> தொன்மை யுடையார் தொடர்பு." (நாலடியார்)

**குணத்தால் மூவகை நட்பு.**

இன்னும், சிநேக வர்க்கத்தின் குணத் தன்மைக்கேற்றவாறு நன்னட்பு, தீ நட்பு, கூடா நட்பு என நட்பு மூன்று வகையாகப் பிரித்து ஆராயப்படும். நட்பு எனினும் நன் னட்பு எனினு மொக்கும். கல்வி கேள்விகளிற் சிறந்தவரும், ஒழுக்க வழக்கங்களி லுயர்ந்தவரும், நற்குண நற்செய்கைகள் வாய்ந்தவருமான நல்லோருடன் நேசிப்பதே நன்னட்பு (நல்லினஞ் சேர்தல்) எனப்படும். இத்தகைய நட்பே கொள்ளத்தக்கதாம். நன்மை தீமை பாராது அகப்பட்டவை பலவற்றையும் எரித்தழிக்கும் இயல்பினதாகிய நெருப்பைப் போல தம்மை நெருங்கியவரைத் தம் தீய குணத்தாற் கெடுத்துவிடுந் தன்மையரோடு கொள்ளும் கூட்டுறவையே தீ நட்பு என்பர். கூடா நட்பாவது, உள்ளே மனத்தால் கூடாதிருந்தும் (சிநேகமின்றி விரோதங் கொண்டிருந்தும்) வெளியே சொற் செயல்களால் நண்பர் போல நடித்து நம்மைக் கெடுக்கச் சமயம் பார்த்திருப்போரது மனப்பொருத்தமில்லாத சிநேகமாகும். இனத்தோடு இனம் என்பதன்றி, குடிப்பிறப்பாலும் குணத்தாலும், ஒழுக்கத்தாலும், மனத்தாலும், அறிவுடைமையாலும் பிறவாற்றாலுந் தமது நெஞ்சுக்குப் பொருந்தாதவரது நேசம் எனினும் பொருந்தும்.

* All Rights Reserved to the Author.



இனி, பொறுக்கப்படாத குற்ற முடைமையின் தீ நட்பும் கூடா நட்பும் கொள்ளத் தகாது விடற்பாலனவேயாம்.

> "நவிறொறு நூனயம் போலும் பயிறொறும்
> பண்புடை யாளர் தொடர்பு"

**நன்னட்பின் நன்மையும் தீ நட்பின் தீமையும்.**

என்றபடி கல்வி கற்கக் கற்க இன்பங் கொடுப்பதுபோல் நற்குண நல்லொழுக்கமுடையார் நட்பு ஒரு காலைக் கொருகால் மிகுந்து பழகப் பழகப் புதிய இன்பம் புகுத்தும். 'சர்ச்சனருறவு சர்க்கரைப் பாகு' என்பது அனுபவ மொழியல்லவா? இதற்கு மாறாகத் தீயார் தொடர்போ தீராத் துயரையே தரும்; மலர்ந்த தினம் மாத்திரமே மணமுடைய மலரைப்போல் தீயினத்தார் நட்பு தொடக்கத்திலே இன்பந்தருவதாகத் தோற்றினும் முடிவில் தீங்கைத்தான் விளைவிக்கும்.

> "கற்றறியார் செய்யுங் கடுநட்புந் தாங்கூடி
> யுற்றுழியுந் தீமை நிகழ்வுள்ளதே—"

என்றார் ஔவையாரும்.

**நட்பு தீநட்பு இவற்றின் வளர்ச்சி.**

நல்லினத்தார் நட்பு நாளுக்கு நாள் வளர்ந்து நிலை பெற்று நிற்கும்; துர்க்குணத்தையுடைய தீயினத்தார் நட்பு தினந்தினங் குறைந்து கொண்டே வந்து பகைமையில் முடியும். வளர்பிறைச் சந்திரன், ஆரம்பத்தில் மிகச் சிறியதோர் பாகமாயிருந்து, நாள் ஆக ஆக வளர்ந்து கொண்டே வந்து முடிவில் பௌர்ணமியன்று பூரண வுருவமைந்து பிரகாசித்தல் போல, நல்லோர் நட்பு நாளுக்கு நாள் விருத்தியாகிக் கொண்டே வந்து, உண்மை நட்பின் சகல இலக்கணங்களும் நன்கு அமையப் பெற்றுப் பெரும்புகழோடு நிலை பெற்று விளங்கும். தேய்பிறைச் சந்திரன் முதலில் முழு வுருவோடு பெரியதாக விருந்து நாள் ஆக ஆகக் குறுகிக் குறுகிக் கடைசியில் அமாவாசையன்று அடியோடு மறைதலேபோல், தீயோர் சிநேகம் தொடக்கத்தில் அதிகமாகத் தோன்றிப் பிறகு நாளாக ஆகக் குறைந்து கொண்டே வந்து இருண்ட பகைமையில் முடியும். இதையே,

> "நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
> பின்னீர பேதையார் நட்பு"

என்று வள்ளுவனார் விளக்கினார். ஔவையாரும்,

> "நல்லார் செயுங் கேண்மை நாடோறு நன்றாகு
> மல்லார் செயுங் கேண்மை யாகாதே—"

என்றார்.

**நட்பு தீநட்பு இவற்றின் பயன்**

சிர்ச்சனர் சேர்க்கை சதா சந்தோஷமே தந்து ஆரம்பத்திலிருந்து நாளுக்கு நாள் இன்பம் அதிமாகும்படி செய்கிறது. ஆனால் கெட்டவர்கூட்டுறவோ தொடங்குங்கால் இன்பங் கொடுப்பதுபோல் தோன்றி நாள்செல்லச் செல்ல குறைந்து கொண்டே வந்து கடைசியிற் றுன்பம் பயக்கும். "நல்லிணக்கமல்ல தல்லற்படுத்தும்" என்ற உறுதியுரையும் பொய்க்குமோ? பொய்க்காதாதலின்,

"நுண்ணுணர்வி னொடுகூடி நுகர்வுடைமை
விண்ணுலகே யொக்கும் விழைவிற்றால்—நுண்ணூல்
உணர்வில ராகிய ஊதிய மில்லார்ப்
புணர்தல் நிரயத்து ளொன்று"

என்பது இனிது புலப்படுகின்ற தல்லவா? இங்கு,

"நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தி
னல்லற் படுப்பது மில்"

என்ற அருமைத் திருவாக்கையும் உய்த்துணரத் தக்கது.

(தொடரும்) லக்ஷ்மீ வேங்கடரமணன்.

---

வேலைப்பாடு எவ்வளவு சிறப்பா யிருந்தாலும் கால தாமசத்தைப் பற்றி ஒருதரம் ஒரு வேலையாளிடம் சென்றவன், மறுபடியும் அவனிடத்திற்குப் போகப் பயப்படுகிறான். கால தாமசத்தினால் பிறருக்கு உபத்திரவத்தை யுண்டாக்குகிறார்கள்; அவநம்பிக்கைக்குப் பாத்திரராயு மாகிறார்கள். நாளைக்கு ஆகட்டும், நாளைக்கு ஆகட்டுமென்று சும்மா யிழுக்கடிக்கிறவனிடத்தில்,—அவன் எவ்வளவு உத்தமனா யிருந்தாலும், நம்பிக்கைத் தோற்றம் உண்டுபண்ண இரும்புப் பெட்டியை வைத்திருந்தாலும்,—அவனிடத்தில் அவநம்பிக்கை எவ்விதமும் தோன்றிவிடும்.

---

மனுஷருடைய ஆசைப் பெருக்கத்திற்கு முக்கிய விஷயம் ஒன்றல்ல: பல உள. அவற்றுளெல்லாம் கல்வியே சிரேஷ்டம்; கல்விக்கு ஒப்பு உயர்வு இல்லை. எதுவும் தனக்குச் சரியாக நிற்கச் சகியாது, தன் சிலாக்யத்தை நெருக்கிக் கேட்டு வாங்குவது. அது தன் ஸிம்ஹாஸனத் தண்டை எதிரியை அணுகவொட்டாது. செல்வப் பொருளுக்கு வரு வழியாகக் கல்விப் பொருளைப் பாராட்டுகிறவர்கள், செல்வப் பொருளானது கல்விப் பொருளால் விளையும் இன்பத்திற்கு ஈடாகமாட்டா தென்பதை உணராதிரார். விவேகம், மனவலி, அடக்கம், தீவிரபுத்தி, வாக்கலங்காரம், கருவி கரணவிர்த்தி, மேலான விஷயங்களில் வாஞ்சை முதலிய லௌகீக சித்திக்கு முக்கிய உபாயமனைத்தும் கல்வியால் வருவன. ஆனால், கல்வியில் சிரத்தையும், ஊக்கமும், விசுவாசமுமின்றி அதைச் செல்வ முதலிய எந்தப் பேறுக்காவது துணைக்காரணமாய் அநுசரிப்பவர்களுக்கு மேற்குறித்த லௌகீக சித்தி உபாயங்கள் பூர்த்தியாய் உண்டாகா.

---

கல்யாண காலத்தில் வதுவும் வரனும் ஒன்றாய் உட்காருகின்றனர். இவ் வழக்கம் விவாகத்துடன் முடிவடைகிறது. அடுத்ததினம் முதல் இருவரும் பிறர் முன்னிலையில் ஒன்றாய் உட்காருவதில்லை. கணவன் உண்ட பின்பு ஸ்திரீ உண்ணவேண்டுமென்ற விதியும் அனுஷ்டிக்கப்படுகிறது. இதற்குக் காரணம் எவ்வளவு அந்யோன்னியம் முற்றினாலும் உலகத்தார் முன்பு பரஸ்பரம் மரியாதைக் கிரமங்களைத் தழுவி நிற்கவேண்டுமென்பதே.

---

# சிறுமையும் பெருமையும்

"பழகப் பழகப் பாலும் புளிக்கும்" என்பது ஒரு பழமொழி. பால் புளிக்கும் தன்மையுடையதல்ல. அதை யருந்தும் மனமே அது புளிப்பது போல் தோன்றுவதற்குக் காரணம். எப்போதும் ஸமீபத்திலுள்ள வஸ்துக்களின் அருமை தெரிகிறதில்லை. ஒரு தடாகத்தில் புஷ்பித்திருக்கும் தாமரையிலுள்ள தேனை அதில் வாழும் தவளை மீன் முதலிய ஜெந்துக்கள் உண்கிறதில்லை. வெகு தூரத்திலிருந்து வரும் வண்டு அதை அநுபவிக்கிறது. உலகத்தில் ஆச்சரியகரமான வஸ்துக்கள் அநேகம் இருக்கின்றன. அவைகளை நாம் தினந்தோறும் பார்ப்பதால் அருமையை யறியாது சும்மா விருக்கிறோம். நமது குமாரத்தியின் லாவண்யராசிகள் அப்புத்திரிகாரத்நம் விவாகமின்றி நம் வீட்டிலேயே இருந்த போது நமக்குப் புலப்பட வில்லை. திருமணம் நிறைவேறி கணவனின் அகத்திற்குச் சென்று, சிலகாலங் கழிந்து நமது வீட்டிற்கு நமது தனயைதிரும்பிவருகையில்ஸாக்ஷாத் லக்ஷ்மியைப்போலவே அக்கன்னிகாரத்நம் ஜ்வலிப்பதைப்பார்த்து நமது சுகுமாரி இத்துணை சௌந்தர்யவதியாவென்று பிரமிக்கின்றோம். அவளை விட்டுப்பிரிய மனமின்றி ஸதாகாலமும் அவள் பக்கத்திலேயே யிருக்க விரும்பி ஆவல் அதிகமாகிறோம்.

நம்மில் எத்தனைபேர் ஆகாசத்தைப் பார்க்கிறோம்; மிகச் சிலரன்றோ? ஒரு குழந்தை அன்னியர்களின் முகத்தை எறிட்டுப் பார்க்கிறது. தன் தாயின் முகத்தை அப்படிப் பார்ப்பதில்லை. மின்ஸார வண்டியைப் பார்ப்பதற்காக ஆதியில் எத்தனை பேர்கள் ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தனர்? ஒரு அணு நிக்கல் நாணயத்தைக் காண விருப்புற்று அலைந்தவர்கள் அநேகர். இப்போதோ கவனிப்பார் இல்லை. ஆகிலும் அம்மின்ஸார வண்டியிலுள்ள விசேஷம் குறைந்து விடுமா? ஒரு அணு நிக்கல் நாணயம் செலாவணிக்கு எவ்வளவோ சுலபமாயிருப்பதின் விசேஷத்தை அது இப்போது இழந்து போகுமா?

நல்லதானாலும்கெட்டதானாலும் புதுமையில் ஜனங்களுக்கு ஒரு வித விசுவாஸம் உண்டாகிறது. பழகிப் போனால் ஆச்சரியம் அடங்குகிறது. அருமை யொடுங்குகிறது. அருகிலுள்ள பொருள்களின் அருமையை யறிய முடியாமல் கெடுத்து விடுவது ஸகவாஸம் அல்லது பழக்கமென்னும் கெட்ட விரோதியே. எங்கும் பிரக்யாதி பெற்ற ஒரு பாடகனை அவன் வீட்டின் பக்கத்தில் விசாரித்தால் அவனுக்கு என்ன தெரியும் என்று அலக்ஷியமாய்ப் பழிப்போர்களே அதிகம் இருப்பார்கள். நீ மகா பிரஸித்த புருஷன் என்று உன் மேல் ஆரம்பத்தில் அதிக மதிப்பு வைத்தேன்; பிறகு உன்னுடன் பழகியதில் நீ சாமான்யன் என்று தெரிந்துவிட்டது; ஆகவே, ஆரம்பத்தில் உன்னிடம் வைத்த மதிப்பு இப்போது இல்லை என்று சிலர் பேசுவர். இவர்கள் மதிப்பு வைக்காததனாலேயே அந்தப் பிரஸித்த புருஷனின் மதிப்பு தாழ்ந்துவிடப் போவதில்லை. அவரவர்களின் அல்ப-உயரியகுணபாவங்களுக்கேற்ப எண்ணங்கள் உதிக்கின்றன. சிறுமையும் பெருமையும் மனிதர்கள் பாராட்டுந் தன்மையால் உண்டாகின்றன.

இனி இச் சிறுமையையும் பெருமையையும் மற்றொரு விதமாய் ஆராய்வோம். மனுஷ்யனைப்பற்றி நாம் என்ன அறிந்து கொண்டோம்? மனுஷ்யன் பிறக்கிறான்; இறக்கிறான்—ஏன்? ஒருவன் போர்வீரன், ஒருவன் யோக்கியன், ஒருவன் அயோக்கியனென்று பற்பல விதமாய் இருப்பானேன்? மனிதன் ஓர் அற்பப் பிராணி. அவன் உலகத்தையும் அறியவில்லை. தன்னையும் அறியவில்லை. மனிதனுடைய ஐம்புலன்கள் அவனுடைய தேகத்திலும் சிறந்தவை. அவ்வைம்புலன்களை விடப் புத்தி பெரியது. புத்தியானது மனதிலும் சிறந்தது. ஆத்மாவானது எல்லாவற்றையும் விட உயர்ந்தது. எல்லாப் பிராணிகளையும் விட மனிதன் சிரேஷ்டமானவனென்கிறோம். அவனுடைய தேகத்தை மட்டும் எடுத்துக் கொள்ளும் பக்ஷத்தில் அவன் ஒருபோதும் சிறந்தவனல்லன். ஹக்ஸ்லே யென்னும் தேக தத்துவ சாஸ்திரி குதிரைதான் நல்ல காத்திரமான சரீரத்துடன் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறதென்று அபிப்பிராயப்படுகிறார். அரசனாய்ப் பிறந்தவனை விட ஆண் சிங்கத்தின் முகம் கம்பீரமாயிருக்கும். தென்னிந்தியாவிற்பிறந்த நல்ல காளையின் நடை போர்வீரன் நடையைத் தோற்கடிக்கும். கிளியின் மிருதுவான மேனியைப் போல் தமயந்திக்கும் வராது. பந்தத்திற் கட்டுண்டிருக்கும் மனுஷ்யனைவிட ஆகாயத்தில் பறக்கும் வானம்பாடி நிர்விசாரமாயும் சுயாதீனமாயுமிருக்கிறது. படத்தை விரித்தாடும் நாகமும், ஆகாசத்திற் பறக்கும் கருடனும், மனுஷ்யர்களைவிட தெய்வத் தன்மையுள்ளவை. ஆதலின் மேற்கூறிய பிராணிகளைவிட மனுஷ்யன் கேவலமாகவே சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறானென்று ஏற்படுகிறது.

இத்துணைச்சிறுமையும்கேவலமுமான மனுஷ்யன் பின் எவ்வாறு உயர்வு பெற்றவனாகிறான்? பகுத்தறிவாலும் ஆத்ம ஞானத்தாலுமே. அதுவே மனிதனைச் சிறுமையிலிருந்தும் பெருமைக்குக் கொண்டு செல்கின்றது.

மூன்றாவதாகச் சொல்லப் புகில், "பெருமையும் சிறுமையும் தான் தர வருமே" என்பதற்கிணங்க, தான் மற்றவர்களிடம் நடந்து கொள்வதை யொத்துச் சிறுமையும் பெருமையும் பொருந்துகின்றது. இனி, நெருங்கி நிற்பதில் சிறுமையும், தூரத்திலிருந்து பழகுவதில் பெருமையும் ஏற்படுமென்பர். அக்கருத்தும் ஒருவாறு ஏற்கத் தகுந்ததே.

---

இக்காலத்தில் நியாய ஸ்தலங்களில் வழக்குகள் அதிகப்படுகின்றன. நியாயாதிபதிகட்கு ஓய்வு ஒழிச்சலிராது. வக்கீல்களுக்குமட்டுமே கேஸுகளின் பெருக்கத்தால் பணம் அதிகம் கிடைக்கும். தெய்வமே என்று சும்மாயிருந்தாலும் கெட்டகாலம் சும்மா யிருப்பதில்லை. எப்படியோ ஒரு வியவகாரம் பிறக்கிறது, ஹோ—ஹோ என்று ஸப்தம் எழுகின்றது. வக்கீல் வீட்டுக்குக் கால்கள் ஓடுகின்றன. என் சொத்தெல்லாம் போனாலும் சரி, அவனை விடுவேனா என்று மீசையை முறுக்குகிறான். உடன் வழக்கு தொடங்கிவிடுகிறது, அது முடிவுபெறுவதோ அந்த நாள் ஆண்டவன்தான் அறிவார்.

---

# பழமொழி குறிப்புகள்

## 1. அன்பு.

(347-ம் பக்கத் தொடர்ச்சி.)

### 21. ஒருவனாய்ப் பிறப்பது பிறப்பாமா, ஒன்றிமரம் தோப்பாமா?

இது அன்பாற் பொங்கியதோர் பழமொழி. ஒன்றியாயுள்ளவன் ஸகோதர பாசத்தினை யாங்ஙனம் கண்டறிவான்? அவனுக்கு அதைப்பற்றி என்ன தெரியும்? அண்ணன் தம்பியாக ஒருவனைக் கண்டால் நமக்கு அப்படி ஒரு அண்ணன் தம்பி இல்லாமற் போயிற்றே என்று ஏங்குதலானது அங்கு ஸகோதரத்துவத்தினிடத்திலே அன்பை உணர்த்துகிற ஸந்தர்ப்பமாகும். தனக்குத் தங்கை தமக்கை இல்லாமற் போனதற்குப் பரிதபிப்போர் எத்தனையோ பேர். மேலும் பெற்றோர்களுக்கும் கூட ஒரு குழந்தையில் திருப்தி உதிப்பதில்லை. என்ன—ஒரே குழந்தைதானா என்று கேட்கப்படுகையில்—"ஆம்"—என்று சலிப்புடன் விடை கிடைக்கின்றது. பின்னும் காலத்தின் பொல்லாப்பினால் அந்த ஒருவனுக்குக்கூட மரணபாணம் நேர்ந்து விட்டால் பெற்றோரின் மனத்துயரத்துக்கு எல்லை யுண்டோ? எத்தனை குடும்பங்கள் ஏக புத்திரனாயிருந்த ஒருவன் தவறி, பின்னுக்குப் பெயர்சொல்வோரின்றி நிர்மூலமாயின? ஆதலின் இருவராயிருந்தால் ஒன்று போனால் ஒன்றினிடத்தாவது ஆசை வைத்து வாழ்நாளை ஏதோ ஒரு விதத்தில் கழிக்கலாம். ஒன்றே யொன்று அருமையாக இருந்து அதுவும் கை தவறி விட்டால், ஐயோ! அந்த அங்கலாய்ப்பை எங்கு போய்ச் சொல்லிக் கொள்ள? ஆகவே, ஒரு மரம் எவ்விதம் தோப்பாகி விடாதோ அதுபோல ஒரு பிள்ளையும் பிள்ளையாகப் பெயர் அமையாது என்பது இதன் பொருள். மேலும் வீட்டில் இருவராக இருந்தால் ஒருவருக்கொருவர் விளையாடி மகிழ, சிறு சண்டைகள் போட்டுக் கொள்ள, பெற்றோர் வந்து அதைச் சமாதானம் செய்ய, ஒரு பக்ஷணத்தை இருவருக்கும் பங்கிடுகையில் எனக்கு உனக்கு என்று குதிக்க, அதை யெல்லாம் இருவருக்கும் திருப்தியாய் முடிக்க—இப்படி யெல்லாம் பார்த்துப் பார்த்துக் குதூகலப்பட முடிகிற—புத்திர பாசத்தின்—ருசிகரத்தை ஏகபுத்திர வகையில் பெற்றுக் கொள்வதென்றால், அது ஒரு கண் பார்வையாற் காண்பதற்கும், ஒரு செவியாற் கேட்பதற்கும் தான் சமானமாகுமென்று சொல்லலாம்.

### 22. சத்தியத்துக்கு இல்லாத பிள்ளை துக்கப்பட்டபோது அழப் போகிறதா?

இங்கு சத்தியம் என்பது உண்மையான அன்புக்கும், அந்தரங்கமான விசுவாசத்துக்கும் குறிப்பாகச் சொல்லப்படுவதாகும். அன்பு—விஸ்வாசம் என்பவை ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்ட சொற்களாகும். நம்மீது உண்மையான அன்பும் விஸ்வாசமும் வைக்காத பிள்ளையைப் பெற்றதினால் உண்டான துக்கம் சுலபத்தில் ஆறாது. நமக்காக இரக்கப்பட்டு உருகாத—கண்

ணீர் விடாத உள்ளமுடைய ஒருவனை நமது பிள்ளை யென்று சொல்லிக் கொள்ள வேண்டியிருப்பதும் நம் தலை விதிதான். இவ்விதமே ஸகோதர வர்க்கத்துக்குள் ஒருவருக்கொருவர் உருகி அன்பு பூத்து நிற்காமற் போனால் அப்போதும் இந்தப பழமொழி ஒரு எடுத்துக்காட்டுதலாகச் சொல்லப்படும். உள்ளத்தில் அன்பும் விஸ்வாசமும் இல்லையாகில் ஒரு துளி கண்ணீர் கூட வெளித் தோன்றமாட்டா.

## 23. தங்கச்சி பிள்ளை தன் பிள்ளையானால் தவத்திற்குப் போவானேன் ?

இது அன்பின் தத்துவத்தை வெகு அழகும் தெளிவுமாக விளக்கிக் காட்டும் பழமொழி. குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்கள் தங்கள் ஸகோதர வகையிலிருந்தும், நெருங்கிய பந்துக்கள் வகையிலிருந்தும் குழந்தையைப் பெற்று வளர்த்து ஆசை தீர்த்துக் கொள்வது சகஜம். இப்படி இவர்கள் அந்தக் குழந்தையின்மீது என்ன பற்றுதல் கொண்டாலும், அந்தக் குழந்தைக்குத் தன்னை ஈன்ற பெற்றோர்களிடத்துள்ள அன்பைத் தன்னை எடுத்து வளர்த்தவர்களிடம் காண்பித்துக் கொள்ள முடிவதில்லை. அது எப்படித்தான் முடியும்? வேறு—வேறுதானே. இதே மாதிரியாக, இவர்கள் ஆசைக்குக் குழந்தையை எடுத்து வளர்த்தாலும், தங்களுக்கென்று சொந்தக் கனியாய் தங்கள் வயிற்றினிடமாக ஒரு மகவு பிறக்க வேண்டு மென்று காசி ராமேஸ்வர யாத்திரைகள் போய் வேண்டிக் கொள்வார்கள். எனவே, எடுத்து வளர்க்கிற குழந்தை எடுத்து வளர்க்கும் குழந்தைதான். அதனிடத்துத் தன் வயிற்றில் பிறந்த குழந்தை யினிடத்துக் காட்டும் பிரியத்தைப் போல் ஒரு போதும் காட்ட முடியாது. தன் மக்களிடத்து உதிக்கும் இயற்கையான வாஞ்சை—அபிமானம் வேறிடத்தில் வருவது முடியா தென்பதை இப்பழமொழி விளக்குகிறது.

## 24. தாய் முகம் காணாத பிள்ளையும், மழை முகம் காணாத பயிரும் போல.

எவ்வளவு ஜலத்தைப் பயிருக்கு இறைத்தாலும் ஒரு துளி மழைக்கு அது ஈடாகாது. எத்தனை பேர் இருந்து அன்பு காண்பித்தாலும், பெற்ற தகப்பனே கூட இருந்து தாங்கினாலும், அந்த ஈன்ற அன்னையின் முகம் காண்பதில் உண்டாகிற ஒரு பரவசம் இவ்வுலகிலேயே காண இயலாது. அன்னையின் முகத்திலும் அழகுடையதாக ஒரு வதனம் உலகிலேயே ஈசன் படைக்க வில்லை. அன்னையின் வாக்கினுடைய ஒலிக்குமிஞ்சிய சங்கீதமும் உலகில் வேறு கிடையா. அந்த இனிய ஒலிக்கு எதுவும் ஸமானமாகா. அன்னை ஊட்டும் புளித்த பழய சோற்றுக்கு உள்ள மகத்துவம்—புஷ்டி எவ்வளவு உயர்தரமான ஆகாரத்துக்கும் வராது. அன்னையின் தனங்களில் பால் வற்றி இல்லாமற் போயினும் வெறுமனே வாய் வைத்து உறிஞ்சியபடி பக்கத்தில் படுத்துக் கிடப்பதிலுள்ள மகத்துவம்—ருசிகரம்—எதிலும் அமையாதென்று குழந்தை தன் பவள வாயைத் திறந்து சொல்லுகிறது. தாயினிடத்துக் குழந்தைகள் எவ்வளவு பிரியம் கொண்டிருக்கின்றன என்பதை உலகமே அறியும். உண்மையான அன்பின் ஊற்று உலகிலேயே தாயினிடமிருந்து தான் தொடங்குகின்றது. தாயின் அன்புக்குப் பிறகு தான் மற்ற உலகத்தின் அன்பு. தாய் முகம் காணாத பிள்ளை எவ்வளவு அழுகின்



றது? என்ன தந்தபோதிலும் அதற்குத் திருப்தியில்லை. அதற்கு வேண்டியது அதன் தாய்தான். மற்ற எதுவும் அதற்குத் தேவையில்லை. அந்த நிமிஷத்தில் வெளியில் சென்றிருந்த தாயார் வீட்டிற்குள் வந்து விட்டால் உடனே குழந்தையின் ஆநந்தம், ஆகா! சொல்லக் கேட்பானேன்!

## 25. ஒரு தாயற்ற பிள்ளைக்கு ஊரேல்லாம் தாய்.

தந்தை யற்ற பிள்ளை என்பது அத்தனை பரிதாபச் சொல்லாகப் பாராட்டப் படவில்லை. "தாயற்ற பிள்ளை" என்பதே கண்ணீருடனும் உருகிப் பரிதாபப்பட வைக்கிறது. எவ்வளவு குற்றமும் தாயற்ற பிள்ளை என்பதில் மறைந்து போகிறது.—மன்னித்தும் விடுகிறார்கள். தாயற்ற—என்று சொல்லி விசேஷித்த அன்பு காண்பித்து உலகத்தார் முற்றிலும் அக்குழந்தைக்கு அன்னையாயிருந்து ஆதரிக்கவும் முன் வருகிறார்கள். இதுவும் இரங்கியுருகும் அன்பின் பெருக்கத்தைக் குறிப்பிக்கும் ஒரு பழமொழியேயாம்.

பின்னும் இதற்கு மற்றோர் பொருளும் கொள்ளலாம். ஒருவனுக்கு அவன் தாயற்றவனாகில் ஊராரெல்லாம் தாயாராக இருந்து உதவுவாரெனில் அதற்கேற்றபடி அவனும் நல்ல பிள்ளையாய்க் குணத்தில் உயர்ந்து நிற்க வேண்டாமா? நற்குணமுள்ள பிள்ளைக்கு எங்கு போனாலும் தாய் போன்ற உபசரிப்பு கிடைக்கும் என்று மற்றோர் கருத்தும் காட்டலாம், நற்குணம் பிரதானம் என்றும் விவரிக்கலாம்.

## 26. பெண்ஜாதி கால்கட்டு, பிள்ளை வாய்க்கட்டு.

விவாகத்திற்கு முன்பு ஒருவன் தன் உலகத்தின் அன்பை எங்கும் வைக்க இடமில்லாததால் தன் மனம் போன போக்காய் எங்கும் போய்ச் சுற்றி வரலாம். வீட்டின் நினைப்பே தேவையில்லை. ஸம்சார பாரமும் இல்லை. விவாகமான பின்போ இந்த சுகம் போய் விடுகின்றது. பெண்சாதி கால் விலங்கு போல் ஆகி விடுகிறாள். எந்த இடத்துக்கும் செல்ல முடிகிறதில்லை. அவளைப்பிரியவோ மனம் வெகு வாதனைப்படுகிறது. அன்பெல்லாம், அன்பின் நினைப்பெல்லாம் அவள் மீதேதான். ஆகவே, வெளியிற் போவதாகில் தன் மனைவி வாடாமல் வதங்காமல் இருக்க எல்லா சாமான்களும் வாங்கித் தந்து செலவுக்கும் கொடுத்து விட்டுப் புறப்பட வேண்டியிருக்கிறது. இவ்வளவு பிடிப்பும் பற்றுதலும் அன்பின் காரணமாக உண்டானதேயன்றிப் பிறர் கட்டாயத்துக்காவது, மனைவிக்குப் பயந்தாவது அல்ல.

இனி பிள்ளை வாய்க் கட்டு—என்பது குழந்தை பிறப்பதற்கு முன் எல்லாம் தின்று பார்த்து ஆசை தீர்த்துக் கொள் என்பதாம். ஏனெனில் குழந்தை பிறந்து விட்டால் அதற்குக் கொடுக்கும்படி மனம் போகுமே தவிர தான் தின்னுவதற்கு மனம் ஒப்பாது. அப்படி யுண்ணப் புகினும் குழந்தைகள் எனக்கு உனக்கு என்று கேட்க வரும். எனவே பிள்ளை பிறப்பதற்கு முன் தின்று பார்—மருமகன் வருவதற்கு முன் கட்டிப்பார் என்பது போல, குழந்தை பிறப்பதற்கு முன் யாவும் ருசித்துப் பார்த்து விடு என்பது இதன் பொருள். ஆனால், குழந்தைகள் தாயைப் புசிக்க வேண்டா மென்கின்றனவா? தாயின் மனம் உண்ணவாராத—ஒப்பாத ஒரு அன்பின் தன்மையையே இங்கு இப்பழமொழி குறிப்பிடுவதாகும்.

# கார்த்திகை தீபம்

## —அதன் வரலாறு.—

ஸ்ரீ கைலாயத்திலே உலக மாதாவாகிய பார்வதியாரோடு சிவபெருமான் எழுந்தருளி யிருக்கும் தருணத்தில், அத்திருக்கோயிலின் கண் ஏற்றி யிருந்த நெய்தீபங்களில் ஒரு தீபம் அணைந்து போகும் தருணத்தில் அதில் இருந்த நெய்யை உண்ணும்படியாகச் சென்ற ஓர் எலியானது அவ்விளக்கில் இருந்த நெய்யை உண்ணும்படி முகர்ந்தபொழுது, அவ்வெலியின் முகமானது அணைந்துபோகப் போகிற வத்தியைத் தூண்டிய மாத்திரத்தில் பிரகாசம் ஜொலித்ததனால் சிவபெருமானானவர் கிருபை கூர்ந்து அவ்வெலிக்கு மானிட சரீரமும், அரசும், மேன்மையான வரமும் தந்து பூலோகத்திலே பிறக்கும்படி அனுக்கிரகித்தார். அவ்வெலியானது கைலாச பதியின் கடாக்ஷத்தினாலே அரசனாகப் பிறந்து ஸகல ஐசுவரியத்தையும் அனுபவித்து வந்தது. இது திருவிளக்கைத் தூண்டி விட்டதின் பலனாகும்.

***

மாபலிச் சக்ரவர்த்தி ஒரு நாள் சிவதரிசனம் செய்யப்போய் ஆலயப் பிரதட்சணம் செய்து வருகையில், அவ்விடத்தி லிருந்த நெய் விளக்கின் ஒரு திவலை இவர் மீது படவும் தேகாதி யந்தமும் கொடிய ரணமாகிக் கஷ்டம் அனுபவித்து வந்தார். ஒரு நாள் சிவபெருமான் மனமிரங்கி, சக்ரவர்த்தியே! நீ மிகவும் கர்வம் கொண்ட பான்மையால் இத்துன்பம் படுமாறு நேர்ந்தது. ஆனதுபற்றி நீ இன்று முதல் நூறு பாரம் நெய் முதலிய பொருள்களினால் சிவாலயங்களுக்குத் தீபம் ஏற்றுவையாகில் ரணங்கள் யாவும் ஆறி ஸ்வஸ்தம் பெறுவதன்றி சாம்ராஜ்யமும் அடைவாய் என்று அசரீரி வசனம் மொழிந்தருளினர். இது கேட்டு மாபலிச்சக்ரவர்த்தி பிர்மானந்தங் கொண்டு, ஈச்வர ஆக்ஞையின் பிரகாரம் நெய்தீபமேற்றி வருகையில் பரமேச்வரர் கார்த்திகை மாதம் பூர்வ பக்ஷம், கார்த்திகை நக்ஷத்திரத்தில் அகண்ட பரிபூரண திவ்ய தேஜோமய சின்மயானந்தராய்த் தரிசனந் தந்து சாயுச்சிய பதவி யளித்தனர். ஆலயத்தில் சேவை செய்ய வந்திருந்த தேவர்களெல்லாம் பரமேச்வரரது ஜோதிப் பிரபையைக் கண்டு பயந்து துதி புரிந்து, ஸ்வாமியின் கோபாக்கினி தணியுமாறு பொரி, அவல், நிவேதனம் பண்ணினார்கள். இவ்வாறு மாபலிச் சக்ரவர்த்திக்குக் காட்சி கொடுத்ததற்காகச் சிவாலயங்களில் கார்த்திகை மாதம் பூர்வ பக்ஷம், கார்த்திகை நக்ஷத்திரத்தில் தீபம் வைக்கவும், சுட்கப்பனை கட்டவும், (சொக்கப்பானை) ஆகமங்களில் சொல்லி யிருக்கிறது. மலையைச் சார்ந்த ஸ்தலங்களில் நக்ஷத்திரம் முக்கியமாகவும், ஸமுத்திரம் சார்ந்த ஸ்தலங்களில் பௌர்ணமி பிரதானமாகவும் தீபம் வைப்பது ஆகமத் துணிபு.

***

கார்த்திகை நக்ஷத்திரத்துக்கு முன்னாள் பரணி நக்ஷத்திரம் சாயுங்காலை அதிவாச தீபத்தில் அக்கினி காரிய முதலியவைகளின் மூலமாய்



மகாலிங்க மூர்த்தியை ஆவகனம் செய்து அந்தத் தீபத்தை ஸ்வாமி ஸந்நிதானத்திற்றானே பூசித்து வைக்க வேண்டும். மற்றைய நாள் சாயுங்கால அர்த்த சூர்ய மண்டலத்தில் தென்னை மரம், பனைமரம், பாக்குமரம், வாழை மரம், மூங்கில் என்னும் இவ்வித மரங்களில் ஒருவித மரத்தை ஆலயத்திற்கும் இந்திர திக்குக்கும் மத்திய ஸ்தாபனமாகிய பிரம ஸ்தானத்தில் நிலை நாட்ட வேண்டும். இந்த மரத்திற்கு தீபதண்டம் என்று பெயராம். இந்தத் தீப தண்டத்தின் உன்னதப் பிரமாணம், ஸ்வாமி கர்ப்பக் கிருகத்து விமானம் எவ்வளவு உயரமோ அவ்வளவு உயரமாவது, அவ்விமானக் கழுத்தின் அளவாவது இருக்க வேண்டும். இவ்விதமான தீபதண்டத்துடன் உலர்ந்த தென்னை, பனை, பாக்கோலையாவது, வாழை, தாழன், அசோகச் சருகாவது விமானம் போல் அமைக்கப்படவேண்டும். அதன்பின் மேற்சொன்ன பரணி நக்ஷத்திர மறுநாளாகிய கார்த்திகை நக்ஷத்திரத்தில் பஞ்சமூர்த்த சமேதராய்ச் சோமாஸ்கந்த மூர்த்தியை உத்ஸவாலங்காரத்துடன் எழுந்தருளப் பண்ணி, மேற்படி தீபம் ஸ்வாமிக்கு முன்னே நடத்தும்படியாகச் செய்து, தீபதண்டத்தைச் சமஸ்காரப்படுத்திக்கொண்டு, அத்தீபத்தை அந்தத் தண்டத்தின் மேல் வைத்துச் சருகுகளைக் கொளுத்திவிட்டு, அந்தச் சருகுகள் எரிந்த பின்பு, மேற்படி தண்டகத்தைச் சேதித்துவிட வேண்டும். அந்தச் சோதியைச் சிவபெருமானாகப் பாவனை செய்து தரிசிப்பவர்களுக்கு இம்மையில் செல்வமும், மறுமையில் மோக்ஷமும் கிடைக்குமென்று சுருதிகளிற் கூறப்படுகின்றது.

தண்ட வுன்னதப் பிரமாணம்:—உத்தமம் உயர்வு, மத்திமம் அதன் கழுத்தளவு.

தண்ட விதி:—உத்தமம் தென்னமரம், மத்திமம் பனைமரம், அதமம் பாக்குமரம், அதமாதமம் வாழையும் மூங்கிலுமாம்.

---

இந்தியாவில் சுதேச மன்னர்களால் ஆளப்படும் ஸமஸ்தானங்கள் சுமார் 700-வரை இருக்கின்றனவாம். இவற்றில் 7-கோடி ஜனங்கள் உளராம்.

வெந்நீரோடு தண்ணீரைக் கலந்து ஆறவைத்தல் சுகாதாரவிதிக்கு விரோதமாம். தனி வெந்நீர்கொண்டே எண்ணெய் ஸ்நானம் செய்ய வேண்டுமாம்.

சனீஸ்வரபகவான் ஒரு மகானிடம் வந்து "நீர் என்ன சாப்பிடுவீர்?" என்று வினவினதற்கு, மரணம் எனும் பானத்தையே நான் குடித்து இளைப்பாறுவேன் என்று அந்த மகான் பதில் சொன்னாராம். இத்தகையோரிடம் சனீஸ்வரனுக்கு வேலை ஏது.

கடவுள் நெடுந்தூரத்தில் இருக்கின்றார் என்று மனிதனுக்குத் தோன்றுகிறவரையில், அவன் அறியாமையில் அழுந்திக் கிடக்கிறான். ஆனால் தனக்குள்ளேயே மிக்க சமீபத்தில் அவர் இருக்கின்றார் என்னும் உண்மை மனிதனுக்குப் புலப்படும்போதுதான் அவன் உண்மை ஞானியாகிறான். உணர்ந்தவன் அறிவுகொள்ளலாம், அறிந்தவன் துணியலாம்.

# பத்திரிகா சாரம்

## பல்லாங் குழி :—

"பதினான்கு குழி" என்பது 'பன்னான்கு குழி' என்றாயிற்று. அதன் மரூஉ 'பன்னாங் குழி' என்பது. இதுவே தவறாகப் 'பல்லாங் குழி' எனப்படுகிறது. அது பள்ளமும் குழியும் நிறம்பியதாய் "பள்ளங் குழி" எனப்பட்டதென்றும், அது "பள்ளாங் குழி," "பல்லாங் குழி" என மருவிற்றென்றும் கூறினர் ஒருவர். இங்ஙனம் கருதுவோர் எத்தனை பெயருளரோ!

"நச்சினார்க்கினியன்"

## மஞ்சளின் உபயோகம் :—

"* * * நமது நாட்டு ஸ்திரீகள் ஸ்நானபானங்கள், வஸ்திரம் துவைத்தல், வீட்டையும் வீட்டுச் சாமான்களையும் தண்ணீர் கொண்டு சுத்தி செய்தல்; மாமன், மாமி, நாயகன், பிள்ளைகள் முதலியவரை நீராட்டல்; சமையல் செய்தல் முதலிய இன்னும் பல சந்தர்ப்பங்களில் தண்ணீரில் நடமாடுவது அவசியமாயிருப்பதால், அதனால் நேரக் கூடிய சீதளத்தை மஞ்சள் அடக்கிப் போதுமான உஷ்ணத்தை அளிக்கிறது. அவர்கள் சரீரத்தில் உண்டாகும் துர்நாற்றம் நீங்கி நறுமணம் வீசச் செய்கிறது. முகத்திலும் சரீரத்திலுமுள்ள மாசு மறுக்களை நீக்குகிறது. ..........................குழந்தைகளுக்குப் போதுமான பால் கிடைக்கச் செய்கிறது.............கருப்பையைச் சுத்தமாக்கிக் கருத்தரிக்கச் செய்கிறது. கருத்தரியாத ஸ்திரீகளுக்கும் இரண்டொரு பிரசவத்துக்குப் பிறகு கருக்குழி கெட்டு மறுபடி கருத் தரியாதிருக்கும் ஸ்திரீகளுக்கும் மஞ்சள் ஊதிக் கொடுக்கப்படுகிறதும், கருப்பதான காலங்களில் மடியில் மஞ்சள்கட்டப்படுவதும் திருஷ்டாந்தம். "மாலைப் பொழுதில் நறு மஞ்சளரைத்தே குளித்து வேலை மெனக்கிட்டு விழித்திருந்து சூலாகிப் பெற்றாள்" என்ற ஞானியாம் பட்டினத்தாரின் வாக்கும் சான்றாம். நெருப்பு முதலிய உஷ்ண சம்பந்தத்தால் சரீரத்திற்கு உண்டாகக்கூடிய கேட்டை நீக்குவதில் மஞ்சள் ஒப்புயர்வற்றதென்றே சொல்ல வேண்டும். நெருப்பு மிதிப்பவர்கள் நெருப்பில் இறங்குவதற்கு முன்னிட்டு விசேஷமாய் மஞ்சள் நீரிலே ஸ்நானஞ் செய்து, மஞ்சள் நீரையே உண்டு கொண்டு, மஞ்சள் துவைத்த வஸ்திரத்தையே உடுத்து, மஞ்சற் கங்கணத்தைக் கையில் அணிந்து நெருப்பில் இறங்குவதும், நெருப்பு மீது மஞ்சட்பொடி தூவப்படுவதும் இதை விளக்குகின்றன. மஞ்சள் நல்ல குணத்தையும், மனத்துக்கு ஒரு முகப்படும் (ஏகாக்ரத்) தன்மையையும்கொடுக்கிறது. நமது பாரதகண்டத்துள்ள பல பொருளை விடுத்து வைணவர்கள் மஞ்சள் பொடியையே திருச்சூரணமாகத் தரிக்கக் கடவர்களென்று வைணவ சமயாசாரிகள் கட்டளை யிட்டுள்ளார்கள்.

அடுப்பனலில் நமது ஸ்திரீகள் சதா இருப்பதால் சரீரத்துக்குள் செல்லக்கூடிய உஷ்ணத்தைத் தடுக்கிறதென்பது ஒவ்வொருவரும் கவனித்தறிதற்பாலது. மஞ்சள் இரத்தத்தைச் சுத்திகரிப்பதென்பதும், இறுகிப் போன இரத்தத்தைக் கரைக்கிறதென்பதும், சரீரத்தில் இரத்தத்தை உண்டாக்கும் கட்டிகளுக்கும், சுரைக்காய் அம்மைக்கும்,



பிரம்பு, தடி முதலியவைகளால் நேர்ந்த அடிகளுக்கும் மஞ்சள் அரைத்துப் பூசப்படுவதால் விளங்குகிறது. அரையாப்புக் கட்டிக்கு மேலே மஞ்சட்பில்லை தட்டிவைத்து அதன்மேற் பாலை ஓட்டைக் காய்ச்சி வைத்துச் சுடுவதாலும் அதன் குணம் விளங்குகிறது. நெடுநாள் ஆயுள்வேத முறைப்படி ஔஷதம் உண்டவர்கள் முதலில் மஞ்சளிட்டுக் காய்ச்சப்பட்ட எண்ணெய் தானிட்டு ஸ்நானம் செய்வார்கள். சல தோஷம் கொண்டவர்கள் மஞ்சளைச்சுட்டு அதன் புகையை முகருவார்கள். விவாகம், பிரமோற்சவம் முதலியவைகளில் அகால போசனத்தாலும், நித்திரைப் பங்கத்தாலும், அதிக உழைப்பினாலும், களிம்புள்ள புதுப் பாத்திரங்களிற் சமைத்துண்ண நேரிடுவதாலும் உண்டாகக் கூடிய குறைகள் நீங்கிச் சரீர சுகமடைவதற்காகவே மேற்கூறியவைகளிற் கடைசிநாள் மஞ்சள் நீராட்டு அதிகமாய் நடந்து வருகிறது. மஞ்சள் சமையற் பதார்த்தங்களில் தக்கபடி சேர்க்கப்படுவதால் பல வியாதிகள் உண்டாகாமல் தடுக்கிறது. மஞ்சளிட்டுச் சமைக்காத இறைச்சி, மாமிசம் முதலியவை சாப்பிடத் தகுதியற்றவை யாகும். இதை விரிப்பிற் பெருகும். மஞ்சளின் குணங்களை நமது பாரத மக்கள் கவனித்துத் தங்கத்தின் நிறமுடையதும், தேயுவின் அமிசமானதும், இகபர ஐஸ்வரியங்களைத்தரும் தேவதையாகிய லட்சுமி தேவியின் அமிசமானதும், சரீர சுகத்தை மிகுதிப் படுத்துவதும் மகா மங்களகரமுமான பொருள்களுள் முதன்மை பெற்றதும், பூர்வீககாலம் தொடங்கி இதுவரை எவ்வித இடையூறு மில்லாது அனுஷ்டானத்தி லிருப்பதுமான மஞ்சளைக் கிரமமாக உபயோகித்து அதன் குணாகுணங்களை மற்றவர்களுக்குத் தெரிவிக்க எண்ணமுடையேனாதலால் இதனை எழுதத் துணிந்தேன்.

"உதயதாரகை."

---

நம்மவர்களிடத்தில் உள்ள குற்றம் என்னவென்றால், கண்டதைக் கண்டபடி போட்டு அசுத்தமா யிருக்கிறார்களென்பதல்ல; சுத்தத்தினால் உண்டாகும் நன்மைகளை அறியாதவர்களா யிருக்கிறார்கள்—என்பதாம்.

---

கல்வியின் இன்பத்தைக் கருதி எழுதி வாசிக்கப் பயில்வோர் மிக்க அருமை. புஸ்தகங்களை ஞான போஜனத்திற்குச் சாதனமென்றல்ல, முயற்சிக்குத் தூண்டுகோலென்றுமல்ல, உத்யோக பதவிக்குச் செல்லும் படிக்கட்டென்று நினைத்திருக்கிறார்கள்.

---

ஒரு ராத்தல் பட்டு செய்வதற்கு இருபத்து மூவாயிரம் பட்டுப்பூச்சிகளைக் கொல்லவேண்டுமாம்.

---

# கவிதா விலாஸம்

## *ஸ்ரீ ஹரிக் கண்ணி

(324-ம் பக்கத் தொடர்ச்சி.)

13. செய்யாக்கொடுமையெல்லாஞ் செய்தலுத்தேன்யானேழை
அய்யாபிழைக்க வருடருவாய் ஸ்ரீ ஹரியே.

14. தொழுதவெனைக்காத்துச் சுகந்தரநீயன்றி
யழுதகுரல்கேட் டருள்வார்யார்? ஸ்ரீ ஹரியே.

15. உலகிலுதித்துன்னைமறந்து யானிழைத்தவூறே
அலைகடலினுண்மணன் மேலாகும்பார் ஸ்ரீ ஹரியே.

16. என்னகுற்றஞ்செய்தாலு மீன்றெடுத்த தாயவற்றை
மன்னிப்பாளவ்வணநீ வந்தாள்வாய் ஸ்ரீ ஹரியே.

17. ஆறுகுற்றம்நூறுபிழை யானேழை செய்தாலுஞ்
சீறிக்கெடுக்காதுன் சித்தம்வைத்தாள் ஸ்ரீ ஹரியே.

18. உன்னையன்றிநாயடியேற் குற்றதுணைவேறுளதோ?
என்னையிகழாம லேற்பாய்நீ ஸ்ரீ ஹரியே.

19. எப்போதுமுன்ற னிருதயத்து ளன்புவைத்துத்
தப்பாதுகா—சங்குசக்கரக்கை ஸ்ரீ ஹரியே.

20. கல்லைப்பெண்ணாகக் கருணைசெய்தவண்ணமென்றன்
றொல்லைவினையாவுந் தொலைத்தருள்வாய் ஸ்ரீ ஹரியே.

21. கொடுமைபலசெய்தவனைக் கோதிலாவுன்ற
னடிமைகளுக்காளாக வாக்குவாய் ஸ்ரீ ஹரியே.

22. தாரந்தவிரமற்றோர் தாயெனவேயென்மனதில்
ஆரக்கருணை யருளுவாய் ஸ்ரீ ஹரியே.

23. கொடுக்குமருண்மேலுங் குவலயத்தில்நாயே
னெடுக்கும்பிறவிதொறு மேற்கவருள் ஸ்ரீ ஹரியே.

24. தேகவநித்தியத்தைத் தேறமலெந்நாளும்
போகம்விரும்புபுத்தி போக்குவாய் ஸ்ரீ ஹரியே.

(தொடரும்.)

தஞ்சை : சந்த இராமசாமி நாயுடு.

* All Rights Reserved to the Author.

II

# இதுவே போதுமெனல்

ஒழுக்கமோடு வாய்மையுடை யோர்க்கு நற் குருவோது
முபதேசமது வேண்டுமோ?

ஓதரிய ஜீவகா ருண்ய விரதத்தினோ
ருயர் அறஞ்செய வேண்டுமோ?

அழுக்கா றிலாதபரி சுத்தமன முடையபேர்
ஆட நதி பிறவேண்டுமோ?

அரிதான காம சின லோப குணம் விட்டவ
ரருந்தவஞ் செயவேண்டுமோ?

இழுக்கிலா வடியவர்கட் கூழியஞ்செய்குவோ
ரீசனைத் தொழவேண்டுமோ?

இல்லறத் திற்றுறவு கொண்டபேர் மண்டலத்
திறைவரைத் தொழவேண்டுமோ?

வழக்கமா யுன்மீது மதுரகவி பாடுவோர்
வரம்வேறு பெறவேண்டுமோ?

வரைராஜ குமரிமடி மீதுவிளை யாடல்புரி
மணிகோண் டவடி வேலனே.

குறிப்புரை :—ஒழுக்கம்=நன்னடை; அழுக்காறு=அழுக்கு+ஆறு; மலினத்திற்கு வழி; பொறாமை. இழுக்கு=குற்றம்; மண்டலம்=மண்+தலம்; உலகம்-இஃது இரு பெயரொட்டுப் பண்புத்தொகை. இறைவர்=அரசர்; மதுரகவி யென்பது நால்வகைக் கவிகளி லொன்று; அவை: ஆசு, மதுரம், சித்திரம், விஸ்தாரமென்பன.

சரபம் முத்துசாமிக் கவிராயர்.

# சென்ற மாதம்

**பெண்கள் படும் பாடு.**

ஸமீபத்தில் ஒருவன் எட்டு வயதுள்ள மனைவியை வாயில் துணி யடைத்துப் பலாத்கரித்ததான ஒரு வழக்கு விசாரணையி லுள்ளது. பெரும்பான்மையும் இவ்வாறான ஸம்பவங்கள் வெளிவருவதே யில்லை. ருதுவாகுமுன் விவாகம் ஆகித் தீர வேண்டுமென்ற ஸம்பிரதாயஸ்தர்களில் பருவம் வருவதற்குமுன் ஒன்றுபட்டிருக்க விடுதல் வெளிவராத மர்மங்களுள் ஒன்று. "நீ எத்தனை நாளைக்கு ஒண்டியாகக் கிடப்பது?—அவளைத் தருவித்து விடட்டுமா?" என்று தக்க உத்தியோக பதவியிலுள்ளவனிடம் அவன் தாய் கேட்கிறாள். அவ்விதமே பெண்வீட்டாரிடம் 'தனக்குத் துணையாக' என்று சொல்லி அழைத்து வந்து பருவம் வராத அப்பெண்ணைத் தன் குமாரனிடம் விட்டு விட்டு வேற்றூர் போய்விடுகிறாள்! இம்மாதிரி ஸம்பவங்கள் இரண்டாம் தாரம், மூன்றாம்தாரம் கொள்ளும் இடங்களில் இன்னும் அதிகம். தங்கள் பெண்ணுக்கு மருமகன் அதிக நகைகள் போடுவானென்ற எண்ணத்துடன் பருவம் பெறுமுன் தேக சம்மந்தப்படப் பெற்றோர்கள் சம்மதிக்கிறார்களென்று "நகைப் பைத்தியம்" என்ற நூலில் அதன் ஆசிரியர் விஸ்தாரமாய் எழுதுகிறார். சில இடங்களில் பெண்கள் சீக்கிரம் புஷ்பவதி யாவதற்காக மருந்தும் கொடுக்கிறார்களாம்! இந்தக் கொடுமைகளுக்கு முடிவு எப்போதோ?

**மந்திரவாதியே உண்மையான மனிதப் பேய்!**

திரிச்சியைச் சேர்ந்த ஓரிடத்தில் ஒரு மந்திரவாதியிடம் ஒரு பெண்ணைக்குணப்படுத்தும்படி சொல்ல, அவன் வந்தவர்கள் முன்பாக இரு பெண்களைத் தலைவிரித் தாடச் செய்தான். தன் மந்திர வியாபாரத்துக்காக இப்படி இப்பெண்களை ஆடச் செய்து தன்னிடம் வருவோரைப் பிரமிக்க வைத்து மயக்குவது அவன் தொழில் என்று தெரிகிறது. இதற்காகவே ஆடுவதற்காகச் சிலரை வைத்திருப்பதாகக் காண்கிறது. இதில் வந்தவர்கள் அவனைப் பிரமாதமாக எண்ணிவிட, அவனும் நூறு ரூபாய் கொடுத்தால்தான் உங்கள் பெண்ணைக் குணப்படுத்த முடியும் என்றான். வந்தவர்கள் திரும்பி விட்டனர். இம் மந்திரவாதிகள் தங்கள் மந்திரிக்கும்போது அருகில் எவரும் இருக்கலாகா தென்பர். அதற்குச் சம்மதிக்கக் கூடாது. நல்ல நடவடிக்கைகள் இல்லாத வகுப்பைச் சேர்ந்த இந்த மந்திரவாதிகளிடம் எவ்வித நம்பிக்கையும் வைக்கலாகாது. மந்திரிக்கும்போது கட்டாயம் அருகில் இருக்கவேண்டும். இதிலும் இரண்டொருவர் அபூர்வமாய் உத்தமர்களாக இருக்கக் கூடும். ஆனால் அதை அறிவது எப்படி?

***

**புரட்டாசியும் பேயாட்டமும்**

புரட்டாசி மாதம் பேய்களை ஓட்டுவதற்கு மிக மிக விசேஷித்த மாதமாம். புரட்டாசி மாதத்தி[ன்] ஐந்து சனிக்கிழமைகளிலும் சில தேவாலயங்களில் பேயோட்டம் காட்சிகள் நிகழ்கின்றன. மேற்கண்ட ஐந்து சனிக்கிழமைகளிலும் இரவில் பேயோட்டுதல் காண்பிக்கப்படுகின்றது. சுற்றிலும் ஆடவர்களின் திரள் விளங்க, அதன் மத்தியில் பேய்பிடித்த பெண்கள் மானமின்றி உட்கார்ந்து கொண்டு தலைவிரித் தாடுகின்றனர். பார்க்க மகா கண்ராவியான காட்சி! இதை ஜனங்கள் ஒரு வேடிக்கையாக எண்ணுதல் எத்துணை மௌடீகம்? பந்தத்தைக் கொளுத்திக்கொண்டு நிற்கும் ஆடவர் ஆவேச ரூபமாய் விளங்குகிறார். அவருக்கும் பேய்க்கும் பேச்சுகள் நடக்கின்றன. இதனிடையே சில புருஷர்கள் தலைவிரித் தாடும் பெண்களின் கூந்தலில் கையிட்டுப் பிடித்து—"நீ யார்"—என்கின்றனர். அன்னிய ஆடவனொருவன் பெண்ணைத் தொடும்படி பார்த்திருப்பது நல்ல ரத்தமுள்ள எவனுக்கும் கொதிப்பெடுக்காதிராது. இதன் பின் ஆவேசம் கொண்டிருப்பவர் பேயைத் துரத்தப் பாடுபடுகிறார். பேய்பிடித்த பெண் ஓடுகிறாள்—இவர் தீப்பிடித்த பந்தத்துடன் அவளைத் துரத்திச்செல்கிறார்—இவர் பின் ஒரு கூட்டம் ஓடுகிறது. இது இரவு முற்றும் நிகழ்கின்றது! ஜனக்கூட்டமோ அதிகம். விவேகியொருவன் இந்த ஸம்பவங்களைக் காண்பானாயின் உத்தமகுணப் பத்தினிப் பெண்களின் மானம் பேய்களால் காற்றில் பறக்கடிக்கப் படுவதைப் பார்த்துக் கண்ணீர் விடாதிரான்.

***

**ஒரு தமிழ் வாரப் பத்திராதிபரின் கண்ணீர்!**

நமது ஆப்தநண்பரான சென்னை 'ஹிந்துநேசன்' பத்திராதிபர் ஸ்ரீமான் ல. அநந்தையரவர்களுக்குண்டான கனத்த புத்திர சோகத்தைக் குறித்து இரத்தக் கண்ணீர் விட்டுத் துக்கிக்கின்றோம். வாழ்க்கையில் மிகப் புண்பட்டுள்ள அவருக்கு இந்தக் கஷ்டமுமா பிராப்தமாக வேண்டும்? அவரது மூத்த குமாரனான 20-வயதுள்ள முத்து கிருஷ்ணன் என்பவருக்கு சென்ற ஜூலை மாதத்தில் தான் விவாகம் நடந்தது. திருவலஞ் சுழி எனும் இடத்தில் காவிரி நதியில் நீராடப் போனதில், அந்தோ! அந்த முத்து கிருஷ்ணன் நதியின் வசமாக, கடைசியில் சவம் மரவேர்களில் சிக்கியிருக்கக் கண்டெடுக்கப் பட்டது! ஹா! என்ன பரிதாப சம்பவம்! தெய்வம் அளவுக்கு மீறிச் சோதித்துவிட்டது! அன்பருக்கு நமது அநுதாபம் தெரிவிக்கின்றோம். ஆயினும், என்ன பயனுளது எம் அநுதாபத்தால்? * "விதி" யாலும் தனது வினைப் பயனை விலக்கரிதால்—யாம் வெல்லல் ஆமோ?

***

**யந்திர அரிசி**

ராமேசுரம் தேவஸ்தானத்தில் கையால் குத்திய அரிசியே சுவாமிக்கு உபயோகப் படுத்துகின்றனராம். "ஸ்ரீரங்கத்து உலக்கைபோல" என்பது பழங் காலத்துப் பழமொழி. அந்த உலக்கை ஓயாது நெல்லைக் குத்திக் கொண்டேயிருக்குமானதால், மிக்கப் பாடுபடுகிறவர்கள், ஸ்ரீரங்கத்து உலக்கை போல் கஷ்டப்படுகிறேன் என்று ஒரு எடுத்துக்காட்டாக வழங்குவர். அத்தகைய உலக்கை ஸ்ரீரங்கத்தில் ஒழிந்து அநேக வருஷங்களாயின. யந்திர அரிசிதான் கோயிலில் உபயோகம். இனி நெய் விளக்கை எடுத்துவிட்டு மின்சார விளக்கு [illegible] சிங்காரம் [illegible] அரிசி[illegible] தீமை [illegible] கையில் என் அதன் உபயோகமோ?

* "விதி" யாலும் = [illegible]ழனாலும்.



169819

**தேர்தலின் ஆரவாரம்.**

எங்கும் தேர்தல் முழக்கம் ஜஸ்டிஸ் கக்ஷி ஒரு சார்! காங்கிரஸ் கக்ஷி ஒரு சார்! இரண்டிலும் சேராமல் அபேக்ஷகராய் நிற்கின்றனர் பிறிதொரு சாரார்! இதில் சட்டசபை இன்ன விதமாக அமைக்கப்பட்டுள்ளதென அறிந்த வாக்காளர்கள் ஆயிரத்துக்கு ஒன்றுகூட அகப்படார்! தம் வாக்கை எவருக்குக் கொடுப்பதென்று அதன் பொறுப்பை யுணர்ந்தோர் பத்திரிகைப் பழக்கமுடைய சிலரே யாவர். இந்நிலையில் அபேக்ஷகர்களின் ஆரவாரமான பிரகடனங்கள் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன. தேர்தலுக்கு நிற்போர் செய்யும் செலவோ பதினாயிரக் கணக்காக! இவை யெல்லாம் மேனாட்டு ராஜீய நாகரீகத்தின் வைபவங்களாகும். இதில் சுயநலமற்ற அபேக்ஷகர்களைச் சிறுவிரல் விட்டு எண்ணிவிடலாம். இந்த நவம்பர்மாதம் 8-ம் தேதி தேர்தல் அதிர்ஷ்டச் சீட்டுநாள்! 'லாட்டரி'ச் சிட்டு எவரெவருக்கு விழுகிறதோ!

---

# பிரபஞ்ச தரிசனம்

"அநேக தேசங்களுக்குள் கடவுளிடம் பயத்தோடு இருப்பவர்கள் அடங்கிய தேசமே செழிக்கும்"—என்று அஸ்ஸாம் மாணவர் மகா நாட்டின் அக்கிராஸனர் கூறினர். நம்முடைய நித்திய ஆசரணையில் ஒவ்வொரு விஷயத்திலும் கடவுளின் ஞாபகம் மேலிட்டிருக்க வேண்டு மென்பதாகப் பொருள் படுமாறும் அவர் பேசினர். இந்த இரண்டுக்கும் இந்தியாவே ஏற்றது. கடவுளுக்கு அஞ்சி தர்ம மார்க்கத்தில் பற்றுதலுடன் நடந்து கொள்வது இந்திய நன்மக்களின் ஸ்வபாவமாம். எந்த வேலையிலும், எழுதும் கடிதத்திற்குள்ளுங் கூட பகவத் சிந்தனையை முன் இருத்தித் தொடங்குவது இங்கு தொன்று தொட்டுள்ள ஸம்பிரதாயமாம். ஆனல், மேற்றிசையின் நாகரீகத்தால் இந்தியாவின் புனிதமான தன்மை கறைப்பட்டு மலினமடைந்துள்ளது. இதன் மீட்சிக்கு மகாத்மாவின் உபதேசங்களே நன்மருந்தாம்.

***

'வீடு'—என்பது என்ன? வீட்டை ஒருவனுடைய கோயிலாகக் கொள்ளலாம்; அல்லது அவனுடைய கோட்டையாகக் கொள்ளலாம். கடவுளை வணங்குவதற்கு சாதகமாய் அமைந்துள்ள ஸ்தலமாகவும் வீட்டைக் [illegible] தன்னுடைய சுகானுபவங்களுக்கு ஏற்ற கருவியாக [illegible] கருவியாகவும் வீட்டைக் கொள்ளலாம். இவ் [illegible] கொண்டது தான் 'வீடு' என்னும் சொல். [illegible] ஓடும், உள்ளு[illegible] என்பது மட்டும் அல்ல வீட்டின் பொருள். பாரத தேசம் ஒரு நாடு. வீ[illegible]டைப்பற்றிய லக்ஷணங்களே நாட்டுக்குமாம்.



நாட்டைத் தெய்வமாகக் கும்பிடலாம். தாயாகப் போற்றலாம். அல்லது காதலியாகக் கொண்டு கரை புரண்ட காதல் வெள்ளத்தை நாட்டின் கண் செலுத்தலாம். இது ஒரு வித மனோபாவமாம்.

***

ஒரு கொள்கை என்னுடையது, ஒரு உடமை என்னுடையது—என்று சொல்ல எனக்கு எப்பொழுது உரிமையின் சக்தி தோன்றும்? நான் கொண்ட ஒரு கொள்கைக்காக எனது உயிரை விடத் தயாராயிருந்தால், அந்தக் கொள்கை என்னுடையதாகும். ஒரு சொத்தைக் காப்பதில் உயிரைக் கொடுக்க எனக்கு உறுதி இருக்குமாகில், அந்த சொத்து என்னுடையதாகி விடும். வீண் பேச்சும், பொய்யான பாத்தியமும் பயன் படமாட்டா. பாரத தேசம் உன்னுடைய சொத்து. அதன் நலத்திற்காக உன் ஆயுளை யெல்லாம் கொடு. அதன் மேன்மைப்பாட்டிற்காக உழைக்கிற காங்கிரஸ் மகாசபைக்கு உன் கால மெல்லாம் உழைத்துக் கொண்டிரு. அதற்கே 'வாக்கு' தா.

***

ஸ்வராஜ்யம்—என்றால் என்ன? ஒரு பொருளையோ, ஒரு கொள்கையையோ கண்டு, ஆண்டு, அனுபவித்து, அதைக் காக்கும் திறமைக்கு ஸ்வராஜ்யம் என்று பெயர். இது எனக்கு வேண்டாமா? நிச்சயமாய் வேண்டும். இல்லாவிடில் எதற்காக நான் இந்த மண்ணில் மனிதனாய்ப் பிறக்க வேண்டுமோ? ஸ்வராஜ்யம் தான் ஆத்ம வளர்ச்சியின் வழி. ஸ்வராஜ்யம் ஆத்ம வளர்ச்சியின் எல்லை. மனிதனுடைய வாழ்வின் குறியும் அதுவே. குறியில்லாத மனிதன் உலகில் இருப்பானா? அதாவது அறிவும் உணர்ச்சியும் இல்லாத மனிதன் உலகில் இருக்கலாமா? தற்காப்புக்குச் சக்தியும், தன் வளர்ச்சிக்கு சாதனமும் படைக்காத மனிதன்—மனிதன்—என்ற பெயருக்குத் தகுதியுள்ளவன் அல்ல.

***

ஸ்வராஜ்யம் என்பது ஒரு வித மனோ நிலையாம். ஸ்வராஜ்யம் என்றால் அது ஒரு பெருந் தெய்வ சக்தியாம். ஸ்வராஜ்யம் என்பது விளையாட்டுச் சாமான் அன்று. இந்தியா—நமது தாயாகில் நாம் எல்லோரும் ஸகோதரர்கள். அந்த உணர்ச்சியை நாம் அனுபவத்தில் காட்ட வேண்டும். ஏட்டுச் சுரை கறிக்குப் பயன்படாது. கிளிப்பிள்ளை "கஸ்தூரி ரங்கா" என்று சொல்லுவது போல அது முடியும். இந்தியா—நாம் வணங்கும் தெய்வத்தின் கோயிலாகில் எல்லோரும் கூடிக் கலந்து மெய் மறந்து வணங்கக் கடவோம். நமக்குள் பாழுங் கக்ஷிகள் வேண்டாம், மாமியார் கக்ஷி மருமகளின் மேல் புகார் சொல்லும் நோக்கமுடையது. மருமகளின் கக்ஷி மாமியின் மீது குற்றங்கள் ஏற்றித் தனிக் குடும்பமாகப் போய் விடப் பார்க்கும் கொள்கை பூண்டது. வீட்டுத் தலைவனின் கக்ஷியோ எவர் சார்பில் நிற்பதென்ற திகைப்பு மிகுந்தது. இடையிலுள்ளவர்களின் கக்ஷியோ ஒருவர் சொல்லியதை ஒன்றுக்குப் பத்தாகக் கூட்டி மற்றவரிடம் கூறிக் கலகத்தை வளர்த்து நடுவில் கொள்ளை கொண்டு போகும் தன்மையது. மொத்த பாகத்துக்கு இவ்விதக் கக்ஷிகளால் குடும்பத்துக்கு ஏதாகிலும் க்ஷேமம் உண்டாமா? இக்கக்ஷிகளைத் தொலைத்தால் குடும்பம் எவ்வளவு சமாதானமாக வாழ்ந்து மேன்மைப்படும்? இங்கு வீட்டுக்குச் சொன்னதை நாட்டுக்கும் நலமாகக் கொள்க. கக்ஷிகளை

விட்டு விட்டு ஸ்வாராஜ்ய நோக்கே மிகுக. ஸ்வாராஜ்யம் வேண்டுமானால், சக்தி படைப்போம், பக்தி படைப்போம், பாவனை வேண்டாம், பொய்ப் பேச்சு வேண்டாம், வீண் துவேஷம் வேண்டாம். பெறத்தகும் வழியைத் தேடுவோம் ; வாதத்தை வளர்க்காமலிருக்கக் கடவோம்.

***

அகத்தின் வலிமையைக் காட்டுவதற்கு, அகத்தின் அமைப்பைக் காட்டுவதற்கு, புறத்திலே சில குறிகள் உண்டு. சில குறிப்புகள் உண்டு. உன் பக்தியைக் காட்டுவதற்கு வெளியிலே மனிதன் தொழுவான். உன் காதலைக் காட்டுவதற்கு, வெளியிலே மனிதன் ஒரு மங்கையை மணப்பான். உன் துயரத்தைக் காட்டுவதற்கு, வெளியே மனிதன் கண்ணீர் வடிப்பான்—உயிர் துறக்கவும் முயல்வான். உள்ளிருக்கும் உறுதியையும் ஆவலையும் வெளிக்காட்ட மனிதன் ஸதா கருமம் செய்து கொண்டிருப்பான். அது எப்படியெனில், சாவி கொடுத்த கெடியார யந்திரம் ஓடுவதைப் போலாம். அவ்வாறாக நமக்குள் இருக்கும் தேச வாஞ்சையை எந்தெந்தக் குறிகளின் மூலமாய் இப்போது நாம் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறோமென்று ஒவ்வொருவரும் தர்ம நியாயமாகத் தம்முள் ஆராயக்கடவர். ஆராய்ந்து குறைபட்டதைச் சரிவா நிரப்பக்கடவர்.

***

மாறு பட்ட சக்திகள் ஒன்றையொன்று மோதி முட்டிக் கொள்ளும். மட்டதடமும் கல்லும் சந்தித்தால் யாதாகும்? ஒன்று பட்ட சக்திகளோ ஒற்றுமை கொண்ட சக்திகளாகும்—அவை ஒன்றின்மேலொன்று ஒட்டிக் கொள்ளும். பாலும் சர்க்கரையும் எதிர்ப்பட்டுக் கொண்டது போலாம். ஒன்று பட்ட சக்திகள் ஒட்டிக்கொள்ளும் வகைகள் பலவிதமாகும். நாய் எஜமானனைக் கண்டு வாலைக் குழைக்கும் ; குழந்தை தாயைக் கண்டு மார்போடு அணைந்து கொள்ளும் ; காதலர்கள் ஒட்டிக்கொண்டு முத்தமிடுவார்கள். தேவர்கள் அரிச்சந்திரனுடைய உண்மை நெறியைக் கண்டு புஷ்பமாரி பெய்தார்கள். இவை ஒன்று பட்ட சக்தியின் செயல்களாகும். இனி வேறுபட்ட சக்திகளின் செயலுக்கோ ஹிரணியனையும் பிரஹலாதனையும் எதிரில் நிறுத்தலாம். பாண்டவர்களையும் துரியோதனாதியரையும் இங்கு நினைப்புக்குக் கொண்டு வரலாம். இவை ஒன்றையொன்று எதிர்க்கும் தன்மை கொண்ட மாறுபட்ட சக்திகளாகும்.

***

இவ்விதமே போல, காங்கிரஸ் மகா சபை, முஸ்லீம் லீக், கிலாபத் கமிட்டிகள், ஆசார திருத்த கான்பரன்ஸ்கள் இன்னும் இவை போன்ற பலவும் ஒன்றுபட்ட சக்திகளோடு சேர்ந்தவை. ன்ஒறை யொன்று ஒட்டிக் கொள்பவைகளாகும். ஒட்டிக் கொண்டு நலம் பயப்பவைகளாகும். ஆனால் இப்போதோ?—நாட்டில் பல்வேறு வகைக் கக்ஷிகள் தோன்றி யுள்ளன. எல்லாம் மாறுபட்ட சக்திகள் கொண்ட கக்ஷிகள். எனவே இவைகள் மோதிக் கொள்வதில் உண்டாகும் விபரீதம்—வேற்றுமை-சொல்லவும் கூடுமோ? இருவித சக்திகளும் சந்திக்கும் வகையையும் அதன் பலனையும் கண்டீர்களா?

***



வனுக்கு வாழத் தெரியும்? எவன் சாகத் துணிவான்? எவனுக்குப் பகைமையில்லையோ அவனுக்கு வாழத் தெரியும். எவன் ஒன்று பட்ட சக்தியின் வசப்பட்டவனோ அவன் புனிதனாவான். எவனுக்குப் பகைமை இருக்காது? எவன் மாறுபட்ட சக்திகளில் கலவாமல் தன்னைப் போல் பிறனையும் எண்ணுகிறானோ அவனுக்கே பகைமை உணர்ச்சி இருக்காது. எவனுக்குப் பிறரிடம் அன்பு மித மிஞ்சித் ததும்புகிறதோ அவனுக்குப் பகைமை இல்லை. எவன் ஈசனிடத்திலும், சிருஷ்டிவர்க்கமாகிய உயர் குலத்தின் கண்ணும் பக்தியும் கவிதையுணர்ச்சியும் கொண்டு ஒழுகுகிறானோ, அவனுக்குப் பகைமை இல்லை. இத்தகைய மனிதர்களுக்கு வாழ்விலே நல்ல ருசி பிறக்கும். இவர்களுக்கே பிறர் பொருட்டுச் சாகவும் மனம் துணியும். ஏன்? குழந்தைக்காகத் தாய் உயிர் விடுவாள். இது கட்டுக் கதையல்ல. மகனுக்காகத் தகப்பன் உயிர் நீப்பான். இதுவும் உண்மை. இந்தத் தகப்பனும் தாயும் மூடர்களா? இல்லை. இவ்விரண்டு உயிர்களையும் ஆட்டி வைத்தும் உணர்ச்சி தான் இப்போது நமக்கு நமது தேச விஷயத்திலும் தேவை. அந்த உணர்ச்சி நம் முன் எழுந்தால் எல்லா மாறுபட்ட சக்திகளும் கண்காணாது ஓடிவிடும். ஒன்றுபட்ட சக்திகள் உடனே தோன்றிக் கூடிக்கொள்ளும் ; ஒற்றுமை கொண்டு விடும். மேற்சொன்ன அந்த உணர்ச்சிதான் முதலில் வீடாகவும், இடையில் ஊராகவும், இறுதியில் நாடாகவும் விசாலப்பட்டு முடிவில் உலகமாகவும் பரிணமிக்கின்றது.

***

ஒன்றுபட்ட சக்தியின் உயர்வையும், மேலே சொன்ன வாழ்வின் உணர்ச்சியையும், அவ்விரண்டின் போக்கையும் கண்டு கொண்டு, அவைகளில் படிந்துள்ள மாசுக்களைக் களைந்து, ஒளியையும் வலிமையையும் வளர்த்துவதே ஒவ்வொரு ஞானியின்—தேசாபிமானியின் நோக்கமாக அமைதல் வேண்டும். அவ்வாறு அமையும்போது தான் நாடும்-விடுதலை கொண்டிடும். விடுதலை வீரர்காள் விழிமின்! எழுமின்!!

---

# இயந்திர தெய்வம்

ஒரு விநோதக் கதை.

முற் பகுதி.

பஞ்சாப் மாகாணத்தில் மின்சார சக்தியால் ஓடும் இரயில்வே வந்து விட்டது. லாகூரிலிருந்து செல்லும் பல ரயில் வண்டித் தொடர்களுக்கு, மின்சார சக்தி யளிப்பதற்கு அதன் சமீபத்தில் மின்சார சாலையொன்றிருக்கிறது. அங்கு வேலை செய்யும் இயந்திரங்களின் சப்தம் வெகு தூரம் வரையில் கேட்கும். இச் சாலையின் மானேஜர் ஒரு ஆங்கில கனவான். அவர் புதிதாக மேனாட்டினின்று வந்தவர். இதற்கு முன் ஆப்பிரிக்கா தேயத்தில் வேலையிலிருந்திருக்கிறார். அவர் பெயர் ஜேம்ஸ்

ஸ்லோப் நக். அவர் மின்சார சாஸ்திரத்தை நன்கு பயின்றவர். கோணப் பல்லும், சிகப்பு மயிரும், குடி வெறியும், அவரை யாவரும் அறியும்படி செய்தன. கடவுளின் இருப்பைப்பற்றி அவருக்கு சற்று ஐயமுண் டெனினும், விக்ஞானிகளின் நாஸ்திகச் சார்பான கொள்கைகளில் பெரும் நம்பிக்கை கொண்டவர். அவர் ஆங்கில கவியான ஷேக்ஸ்பியரது நூல்களைப் பயின்று அக்கவி உலோக சாஸ்திரத்தில் பாண்டித்ய மில்லாதவரெனக் கண்டவர். அவருக் குதவியாக காண்டவன் என்னும் ஒரு நீக்ரோவனை ஆப்பிரிக்காவிலிருந்து அழைத்து வந்திருந்தார். அவர் அவனைக் காண்டா என அழைப்பது வழக்கம். இந்த நீக்ரோவைத் தனக் குதவியாக வைத்துக் கொள்ள வெள்ளையர் சம்மதப்பட்டது ஏனெனில், காண்டவன் எவ்வளவு உதைகளையும் பொறுத்துக் கொள்வான். சேவகர்களைப் பூட்ஸ் பூசை செய்வது ஜேம்ஸுக்கு சகஜம். மேலும் அறிவிலியான காண்டவன் இயந்திரத்தின் போக்கைப்பற்றியும், மற்ற அனுவசியமான விஷயங்களிலும் கவலை கொள்ளாதிருப்பான். காண்டவனை ஒரு ஊழியத்திற்குத் தகுந்த மிருகமாகவே ஜேம்ஸ் நினைத்தார்.

***

காண்டவனின் தேக அழகை வர்ணிக்க சாமுத்ரிகா சாஸ்திரத்தை நன்கு பயின்றிருக்க வேண்டும். அவன் தன் தேசத்தாரைக் காட்டிலும் அதிகமான நீக்ரோ லக்ஷணங்களைப் பெற்றவன். கண்ணின் வெள்ளை பாகம் மஞ்சள், உதடு தடிப்பு, மயிர் சுருட்டை, காந்தி அமாவாசை இருள், உயரத்தில் அகஸ்தியர், தலை குடுக்கை, இவை அவனை எடுத்துக் காட்டின. பேசும்பொழுது அவன் அர்த்த சம்பந்தமில்லாத பல சப்தங்கள் செய்வான். அவனுடன் ஜேம்ஸ் களிப்புற்ற சமயங்களில் சகஜமாகப் பேசுவார். மூட பக்தியைப்பற்றியும், பாதிரிமார்களின் லோகோபகாரத்தைப்பற்றியும் அவனிடம் பிரசங்கம் செய்வார். ஆனால் தெய்வ சம்பந்தமான பிரசங்கங்களுக்குக் காண்டவன் செவி கொடான். அதற்காக ஒரு உதை பெறும் தியாகத்தையும் செய்வான். தன் தேசத்தை விட்டு வெளி வருவதில் அவனுக்கு மிகுந்த ஆனந்தம். தேகம் முழுவதும் ஆடை யணிந்த ஆண் பெண்டிரையும், கருப்பில்லாத வர்ணத்தையும், ஒரே வெண்மையான ஐரோப்பியரையும், நாகரீகம் மானிடருக்குச் செய்திருக்கும் அபூர்வ வேலைகளையும் காணக் காண அவனுக்கு ஒரு புது புவனம் தன் கண்முன்பு திறக்கப்பட்டது போல் இருந்தது. லாகூரின் சிறந்த கட்டிடங்களையும், பெரிய மனிதர்களையும், மனிதர் கூடிக் குலாவும் சங்கங்களையும் கண்டு அவன் ஆச்சரியப்படுவான். ஆனால், இவைகளை யெல்லாம் தன் யஜமானனிடம் சொல்லப் போனாலோ அவனுக்கு உதை தான்; நாகரீகமே உற்பத்தியான மேனாட்டினின்றும் வந்த ஜேம்ஸுக்கா லாகூர் ஒரு லக்ஷியம் !

***

மின்சார சாலையில் மூன்று எலெக்ட்ரிக் இயந்திரங்கள் வேலை செய்தன. சிறியதான இரண்டும் வெகு நாட்களாய் அங்கே இருக்கின்றன. ஆனால் புதிதாக வரவழைக்கப்பட்ட மூன்றாவது இயந்திரம் மிகப்பெரிது. சிறிய இயந்திரங்களின் சப்தங்களை விட அதன் சப்தம் மிகப் பயங்கரமானது—வெகு தூரம் வரை கேட்கக் கூடியது. சிறிய இயந்திரங்களின் இறைச்சல்கள் இதனால் அமுக்கப்படும். புதிதாகச் சாலைக்குள் வரு



வோர்க்கு அந்தப் பேரிறைச்சலினால் தலை சுற்றும். ஹூ! ஹூ! என்றும், டொக், டொக் என்றும் சிறிய சக்கரங்களும் பெரிய சக்கரங்களும் கண்ணுக்குத் தெரியாது வேகமாகச் சுழன்று தங்கள் ஜனோபகாரத்தைச் செய்தன. மூன்றாவது இயந்திரத்தின் பேரிறைச்சல் என்ஜினீர்களின் தீர்மானப்படி ஒரு குற்றமாக இருந்தது. ஆனால் காண்டவனுக்கோ அது கர்வத்தையும் பெருந்தன்மையையும் காட்டிற்று! அச்சாலையையே இப்பேரிறைச்சல் அசைத்து ஆட்டுமாதலால் புதிதாக அவ்விடம் செல்வோருக்குப் பாதாள லோகம் போவதுபோலத் தோன்றும். ஜேம்ஸும் காண்டவனுமோ தங்கள் காலம் பூராவையும் சாலைக்குப் பக்கத் தாழ்வாரமொன்றிலேயே கழிக்கவேண்டி யிருந்தது. ஆனால் பழக்கம் யாவற்றையும் சரியாக்குகிறது.

***

ஸ்லோப்நக் தாம் இப்பெரும் இயந்திரத்தை வேலை செய்வதைப்பற்றிப் பெருமை கொண்டவர். அடிக்கடி அவர் தன் அந்தரங்க வேலையாளனிடம் அதன் அமைப்பைப்பற்றியும் அதில் ஒரு மனிதனைக் கொல்ல எவ்வளவோ வகையுண்டு என்பதைப்பற்றியும் விரிவாக எடுத்துரைப்பார். அடிக்கடி தன் இயந்திரத்தைப் பற்றிப் பிரசங்கங்கள் செய்வார். அப்பொழுதெல்லாம் அவர் இயந்திரப் பேரிறைச்சலுக்கு மேல் உரத்திப் பேசுவார். "நீங்கள் அக்ஞானிகள் ; கல்லை தெய்வமென அழைக்கிறீர்கள். இதோ பாருங்கள் நிஜ தெய்வம்! நீங்கள் பலியிடுவதை யெல்லாம் இதற்குச் செய்யுங்கள்" எனக் குறும்பாகவும் பேசுவார். இதை யெல்லாம் அடிக்கடி கேட்டுக்கொண்டிருந்த காண்டவன் மனதில், அவன் மதக்கொள்கைகளும் ஜேம்ஸ் பிரசங்கங்களும் வேலை செய்ய வாரம்பித்தன. அடிக்கடி வேலையில் பழகிவிட்ட காண்டவனிடம் சார்ஜை ஒப்புவித்து விட்டு ஜேம்ஸ் வெளியில் செல்லுவார். அப்பொழுதெல்லாம் காண்டவன் இயந்திரத்தின் முன் உட்கார்ந்து அதைப் பார்த்தவண்ணமே யிருப்பான். வரவர அவன் மனதை இப்பெரும் இயந்திரம் கொள்ளை கொண்டது. மனவேற்றுமையினால் அவன் மற்ற சிறு இயந்திரங்களைக் கவனிப்பதில்லை. அவைகள் கோணலாயிருந்தன. ஆனால் பெரும் இயந்திரம் எவ்வளவு கம்பீரத்துடனும் ஒழுங்குடனும் ஓடுகிறது! அது உயிரற்றதாகவாவது தோன்றுகிறதோ! இல்லை. உயிரில்லாப் பிராணி யொன்று இவ்வளவு முயற்சி யுணர்ச்சியுடன் வேலை செய்து இவ்வளவு சக்திக்குக் காரணமா யிருக்குமா? காண்டவன் மனம் வெகு வேகமாகவும், புது வழியிலும் வேலை செய்தது. அவன் இப்பெரும் இயந்திரத்திற்கு 'இயந்திர அரசன்' என நாமகரணம் செய்தான்.

***

காண்டவன் வேலை செய்வதில் மிகவும் ஊக்கமுடையவனல்ல. அவன் யஜமானன் குடிப்பதற்காக வெளியில் செல்லும் போதெல்லாம் அவன் பெரிய இயந்திரத்தின் வெகு சமீபத்தில் உட்கார்ந்து அதை நோக்கியவண்ணமே இருப்பான். அவன் வேலையிடம் தாழ்வார மாதலால், அவன் இங்கிருப்பதை ஜேம்ஸ் கண்டால் உதை விழும். ஆனால் அதையும் லக்ஷியம் செய்யாமல் இயந்திர அரசனிடம் காண்டவன் மறுபடியும் செல்வான். பெரிய சக்கரத்திற்கும் சிறிய தொன்றிற்கும் சம்பந்தப்பட்டு சுற்றிச்சுற்றி வரும் ஒரு நாடாவை அவன் கவனித்து நிற்பான். அவ்வெள்ளை நாடாவில்

கருப்புத்துண்டு ஒன்று ஒட்டப் போட்டிருந்தது. அது திரும்பத் திரும்ப வரும்போது காண்டவன் ஆனந்த முறுவான். அப்பெரும் பேரிரைச்சலில் அவன் மனது அந்த நாடாவில் ஏகாக்ரதையாய் நிற்கும். பழைய எண்ணங்களெல்லாம் அவன் மனதில் உதித்தன. அவன் தேயத்தார் விக்ர ஹாராதனை செய்யும் வழக்க முடையவர். கல்லுக்கும் மண்ணுக்கும் ஆத்மாவை அளித்தால் அவைகளைவிட எவ்வளவோ உயிருள்ளதான இவ்வியந்திரத்திற்கும் ஆத்மா இராதா? காண்டவனே இன்னும் ஒரு காட்டாளே. ஆங்கிலேயரிடம் பழகினவனாயினும், நாகரீகம் அவனை ஊடுருவி நிற்கவில்லை. நிஜார், பூட்ஸ், மின்சார அனுபவம் இவைகளே அவனிடம் நாகரீகக் குறிகள். அவன் தந்தை ஒரு கல்லையே தொழுது வந்தவர். அவர் அபிஷேக அலங்காரங்களையும் அதற்கே செய்வார். ..........
இயந்திரத்தைத் துடைப்பது, சுத்தம் செய்வது முதலிய வேலைகளைச் செய்வதில் காண்டவனுக்குப் பிரியம் அதிகரித்தது. அவன் அதைக் கைங்கரியமாக எண்ணினான். சுத்தப்படுத்தி அலம்பியதும் பித்தளைப் பாகங்கள் சூரிய வெளிச்சத்தில் பிரகாசிக்கும். அதன் சமீபத்தில் போய் அவன் இயந்திரத்தை மெதுவாகத் தடவிக் கொடுப்பான். அவன் பூஜை செய்ய வேண்டிய தெய்வமோ வெகு தூரம் ஆப்பிரிக்காவில் இருந்தது. இங்கோ ஒரு பிரத்யக்ஷ தெய்வம் இருந்தது!

***

பயிற்சியில்லாத அவனது மனதில் இவ்வெண்ணம் நம்பிக்கையாகி ஊடுருவி, அவன் செய்கைகளிலும் அதை வெளியிடலானான். ஒரு நாள் சாலைக்குள் வந்ததும் இயந்திர தெய்வத்திற்குத் தலை வணங்கினான். பிறகு தினம் காலை மாலையிலும் அவன் அதைத் தன்னைக் காக்க வேண்டியும் ஜேம்ஸின் உதைகளிலிருந்து தன்னை விடுவிக்கவும் வேண்டலானான். ஒருநாள் அவன் பிரார்த்தனை முடிந்ததும் மேல் திறந்திருந்த ஜன்னல் வழியாக ஒரு சூரிய கிரணம் உட்புக இயந்திரத்தில் பளிச்சென்றடித்தது. அப்பொழுதுதான் தெய்வம் தன் பூஜையை அங்கீகரிப்பதாகக் காண்டவன் நம்பினான்.

***

அதற்குப் பிறகு அவன் பக்தியும் ஊக்கமும் வளர்ந்தன. அவன் லாகூரில் ஒண்டியாயிருந்த உணர்ச்சி அவனை விட்டு விட்டது. தன் வேலை நேரம் முடிந்ததும் அவன் அச்சாலையிலேயே காலம் கழித்தான். அதற்குப் பிறகு ஜேம்ஸ் அவனை உதைத்த போதெல்லாம் தன் இஷ்ட தெய்வத்தினிடம் சென்று 'ஈசா! பார்த்தீரோ?' என்பான். இயந்திரத்தின் பேரிரைச்சலில் 'விஹீம்' என்ற ஒரு சப்தம் பிறந்தால், தன் பிரார்த்தனையைத் தெய்வம் செவி கொடுத்ததாக அவன் எண்ணுவான். ஜேம்ஸைத் தண்டிக்க இன்னும் காலம் வரவில்லை. தெய்வம் நின்று கொல்லும் என நினைத்துச் சாந்தமா யிருப்பான். இதற்கேற்ப ஒரு நாள் மெஷீனில் வேலை செய்த ஜேம்ஸ் அஜாக்கிரதையினால் தன் விரலில் ரணகாயம் செய்து கொண்டான். 'இதுதான் தெய்வத்தின் எச்சரிக்கை! தெய்வம் பொறுத்தே தண்டிக்கும்' எனச் சொல்லிக் கொண்டான் காண்டவன். ஜேம்ஸ் காண்டவனுக்குத் தான் இல்லாத சமயத்தில் மெஷீனை ஓட்ட சில விஷயங்களைச் சொல்லிக்கொடுத்திருந்தான். அதனால் இயந்திரம் பூராவும்



அநேகமாகக் காண்டவன் பார்வையிலேயே வேலை செய்யும். ஆனால் அவன் அடிக்கடி இயந்திரத்தினிடம் செல்வதைப் பார்த்த ஜேம்ஸ் 'இவன் ஏதோ செய்கிறான்' என்ற சம்சயம் பிறந்து 'காண்டா! ராஸ்கல்! இனி மெஷீன் சமீபத்திற் சென்றால் முதுகுத் தோலை உரித்து விடுவேன்' எனக் கூவினான். மேலும் ஒரு நீக்ரோவிற்குப் பிரியமான எதையும் தடுக்க வேண்டியதுதானே ஆங்கிலேயனான ஜேம்ஸின் கடமை!.........ஆனால் காண்டவன் அச்சமயம் ஜேம்ஸ் சொற்படி நடந்தானாயினும் அவன் ஊக்கம் சிறிதும் குன்றிய பாடில்லை. ஒரு நாள் அவன் இயந்திரத்திற்குச் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்யும்பொழுதே யஜமானனால் பாதபூஜையைப் பெற்றான். அவன் மெல்ல எழுந்து இயந்திரத்தின் பின்னாற் சென்று ஜேம்ஸைச் சபித்தான். அவன் காதுக்கு அப்பொழுது இயந்திரத்தின் பேரிரைச்சலில் தனி ஒலி ஒன்று கேட்டது. அது அவன் பாஷையில் நான்கு வார்த்தைகளைப்போல் உச்சரித்தன. ஈசன் காண்டவன் பக்கமே இன்னும் இருக்கிறார். அவனுக்கிழைக்கப்படும் தீங்குகளை அவர் கவனித்துப் பொறுத்து வருகிறார். தெய்வம் நின்று கொல்லும் என்று யந்திர தெய்வம் பேசுவது போல் அவனுக்குக் கேட்டது. உடனே அச்சமயம் தெய்வ ஆக்ஞை யொன்று பிறந்ததுபோல் அவனுக்குத் தோற்றிற்று.

***

பைத்தியத்தை இன்ன தென்று சொல்வது கடினம்! ஆனால் காண்டவனின் மனம் அந்த ஸ்திதியில் நின்றது. இயந்திரத்தின் பேரிரைச்சலும், தன் மனதை வெளியிட நண்பனில்லாததும் தனக்குத் தானே யோஜனை செய்வதும், அவனை ஆச்சரியமான தீர்மானத்திற்குக் கொண்டு வந்து விட்டது. இயந்திரத்தினால் உச்சரிக்கப்பட்ட நாலு வார்த்தைகளும் 'ஜேம்ஸை எனக்குப் பலிகொடு' என்று சொல்வது போல் அவனுக்கு விளங்கின. இதைக்கேட்ட நீக்ரோவிற்கு மனம் குளிர்ந்தது. தெய்வத்தின் ஆக்ஞையை நிறைவேற்றும் பேரின்பம்; தன்னை உதைத்துத் தள்ளும் ஐரோப்பியர் தொலைவதில் இன்னும் இன்பம்.

* * * * * * * * * * *

அன்றிரவு ஜேம்ஸும் காண்டவனும் சாலையில் இருந்தனர். ஒரே ஒரு மின்சார விளக்கு உயர எரிந்து கொண்டிருந்தது. உலகம் பூராவும் ஆழ்ந்த துயிலில் அமர்ந்து விட்டது. ஆகாயத்தில் சில நக்ஷத்திரங்கள் மின்னின. எங்கும் பெரும் நிசப்தம். ஆனால் இங்கோ பேரிரைச்சல். காண்டவன் தானிருந்த இடத்திலே யிருந்து இருட்டிலேயே நடந்து வந்தான். 'ப்ரூட்! என்ன செய்கிறா யங்கே, மெஷினைத் தொட்டால் தோலுரியும்' என்றான் ஜேம்ஸ்.

மறு நிமிஷம் உயர இருந்த ஒரு விளக்கும் அணைந்தது.

***

அடுத்த க்ஷணம் எஜமானனும் சேவகனும் கட்டிக் கொண்டும் திமிறிக் கொண்டும் இருந்தனர். "நாயே! என்ன செய்கிறாய், இயந்திரத்தினிடம் போனால் சிதறிப் போவாய்" என்றான் ஜேம்ஸ். அப்படிச் சொல்லும்போதே காண்டவன் ஜேம்ஸை உயரத் தூக்கிக்கொண்டு விட்டான். அப்போது தான் ஜேம்ஸுக்கு காண்டவன் தன்னை இயந்திரத்துக்குப் பலி

கொடுக்கப் போவதாய் அறிந்தான். அதே நிமிஷம் ஜேம்ஸின் தலை மயக்கமுற்றுச் சுழன்றது. அவனது தொப்பி யந்திர சக்கரங்களின் மத்தியில் விழுந்து சின்னா பின்னமாயது. ஜேம்ஸ் இதைக் கவனித்தான். தக்ஷணமே தன் பலத்தை யெல்லாம் சேர்த்துத் திமிறிக் கொண்டு காண்டவனிடமிருந்து விடுபட்டு வெளியில் ஓடினான். அந்தச் சமயத்தில் காண்டவன் தன்னையே மறந்தவனாகி இயந்திர தேவதையின் ஆவேசத்தால் பூரிக்கப்பட்டவனாய் தன் இயந்திர தெய்வத்திற்குப் பிரீதி செய்வதிலேயே திருஷ்டியுள்ளவனாய் மிகு பயங்கரத் தோற்றமாகக் காணப்பட்டான். ஏற்கெனவே அவன் உருவம் பயங்கரம். அதில் இயந்திர தேவதையின் பலிப் பிரீதியும் ஆவிர்ப்பவித்து விட்டாலோ!

***

இப்போது இயந்திர தெய்வம் மூல விக்கிரகம். அது தன்னிருப்பிடத்திலிருந்தும் அசையாதது. காண்டவனோ இப்போது உத்ஸவ விக்கிரகம். உத்ஸவ விக்கிரகத்துக்கே எல்லா உத்ஸவங்களும் நடக்கும். காண்டவயந்திர உத்ஸவ விக்கிரகம் தான் ஆட்கொண்டருளவேண்டிய பலி தன் கையிலிருந்தும் தப்பித்துக் கொண்டு ஓடுவதைக் கண்டதும் மிகுந்த ஆக்கிரகத்துடனும் அதைப் பின் தொடர்ந்தது. போதாக் குறைக்கு அப்போது ஒரு கனத்த மழை திடீரென்று வந்து அந்தத் தொல்லையுங் கூட.

***

என்ன இருந்தபோதிலும் காண்டவப் பூசாரியின் கையில் மானிட உடல் சிக்கிக் கொண்டது. மிக்க ஆவேசத்துடனும் காண்டவப் பூசாரி அம்மானிட உடலுடன் யந்திரத்தினிடம் ஓடினான், உயரத் தூக்கினான், இயந்திரத்தின் இரு சக்கரங்களுக்கு இடையில் எறிந்தான். அந்த ஆவேசமத்தியிலும் அவனுக்குச் சிறிது புத்தி யிருந்தது. எனவே மின்சாரம் தன்னைப் பாதிக்காமல் இருக்கக் காண்டவன் தூர நகர்ந்தான்.........ஜேம்ஸின் உயிர் அனாயாசமாக உடலைவிட்டுப் பிரிந்தது........சூரியன் குஞ்சாகிய விளக்கைக் கூரைக்குள் பத்திரப்படுத்தப் போய் கூரையே பற்றிக் கொள்ளும்படி விட்டவனையும் காண்டவனோடு சேர்த்துக் கொள்ளலாம்.

* * * * *

லாகூர் ஸ்டேஷனில் ஒரு நிமிஷ நேரம் மின்சாரப் போக்கில் தடை ஏற்பட்டது. அங்கிருந்து அனுப்பப்பட்ட போர்ட்டர் காண்டவனை வாயிலிற் கண்டு வினவினான்; காண்டவனும் பதிலளித்தான். ஆனால் அவன் பேசியது போர்ட்டருக்குப் பூராவும் விளங்கவில்லை. மறுநாட் காலை ரயில்வே மானேஜரே சாலைக்குள் நுழைந்தார். அங்கு யாவும் சரியா யிருந்தது. இயந்திரமும் சரியாகவே ஓடிக்கொண் டிருந்தது. எங்கோ மயிர் பொசுங்கின துர்நாற்றம் தெரிந்தது. நன்றாகச் சுற்றிப் பார்த்ததில் மானேஜர் ஒரு ஓரத்திற் கசங்கி உருவில்லாமற் கிடந்த ஜேம்ஸைக் கண்ணுற்றார். அக்கோரக் காட்சியைக் காணச் சகியாது திரும்பி விட்டார். மறுநாள் தினசரிப் பத்திரிகைகளில் 'பிரபல மின்சார பண்டிதரான ஸர் ஜேம்ஸ் ஸ்லோப் ரூக் (ஆம் அதைச் சொல்ல மறந்து விட்டோம்; ஜேம்ஸின் பாண்டித்யத்தை மெச்சி அரசாங்கத்தார் அவருக்கு ஸர் பட்டம் அளித்திருந்தனர்.) ஏதோ காரணத்தினால் தற்கொலை புரிந்து கொண்டார்; இது தேசத்திற்குப் பெரும் நஷ்டமாகும்' எனச் சமாசாரம் வெளிவந்தது.



காண்டவன் இக் கோரச் செய்கையைச் செய்ததும் சிறிது பயம் அவனுக்கு உண்டாயிற்று. ஆனால் நம் இயந்திர அரசன் 'நம்மைக் காக்கும்' என்ற பூரண நம்பிக்கை அதை நிவர்த்தித்தது. அவனை எவரும் சந்தேகிக்கவே இல்லை. அங்கு வந்த ரயில்வே மானேஜர் கூட 'நீ ஜேம்ஸ் தற்கொலை புரிவதைக் கண்டாயா?' எனக்கேட்டார். தான் அப்போது வெளியிற் சென்றிருந்ததாகவும், இயந்திர இரைச்சலில் ஏதோ மாறுதல் கேட்கவே அவ்விடம் வந்ததாகவும் தெரிவித்தான். கொலை என்ற ஐயமிருந்தாலல்லவோ கொலையாளி யாரென ஐயம் பிறக்கும்!

***

இரண்டுநாட்கள் கழிந்தன. ஊரில் இதைப்பற்றிய பேச்சும் நின்றுவிட்டது. இயந்திரம் சரியாக ஓடினது. ஜேம்ஸின் உடலும் புதைக்கப்பட்டது. ஜேம்ஸின் ஸ்தானத்தில் ரயில்வே மானேஜரே இப்போது வேலை பார்த்து வந்தார். ஜேம்ஸைவிட அவர் உயர்குலத் துதித்தவ ராதலாலும் பழக்க மின்மையாலும் காண்டவன் தன் உண்மை வேலை யிடமாகிய நிலக்கரிச் சாலைக்குத் தள்ளப்பட்டான். அங்கிருந்தபடி பின்புறமாக இயந்திரத்தினிடம் வந்து 'தெய்வமே! என் பலியை ஏற்றுக் கொண்டாயா?' என்று கேட்க, ஜேம்ஸை உயிருடன் தின்ற அத்தெய்வம் கர்ஜித்தது. தன் பலி ஏற்றுக் கொள்ளப்பட்டதென அறிந்தான் காண்டவன். இவ்வளவு சீக்கிரமாகவும் தயவில்லாமலும் எம் மனிதனும் கொல்லப்பட்டதில்லை. ஆனால் பூதாகாரமான அவ்வியந்திரம் முன் போலவே சுழன்றது. இது உண்மையில் பெருந் தெய்வமே.

புதிதாக வந்த மானேஜர் ஏதோ எழுதிக்கொண் டிருந்தார். பின்புறமாக வந்த காண்டவனை அவர் கவனிக்கவில்லை.

தெய்வத்திற்கு இன்னும் பலி தேவையா? அதன் பக்தன் பலி யளிக்கத் தயார் என்றான் காண்டவன்!

மானேஜர் ஏதோ காரியமாக சிறு மெஷீன்களிடம் சென்றுவிட்டுத் திரும்பி வந்தார். இப்போது இருட்டிலிருந்த காண்டவன் ஒரே தாவாய்த் தாவி அவரை இடுப்பால் தூக்கினான். மானேஜர் நல்ல பலசாலி. அவர் காலினாலும் கையினாலும் தன்னைப் பிடித்த பிடியை நெகிழச் செய்ய முயற்சித்தார். ஆனால் நீக்ரோவோ வெகு கஷ்டத்துடன் அவரை இயந்திரத்தினருகில் இழுத்துச் சென்றான். மானேஜர் தன் பற்களையும் உபயோகித்துத் தன்னைத் தூக்குகிறவனின் காதையும் கடித்தார், ஆனால் ஒன்றும் உதவுவதாகக் காணப்படவில்லை.

R. இராமகிருஷ்ணன் பி. ஏ.

II

## பிற்பகுதி

புதிய மானேஜருக்குத் தான் காண்டவனால் தூக்கப்படுவதாகத் தெரியவில்லை. இறந்துபோன ஜேம்ஸ் இப்போது பேயாக வந்து தன்னைத் தூக்கி இயந்திர மத்தியில் எறியப் போவதாக நினைத்துக் கொண்டார். எப்படியோ தன் விசேஷ பலத்தைக் கொண்டு அந்த இருளில் ஜேம்ஸ் பேயிடமிருந்து மானேஜர் தப்பித்துக் கொண்டு ஓடிவிட்டார். காண்டவன் முன்

பேரல் ஓடிப் பிடிக்கவில்லை. காரணம் அவன் மூக்கின் மேல்பட்ட பலத்த குத்தினால் இரத்தம் பெருகிக்கொண் டிருந்ததால் தன்னை மறந்து நின்று விட்டான். அதே நிமிஷத்தில் ஒரு பிரகாச வெளிச்சம் தோற்றியது. அந்த வெளிச்சத்தில் காண்டவன் தன் எதிரில் ஜேம்ஸின் உருவத்தைக் கண்டு அலறினான். மறு நிமிஷம் இருள் கவ்விக்கொண்டது, உருவமும் மறைந்தது. ஜேம்ஸ் பேய் தான் தன் மூக்கில் குத்தியிருக்கும் என்று எண்ணினான்.

***

ஓடிப்போன மானேஜர் சிலருடன் இயந்திரத்தின் அருகே மறுபடி வந்தார். காண்டவன் முகமெல்லாம் ரத்த மயமாய்க் கதறிக் கொண்டிருந்ததைக் கண்டார். அவனை என்னவென்று விசாரிக்க, அவனும் தான் செய்யவிருந்த பலியை மூடிவிட்டு, மற்றொரு உண்மையாகிய ஜேம்ஸ் பேய் தன்னை அறைந்ததை மட்டும் வெளியிட்டான். மானேஜர் உண்மையாகவே அவன் மூக்கில் அடிக்கவில்லை,—பிறகு—அடித்தது யார்? ஜேம்ஸ் பேய்தான் மானேஜரைத் தூக்கிற்று; அவர் தப்பி ஓடவே கோபம் கொண்டு காண்டவனின் முகத்தில் அறைந்தது—என்று எல்லோரும் தீர்மானித்தனர். இரண்டா முறையும் காண்டவனை அவன் காரியம் வெளிப்படாமற் செய்து தப்புவித்தது இயந்திர தேவதையின் மகத்துவ மல்லவா?—அதன் அநுக்கிரக மல்லவா? (மறு ஸஞ்சிகையில் முடிவு.)

எஸ். ஜி. இராமாநுஜன்.

---

# பத்திரிகா அபிப்பிராயங்கள்

## I

“பிரசித்திபெற்ற ‘ஆங்கில ஆசான்’ என்ற அரிய நூலின் பதிப்பாசிரியரான ஸ்ரீமான் தி. இராஜகோபால் முதலியாரவர்களால் இவ்வருடம் சித்திரைமீ முதற்றொடங்கி வெளியிடப் பெறும் “ஆநந்த குணபோதினி” என்ற அரிய சஞ்சிகையின் முதல் இதழ் வரப்பெற்று மகிழ்ந்தோம். பல நூல்களை எழுதியவரும், “பிரஜாநுகூலன்” ஆசிரியருமான ஸ்ரீமான் எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு அவர்கள் இதன் ஆசிரியராவர். ஆசிரியரது கல்வித்திறனும், பத்திரிகை நடத்தும் தொழிலிலுள்ள அனுபவத்தையும் தமிழ்நாடு நன்கறியும். பத்திரிகை உயர்ந்த பதிப்பில் அதிக பக்கங்களுடன் அழகாய் விளங்குகின்றது. கட்டுரைகளின் சேர்மையும் கோர்வையும் சிறப்பாகவே அமைந்துள்ளன. பழமொழிக் குறிப்புகள், விகடப் பிரதாபன் முதலிய இது போன்ற பல விஷயங்களும் குறிப்பிடத்தக்கன. அநுபவ ஞானமே சிறந்துள்ள இப்பத்திரிகை தலை சிறந்த தமிழ்நாட்டுச் சஞ்சிகைகளில் ஒன்றாகும்.”—“தணிநீதி”



## II

ஆநந்த குணபோதினி ;—இதில் பல ருசிகரமான விஷயங்கள் காணப்படுகின்றன. இதன் ஆசிரியர் ஸ்ரீமான் இராமாநுஜலு நாயுடுவின் சொற்றிறம் பொருட்டிறத்தையும் ஸ்வாரஸ்யத்தையும் அறிந்தவர்களுக்கு இப்பத்திரிகையைப்பற்றி அதிகம் கூறுவது மிகையே. அநேக ஆண்டுகளாக அவர் ஸ்ரீரங்கத்தினின்றும் வெளியாகும் “பிரஜாநுகூலன்” என்னும் மாத சஞ்சிகையின் ஆசிரியரும் சொந்தக்காரரும் ஆவர். அவர் அனுபவ வாக்கியங்களுக்குக் களஞ்சியமாவர்; ருசிகரமான கதைகளுக்கோர் பொக்கிஷ மாவர். ஈண்டு ஆராயப்படும் “ஆநந்த குணபோதினி” பிரதிகள் அவருடைய கதைகளாலும், மொழிகளாலும், கருத்துக்களாலும் சித்தரித்து அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. வேறு சில அறிவாளர்களின் விஷயதானமும் உளது. குறைந்த சந்தாவில் உயர்ந்தவொரு மாதசஞ்சிகை என்பதில் தடையில்லை. பதிப்பாளர் ஸ்ரீமான் தி. இராஜகோபால் முதலியாரின் முயற்சி போற்றத் தக்கதே.

கோலாலம்பூர்—“தமிழ்நேசன்”

## III

“ஆநந்த குணபோதினி”—இம்மாதாந்தப் பத்திரிகையின் அற்பிசி மாதச் சஞ்சிகை வரப்பெற்றோம். வழக்கம் போலவே இதில் நவீனகங்கள் விளங்குவதல்லாமல், அனுபவரீதியான அம்சங்கள் பல பொதிந்திருக்கின்றன. தீபாவளியின் சம்பந்தமான குறிப்புகள் மனதைக் கவர்கின்றன. ஆனந்த தரிசனத்தின் தூய்மை செப்பவொண்ணாது. கேதாரி கௌரி விரதத்தைப் பற்றிய வியாசம் மகிமையைத் தருகின்றது. இவ்வளவு சீராக வுள்ளதன் மர்மம் இப்பத்திரிகைக்கு நந்தமிழ் நாட்டுத் திலகங்களுள் ஒருவரான ஸ்ரீமத் திரிசிபுரம் எஸ். ஜி. இராமானுஜலு நாயுடு ஆசிரியராக அமர்ந்திருப்பதேயாம். நேயர்கள் இப்பத்திரிகைக்குப் போதிய ஆதரவளித்துச் சிறப்பிப்பது ஒருபோதும் வீணாகாது. இப்பத்திரிகையின் ப்ரொப்ரைடரான ஸ்ரீமத் தி. இராஜகோபால் முதலியார் இதனிமித்தம் கொண்டிருக்கும் ஆர்வம் சாலச் சிறப்புடைத்து.

“இந்து நேசன்”

---

## பதிலுக்குப் பதில்

ஒரு உண்மையான சிநேகி
தனை அடைய விரும்புகிறவ
னுக்கு உண்மையான வழி, தானும்
கபடமற்று ஒரு உண்மையான
சிநேகிதனாக இருப்பதே.

| விவேகம்<br>விநோதம்<br>விசித்திரம்<br>விகடம் | **விகடப் பிரதாபன்**<br>**(Registered.)** | அநுபவம்<br>அற்புதம்<br>ஆச்சரியம்<br>ஆநந்தம் |
|---|---|---|

# சென்னப்பட்டினத்துச் சிறப்பு!

## I.



"கெட்டவன் பட்டணம் சேர வேண்டும்" என்று என்னைக் காட்டிலும் கோமாளி எவனோ ஒருவன் சொல்லி விட்டதை ஆதாரமாய் வைத்துக் கொண்டு, பட்டினமென்றால் அதுதான் பாக்கிய லோகமென்று கனவு காண்போர் அநேகர்! ஆ! ஹா!! ஹா!!! சென்னப்பட்டினத்தின் சிறப்பென்ன, சிங்காரமென்ன, அதன் மாட கூட மணிக்கூண்டுகளின் மாட்சிமையென்ன, வீதி பாதை தெருச்சாலைகளின் விசித்திரமென்ன, கோட்டை கொத்தளம் கொடி மரங்களின் குஷால்களென்ன, மகர தோரண மணி மண்டபங்களின் வைபவமென்ன, தேர் திருவிழா திருக்கோயில்களின் சிறப்புகளென்ன, கப்பல் ஸ்டீமர், கடற்கரை யுல்லாசக் காட்சிகளென்ன, குதிரை சாரட்டுகள் கொக்கரித்தோடும் கோஷங்களென்ன, நீதிச்சாலைகள், கல்விச்சாலைகளின் நிர்மாணங்களென்ன, சின்ன கோர்ட்டுகள் பெரிய கோர்ட்டுகளின் சிங்காரமென்ன, வைத்தியசாலைகள் பைத்தியசாலைகளின் மகத்துவமென்ன? கனத்த பெருத்த பிரபலஸ்தரின் கண் காணிப்பென்ன-என்பதாகவும், இன்னும் பலவாறாகவும் தூக்கத்திலும், ஏக்கத்திலும், புதிய ஊக்கத்திலும் சென்னப்பட்டினத்தின் மேன்மையை ஓயாமல் நினைத்துக்கொண்டு இருக்கிறார்களே! இந்தப் பட்டினத்தின் சிறப்புகளை, சொகுசுகளை மிக்க விபரீத அநுபவ ஞானப் புறட்டனாகிய நான் சொல்லிக்கொண்டு வரட்டுமா-கேட்கிறீர்களா நீங்கள்!

***

எல்லாம் நெருங்கிப் பார்த்தால் தான் எல்லா நாற்றமும் தெரியும். உறவு இருக்கிற விதமும், அதற்குள்ளே அழுகிக்கொண்டு கிடக்கிற சங்கதியும் விளங்கும். எந்த அருமை மாமி வீட்டிலும் மருமகன் சில நாள் தங்கி விட்டானானால் மரியாதை படிப்படியாய் இறங்கிக் கொண்டு வருவதை அவனே நேருக்கு நேரில்



காண வந்துவிடும். அப்படியாக, பட்டணம் பட்டணம் என்கிற பசப்பிலே, அதில் சில நாள் வாழ்ந்து பார்த்தால் அதன் பவிஷும் வெளியாய்விடும். பிழைப்பற்றவன் பட்டணம் போக வேண்டுமென்கிறான். படித்துக் கெட்டவன் தனக்குப் பட்டணமே புது வாழ்வு தரும் என்று மனக் கோட்டை கட்டுகிறான். பெண் தேட விரும்புவோன் பட்டணமே நாகரீகப் பெண் கிடைக்குமிடம் என்கிறான். நூலாசிரியன் தன் நூலை அச்சிடப் பட்டணமே சரி யென்கிறான். வியாபாரி தன் வர்த்தகத்துக்குப் பட்டணமே லாயக்கு என்கிறான். இப்படியே ஒவ்வொருவரும் பட்டணம் என்றாலே ஆ!, என்று வாயைத் திறக்கிறார்கள். வந்து பார்த்தாலல்லவா வாழ்வு தெரியும். அவ்வாழ்விலுள்ள செலவினங்களின் பெருக்கு அப்போதல்லவா விளங்கும். தூரத்துப் பச்சை எப்போதும் கண்ணுக்கு அழகுதானே! இரவிலே படுக்கத் திண்ணை கூடத் தராத ஊர் பட்டணமென்று யாருக்குத் தெரியும்? அப்படிப் படுத்தாலும் காது அறுபடும் சங்கதியை நடுக் காட்டிலே கிராமத்தில் படுத்துறங்கும் நாட்டுப்புறத்தான் எப்படி அறியப் போகிறான்! ஆகவே, பட்டணத்துக் கதையைக் கொஞ்சம் விகடன் விரிக்கிறேன். நீங்களும் வரிசை வரிசையாய்க் கவனித்து வாருங்கள்!

***

சிங்காரச் சென்னைமா புரியை அதிகாலையிலிருந்து அடுக்கடுக்காய்க் கவனியுங்கள்! தூங்கி எழுந்து கண்ணை நிமிட்டிக்கொண்டு வெளிப் புறப்பட்டவுடன் வாசற்படியிலோ வீதியிலோ முனிசிபல் டபிள் (Double) எருது சாரட்டாகிய குப்பை வண்டி தரிசனம் முதலில் கிடைக்கிறது. இதுதான் பட்டணத்து முதல் கோபுர தரிசனமாக்கும்! முந்தின காலத்தி லென்னவோ ஸ்திரீகள் வைகறையில் கணவருக்கு முன் துயிலெழுந்து முகம், கால், கை கழுவி, தெரு வாசல் முதலியன பெருக்கி, சாணமிட்டுக் கோலம் தீட்டி, வீட்டையலங்கரித்து, பிறகு நெற்றியில் திலகத்துடனுள்ள தமது மலர்ந்த முகத்தோடும் தமது பிராணபதியை வந்து எழுப்புவார்களாம்! அந்தக் காலையில் புருஷன் முதல் முதல் தன் வாழ்க்கைக் கண்ணாட்டியான தன் சொந்த பெண்டாட்டியின் முகத்தைத் தரிசனம் செய்வானாம். ஆனால், தற்காலத்திலோ வீட்டு இராஜாத்திகள் பட்டண வாசத்திலே காலையில் பொழுது விடிவது கூடத் தெரியாமல் கொரட்டை விட்டுத் தூங்க நேரிட்டுப்போகிறது! இந்த அழகில் அருமை மனைவியின் அலங்கார வதன தரிசனம் எங்கே கணவனுக்குக் கிடைக்கப்போகிறது? இவன் போய் தூங்கும் சுந்தரியைத் தட்டி எழுப்பவேண்டியது தான்! இதைவிட்டு வெளியே வந்தால், ஐயோ! அந்த அசங்கித வண்டியின் தரிசனம்! இதுவும் சென்னப்பட்டணத்துச் சிறப்புகளிலே ஒன்று!

***

அப்புறம் சாக்கடையை நோண்டி கிண்டி கிளறி சும்மா அடங்கிக் கிடக்கிற கசுமாலத்தை எல்லாம் வெளிக் கிளப்பிவிடுகிற முனிசிபல் சாக்கடை உத்தியோகஸ்தர்களையும், அவர்களுக்கு ஒரு படி உயர்ந்த சாக்கடை மேஸ்திரிகளையும், அவர்களுக்கு அடுத்தாற்போல் ஒரு கூடையும் துடைப்பக்கட்டையும் எடுத்துக்கொண்டு வீடு வீடாய்ப் புகுந்து சாக்குகொண்டு வீதி வீதியாய்ப் போகும் ஒய்யாரக் கோமளாங்கிகளையும், அவர்களின் வண்டிகளையும், அவ்வண்டிகளின் சாரதிக

ளாகிய ஆணழகர்களுடைய சிறப்பையும் தரிசனம் செய்ய நேருகின்றது! இது காலையில் 6-மணி சங்கதி! இந்த மணி கடந்து ஏழு மணியானாலோ, அங்கங்கே வேலைக்காரிகள் வேலைக்காரர்கள் கூடைகளையும் தட்டுகளையும் தூக்கிக்கொண்டு ஆப்பம், ரொட்டி சந்தைக் கடைச் சாமான்கள் முதலியவைகளை வாங்கப் புறப்பட, அவர்களின் வெகு வேக நடை—பசந்தான உடை—இவற்றின் வேடிக்கை சென்னப் பட்டினத்தில் ஒரு பெரும் சிறப்பாயிருக்கும்! ஏழு மணி கடந்து எட்டு மணியானாலோ, அப்போதுதான் இருக்கிறதையா சென்னை புரியின் சிறந்த கண்காட்சி! நாட்டுப்புறங்களிலிருந்து பிழைக்க வந்திருக்கிறார்களே, — காட்டான்—மோட்டான்—காக்கான் — மூக்கான்களாகிய கட்டை வண்டிக்காரக் கண்ராவி மனிதர்கள்—தங்களின் பார வண்டியைப் பிடித்துக்கொண்டு செட்டு செட்டாய்ப் புறப்படும் வேடிக்கை வெகு தமாஷாயிருக்கும்! அடி அடியென்று இவர்கள் வண்டி யடிக்கும் சப்தமும், அவ்வண்டிகள் பள்ளங்களிலே தொட்டுப் புட்டென்று—மேடுகளிலே லொட்டு லொசுக்கென்று ஏறும் சப்தமும், காலை முதல் மாலை மட்டும் இச்சென்னப் பட்டினத்தையே ஆகாயத்தில் கொண்டுபோய் அலறவைத்துவிடும்! அப்புறம் ஒன்பது பத்து மணியானாலோ, பாருங்களேன் வேடிக்கையை! ஆபீஸ் உத்தியோகஸ்தர்கள் அடுக்கடுக்காய்ப் புறப்படுவார்களய்யா! அவர்களுடைய டீக்கென்ன, போக்கென்ன, மீசைமுறுக்கென்ன, தலைப்பாகையின் பளபளப்பென்ன, கோட்டென்ன, பூட்ஸென்ன, வெள்ளை வெளேரென்று சுண்ணாம்பு சுவரைப்போன்ற உடுப்புகளின் ஒய்யாரமென்ன, தாம்பூலம் மெல்லும் தளுக்குச்சிங்காரமென்ன, தும்பிக்கொண்டே போகும் சோக்கு என்ன, நாமம்—பொட்டு—விபூதி இவைகள் அவர்கள் நெற்றியிலே அழகு தந்து துலங்கும் சுந்தரமென்ன, வண்டிகள்—ரதங்கள் புறப்படும் வரிசையென்ன, ரோடுகள் பாதைகளைத் தூம் தூம் பண்ணும் வேடிக்கையென்ன, ஜட்கா வண்டிக்காரருடைய கிராக்கி என்ன, அவர்களின் முறுக்குத் திருப்பு முறைப்புகளென்ன, பள்ளிச் சிறுவர் சிறுமிகள் அலங்காரமாய் நடந்து செல்லும் ஆநந்தமென்ன, இவைகளெல்லாம் சிறப்பிலும் மகா சிறப்பாயிருக்கும்.

* * *

பிறகு என்ன சிறப்பு என்பீர்களோ! அடடா! அந்தக் கண்ராவியையும் கேளுங்கள்! ஒரு ஜட்கா வண்டி ஒரு கிழவன் வயிற்றின்மேலேறி அவன் எமலோகம் போய்ச் சேர்ந்து விட்டானென்ற சேதிச் சிறப்பு! ஒரு கோச்வண்டி ஒரு பெண்மணியின் தலை மேல் ஏறி மண்டை நொறுங்கிப் போச்சுதென்ற சிறப்பு! ஒரு கட்டைவண்டி ஒரு குழந்தை மேல் ஏறி குடல் வெளியே வந்து விட்ட தென்ற சிறப்பு! ஒரு மோட்டார் வண்டி ஒரு பைஸிக்கில் வண்டியுடன் மோதிக் கொண்டதென்ற சிறப்பு! அந்த மோட்டாரே பலரைக் கொன்றுவிட்ட தென்ற சிறப்பு! கடைசியாக டிராம் வண்டியிருக்கிறதே—அது ஒருவன்மேலேறி அவனை ஒரு பர்லாங்கு தூரம் தரையிலேயே தொங்கத் தொங்க இழுத்துக் கொண்டு போனது என்ற ஒரு இழவு—பேரிழவுச் சிறப்பு! அது கடந்தாலோ, ஐகோர்ட்டு, சின்னக் கோர்ட்டுகளிலும், ரயில்வே ஸ்டேஷன்களிலும், ஜன சந்தடியின் மத்தியிலும் ஜேப்பில் கை



யிடும் தகல்பாஜீ டக்கான் முக்கான்களின் திருட்டுச் சிறப்பு எல்லா சிறப்புகளையும் வாரி விழுங்கி ஏப்பமிடும் பெரும் சிறப்பா யிருக்கும்! இது ஆனவுடன் என்ன சிறப்பென்கிறீர்களோ! இரயில் வண்டிகளின் கோஷ்டம்—பஞ்சாலை யந்திரங்களின் சங்கு நாதம்—வீதி வண்டிகளின் கடகடத்வனி — இவை போன்ற பலவும் சேர்ந்து தலைநோ யெடுத்துக் கொள்ளச் செய்யும் பெருஞ் சிறப்பு!

* * *

இப்படியே மத்தியானம் கழிந்து சாயந்திர மானாலோ, காப்பி ஹோட்டல்களின் சிறப்பு! அதற்கு மேல் அன்றைய தினத்துப் பத்திரிகைகள் வெளியான சிறப்பு! அதைப் பார்க்கக் கூட்டங் கூடும் படித்த புள்ளிகளின் பசந்தான சிறப்பு! பயாஸ்கோப்பு காட்சிச் சிறப்பு! இந்த உல்லாஸமான மாலைக் காலத்திலே தலைதட்டி கால்தட்டி கைதட்டி அண்ணாத்தைமார்களின் ஜெகஜால வித்தையின் சிறப்பு! வெளியூராரை மயக்க ஓட்டைப் பவுண்டன் பேனாவை விற்கும் சிறப்பு! ஓரணா சாமானை ஒரு ரூபாயென்னும் சிறப்பு! பிறகு பொழுது கொஞ்சம் சாய்ந்தாலோ வெள்ளை வெளேரென்று உடுத்திக்கொண்டு தெருவாசலில் நிற்கும் தேவதைகளின் சிறப்பு! அதன் பின் தீபம் வைத்தாலோ நாகரீக மதுக் கடைகளின் சிறப்பு! அப்பால் இரவில் உண்டுவிட்டு நாடகங்கட்குச் செல்லும் சிறப்பு!

* * *

நாட்டுப்புறத்திலே விளைகிற கத்தரிக்காய்களெல்லாம் எங்கே? இதோ பட்டணம் கொத்தவால் சாவடியில்! வாழைக் காய்களெங்கே? இதோ பட்டணத்தில்! காட்டில் விளையும் கருணைக் கிழங்குகளெங்கே? எள்ளு எங்கே? கொள்ளு எங்கே? பச்சைப்பயர் எங்கே? மொச்சைப் பயர் எங்கே? கம்பு எங்கே? சோளம் எங்கே? கேழ்வரகு எங்கே? தயிர் எங்கே? வெண்ணெய் எங்கே? எல்லாம் கிராமங்களிலிருந்து கிளம்பிப் பட்டணத்திற்கே பயணம் கட்டிக்கொண்டு வந்து விடுவதால், காட்டான்களும் அத்துடன் பட்டணத்தில் பிழைத்துக் கொள்ளலாமென்று வந்துவிடுகிறார்கள்! எல்லோரும் இங்கே குவிந்து கூலியும் குறைந்து போக, என்னென்னத்தையோ வாரிக் கட்டிக்கொள்ளலாமென்று வந்த நாட்டான், தன் ஊரில் மலையைப் பார்த்ததற்குப் பதிலாய் இங்கு மாளிகைகளாகிய மூன்றடுக்கு நான்கடுக்கு மெத்தைகளைப் பார்க்கிறான்! காடு செடிகளுக்குப் பதிலாய் உல்லாஸமான நந்தவனங்களைக் காண்கிறான்! ஆறு, குளம், ஏரி, கால்வாய், மடுகு முதலியவைகளுக்குப் பதிலாய் குழாய்த் தண்ணீர் கல்லிலும் சுவற்றிலும் இரும்பு ஸ்தம்பங்களிலும் உருவங்களிலும் ஜால வித்தைக்காரன் போல் ஜலம் சொரிவதைக் கண்டு ஆ-வென்று திகைத்து நிற்கிறான்! மற்றும் டிராம் வண்டி முதலிய புதிய காட்சிகளைக் கண்டு பிரமிக்கிறான்!—இன்னு முள்ள மற்றச் சிறப்புகளை மறு முறை வந்து கொட்டியளந்து விடுகிறேன். நீங்களும் அதற்கு எதிர்பார்த்திருங்கள்! ராம்! ராம்! சுபம்! ஜு! சுவாஹா!!!

# பெண்கள் பக்கம்

## பால்ய ஸ்நேகிதிகள்

கிரிஜா, பாமா இருவரும் பால்ய ஸ்நேகிதிகள். ஒரே ஊரில் ஒரே தெருவில் அண்டை அயல் வீடுகளில் வசித்தவர்கள். படித்த பள்ளிக்கூடம், விளையாடின இடம், சண்டையிட்ட காலம். இருவரும் உறவாடின பொழுது இவைகளை ஒருபோதும் மறந்தவர்களல்ல. விவாகமானதும், இருவரும் மாமியார் வீடு சேர்ந்தார்கள். கிரிஜா வைதீகனுக்கு வாழ்க்கைப்பட்டாள். பாமா இங்கிலீஷ் படித்தவனை மணந்தாள். இருவருடைய ஆசார விசாரங்கள் மாறுதலடைந்தன. சில வருஷங்களானதும் தாய் வீடு வந்தனர். பால்ய ஸ்நேகிதிகள் ஓர் இடத்தில் சேர்ந்து தம் சுக துக்கங்களைப் பேசலாயினர்.

கிரீஜா:—பாமா! உன் பாடு சுகம். ஒரு வேலையு மில்லை, வெள்ளை ரவிக்கையும், பெரிய கரைப் புடவையும், அழகாய் அணிந்திருக்கிறாய்.

பாமா :—ஸகி! என்ன சுகம்? வருகிற சம்பளம் வயிற்றுக்குப் போதவில்லை. காபி, நாடகம், விருந்து, மருந்து, ஸோடா, பாட்டு, சீட்டு, ஸோப்பு முக க்ஷவரங்களுக்கும் காணவில்லையே! வெள்ளை ரவிக்கைக்குப் பணச் செலவேது? கட்டியிருந்த வேஷ்டியில் ஒரு கெஜம் கிழித்துக் கொடுத்தார். இது கலியாணத்திற்கு வாங்கின புடவை. இன்னொன்று சாந்தி முகூர்த்தத்திற்குக் கொடுத்தது. வீட்டிலிருந்தால் 4½ ரூபாய் துணி தான்.

கிரீஜா:—பார்வைக்காவது அழகாயிருக்கிறதே. என்னைப் பார், பொழுது விடிந்தால் சிராத்தச் சமையல். எல்லார் வீட்டு சிராத்தத்துக்கும் நான் முழுகிப் பிண்டம் பொங்கவேண்டும். வயிறு கிழிய சோறு தின்னலாம். அதற்குக் குறைவில்லை. தக்ஷிணைக் காசுக்கள் தேய்ந்தும் தேயாமலும் வருகின்றன. பிராமணன் கெட்டியாய் முடிபோடுகிறார்.

பாமா :—கடனில்லாதவர்களுக்குச் சுகமே. உன் புருஷனுக்குச் செலவில்லை. காசை முடி போடுகிறார். வைதீகத்தில் வேண்டிய சம்பாத்யம் கிடைக்கும். இப்போது எல்லோரும் இங்கிலீஷ் படிப்பதால் வைதீகர்கள் குறைவாயிருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு வரும்படி அதிகம். லௌகீகன் ஏமாந்தவன். அவன் டம்பாசாரியாய்த் திரிந்தால்தான் நாலு பெயர்கள் மதிக்கிறார்கள். உன் வீட்டுக்கு யாராவது வந்தால் நீ காபி வைக்கிற வழக்கமுண்டா?

கிரீஜா :—போதும் என் வாயைக் கிளப்பாதே, வெட்கமாயிருக்கிறது. உன்னிடத்தில் சொல்லாமல் யாரிடத்தில் சொல்லிச் சிரிப்பேன். என் தமயன் உத்தியோகத்திலிருக்கிறானல்லவா? அவனுக்கு இரண்டாம் வேளை காபி கொடுக்க மன்னியின் தங்கை மாடியில் வந்தாளாம். என் புருஷர் அங்கே உட்கார்ந்திருந்தார். அண்ணாவுக்கு ஒரு லோட்டாவிலும், என் புருஷருக்கு ஒரு டம்ளரிலும் கொடுத்தாளாம். அண்ணா சூட்டை ஆற்றிக் குடிக்கையில் இவர் வாயில் காபியை தீர்த்தம் விடுவதுபோல் ஊற்றிக்கொண்டார். சூடு அதிகமானதால் நாக்குத் தாங்கவில்லை. பாத்திரத்தை வீசியெறிந்து வாயிலிருந்த காபியை அண்ணாவின் மேலும், எதிரிலிருந்த காமாக்ஷியின் பேரிலும் துப்பி, ஓடிவந்து என்னை யடித்தார். நான் காரணம் தெரியாமல்



விழித்தேன். இதற்குள் காமாக்ஷி, காபி முகத்தில் வடிய என்னிடம் வந்தாள். என் புருஷன் அவளைக் கண்டு ஓட்டமெடுத்தார். நான் ஒன்றும் அறியாதவளாதலால் காமாக்ஷியை என்னவென்றேன். அவள் விழுந்து புரண்டு சிரித்தாள். "வைதீகன் காபி குடித்த விதத்தைக் கேளடி" என்று பல்லவி பாடினாள். பாமா!! இதை விடத் துக்கமுண்டா? காலத்துக்கேற்ற கோலம் என்று கொஞ்சம் தெரிந்து கொள்ள வேண்டாமா?

பாமா:—கிரிஜா! உன் புருஷன் சமர்த்தை நான் கேட்டது போல், என் புருஷன் சமர்த்தைக் கொஞ்சம் கேள். வேஷ்டி கட்டத் தெரியாது. மாமனார் தெவசம் வந்தது. பெரிய மைத்துனருக்கு உடம்பு சரியில்லை. இவரே சிராத்த மந்திரங்களைச் சொல்லு வேண்டும். சாஸ்திரிகள் மந்திரம் சொன்னால், இங்கிலீஷில் ஏதோ பாட்டுகளைப் பாடினார். ஹோமத்துக்கு வைத்திருந்த நெய்யை வாழை இலையிலிருந்த பழத்துடனும் சேர்த்துத் தின்றாராம். பிதிர் தேவதைகள் வருகிறார்கள் என்றால், வைதீகர்களை ஆங்கிலத்தில் திட்டி 'பொய் சொல்வது பாபமாகும். இனிமேல் சொன்னால் எனக்குக் கோபம் வரும்' என்றாராம். கழுத்திலிருந்த பூணூலெங்கே என்று கேட்டதற்கு, 'வி. பி., சுத்தக் கயிறு இல்லை. அதனால் எடுத்துக் கொண்டேன்' என்றாராம். வந்தவர்கள் யாவரும் உருண்டுருண்டு சிரித்தனராம். எனக்குப் பொறுக்க முடியாத துக்கமுண்டாயிற்று. சாஸ்திரிகள் யாவரும் ஒன்று கூடி, பரம துஷ்டன், மூடன், சண்டாளன், கர்மப்பிரஷ்டனென்று பேசினர். இதைக் கேட்ட என் புருஷன் ஒரு பிரம்பு எடுத்துச் சென்று நான்ஸென்ஸ் கெட் டவே (Nonsense, Get away) என்று அடித்துத்துரத்தினாராம். என் மாமியாரிடம் நான் இதைத் தெரிவிக்க ஓடினேன். அந்தம்மாள் வருவதற்குள் இவர் வைதீகர்களைத் துரத்தி விட்டு அடுப்பங்கறையிலிருந்த பக்ஷணங்களைத் தின்று கொண்டிருந்தார். சிராத்தம் நடக்க வில்லை. சோற்றையும் போட்டுத் திட்டும் யார் வாங்குவது எனத் துரத்தி விட்டேன் என்றார். மாமியார் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டாள். அண்டை வீட்டார்கள் சிரித்தார்கள். கேட்டாயா! என் துக்கம் எப்பேர்ப்பட்டது?

கிரீஜா :—பாமா! இருவருடைய கதையும் வெகு வேடிக்கையாக இருக்கிறது. சுத்த வைதீகம், முழுதும் லௌகீகம், இரண்டும் கஷ்டமே. நம்மிருவருக்கும் பகவான் இவ்வித கஷ்டங்களை ஏற்படுத்தி யிருக்கிறார். தாய் வீட்டில் என் வைதீக வேஷத்தைக் கண்டு யாவரும் நகைக்கின்றனர். பதியே தெய்வமென்று நம்பியிருக்கிறவர்கள் வேஷ பூஷணங்களுக்காக அவரை உல்லங்கனம் செய்வது தர்மமா?

பாமா :—ஸகி! நல்ல வார்த்தையைச் சொன்னாய். ஒருவருக்காக நாம் சம்சார தர்மத்திலிருந்து நீங்குவது தப்பாகும். நம்முடைய அஸ்திர சஸ்திரங்களாகிய அழுகை முதலிய பிரயோகங்களால் பதிமாரை உத்தம நிலைமைக்குக் கொண்டு வரல் வேண்டும். வைதீகம், லௌகீகம் இரண்டையும் நாம் கற்றிருப்பது போல் அவர்களுக்கும் போதித்துத் தயார் செய்து புகழ் பெறுவதே நமக்குப் பூஷணம்.

கிரீஜா :—ஸகோதரீ!! என்னுடைய அபிப்பிராயமும் அவ்விதமே. ஜாதி யாசாரத்தைக் கைவிடுதலும் தவறு, மூடாசாரத்தை விடாமல் அனுஷ்

டிப்பதும் பிசகு. காலத்துக் கேற்றப்போல் கொஞ்சம் சீர்திருத்திக் கொள்வது நலம்.

இரண்டு சகோதரிகளும் சுக துக்கங்களை நெடுநேரம் பேசினார்கள். இன்னொரு சமயம் தாய் வீடு வரும்போது தன் சாமர்த்தியத்தைக் காட்டுவதாய் பாமா கூறினாள். கிரிஜா சுத்த வைதீகத்தை லௌகீகமாக்கி, வைப்பதாகத் தெரிவித்தாள்.

இருவரும் ஸந்தோஷத்தோடும் பிரிந்தனர்.

## சிறு மணித் திரள்

(357-ம் பக்கத் தொடர்ச்சி.)

176. சமாதானம் சொல்ல முடியாத பேர்கள் கோபித்துத் தானாக வேண்டும். தன் கக்ஷியில் பல மில்லாத வக்கீல் உறத்திப் பேசுவார்.

177. சிஷ்யர்களுடைய பாக்கிய மெல்லாம் குருவின் அந்தரங்க சுத்தியைப் பொறுத்திருக்கிறது. அதற் கேற்பப் போதனை.

178. மதம், ராஜீயம், ஸமூகம், செல்வநிலை முதலிய எல்லாத் துறைகளிலும் மேனாட்டு வாசனையால் நாம் அலைக்கப்படுகிறோம்.

179. தற்கால உற்பத்தி விநியோக முறைகளை ஜப்பான் கையாளாமல் இருந்திருந்தால், சீனாவைப் போலவே அதுவும் பிற்பட்ட நிலைமையில் இருக்கும்.

180. ஆடம்பரமற்ற தெய்வீக வாழ்வுதான் மனதுக்குச் சாந்தியளிக்க வல்லது. அப்படிப்பட்ட நிலைமையில், இந்தியா தனது சுபாவத்தை யிழந்து ஏன் நஷ்டத்தை நாட வேண்டும்? மேனாட்டு நாகரீகத்தை எதிர்த்து நிற்பது தான் ஆண்மைத்தனமாகும். (மகாத்மா)

181. தைரியவான்களாக வுள்ளவர்கள் கப்பல் மூழ்கிக் கொண்டிருக்கிற தென்பதற்காக, அதை விட்டுப் போய்விட மாட்டார்கள். ஆண்டவர் அருளால் காங்கிரஸ் மகா சபை ஒரு நாளும் முழுகும் கப்பலாகாது.
(மௌலானா ஷவ்கத் அலி)

182. கதர் உடுத்துவது சாயத்துக்காகவும், கரைக்காகவும், வெளிப் பெருமைக்காகவு மல்லாமல், கதரின் தத்துவத்தின் பொருட்டாகவே இருத்தல் வேண்டும்.

183. கிராமங்கள் புத்துயிர் பெற்றால் தேசம் புத்துயிர் பெற்று விடும்.

184. பூமியானது தனக்காக நிலைத் திருக்கவில்லை. தன்மீது வாழும் மக்கள் உயிர் வாழுமாறு நிலைத்திருக்கிறது. மரங்கள், புல் பூண்டுகள் பிராணி வர்க்கங்களுக்காக இருக்கின்றன. பிராணி வர்க்கங்கள் தம்மினு முயர்ந்த மனித வர்க்கங்களின் உதவிக்காக இருக்கின்றன. பூதாகாயம் நாம் சுவாசிக்க இருக்கிறது. இவ்வுலகத்திலே ஒரு புற் பூண்டாவது பிறருக்குப் படாததாக இருக்கவில்லை. ஆனால் ஆறறிவுள்ள மனிதன் மட்டும் தனது சுய நலத்தை நாடுவது இயற்கைக்கு முரணா யிருக்கின்றது. எனவே, ஒவ்வொருவரும் மற்றவருக்கு ஊழியம் செய்தும் உதவியாயும் இருக்கவேண்டும். அவ்வாறு இருப்போமானால் கடவுளுக்கே தொண்டு செய்தவர்களாவோம்.
(கோபால செட்டியார்.)



185. "ராஜீயத் துறையில் சுயநலம் கோருவது மகா பெரிய குற்றங்களில் ஒன்று. அதற்கு விமோசனமே யில்லை. ஸங்கத்திலிருந்து அத்தகையோரைத் துரத்தி விடுவதைத் தவிர வேறு பரிஹாரம் கிடையாது."
(எம். சிங்கார வேலு செட்டியார்.)

186. சிறு உத்தியோகஸ்தர்கள், தாழ்ந்த பதவியிலுள்ளோர்—இவர்களின் அல்ப தவறுதலும் பிரமாதமாக எடுத்துக் காட்டப்படும். ஆனால் பெரிய பதவியிலுள்ளவர்கள் செய்த அபாரமான பிழையோ வெகு ரகசியமாய் மூடப்பட்டு விடும். வெளிவரினும் அதற்கு ஒரு சமாதானம் தோன்றிக் கொள்ளும்.

187. கஷ்டகாலங்களில் விநோதமான நண்பர்கள் தோன்றுவர். இவர்களை நம்பித்தீரவேண்டிய விதி வசமும் வாய்க்கும். பல மோசங்களுக்கும், ஏமாற்றுதல்களுக்கும் ஆளாவோம். பொருள் விரயமும் ஸம்பவிக்கும்.

188. வித்தையானது ஸ்திரீக்கு அதிகமான மகிமையை யுண்டாக்கி, மிருக நிலையிலிருந்தும் உயர்த்தி தாம்பத்யஸுகத்தை விருத்திபடுத்த வல்லது.

189. யுத்த வீரனின் இரத்தத்தைக் காட்டிலும் குருவினுடைய மை மிகவும் பரிசுத்த முடையது.

190. 'பரிசுத்தம்' என்னும் கால்வாய் திறந்திருக்கும்போது மனிதன் தாமதிக்காமல் கடவுளிடத்தில் செல்லுகிறான்.

191. பணக்காரனைக் கொண்டு நிறை வேற்றிக் கொள்ளலாமென்று நினைக்கிற ஆயிர நினைவுகள் எல்லாம் ஏமாற்றத்திலே தான் முடிகின்றன. சித்தி பெறுவது எங்கேயோ! ஆனால், அதை விட ஒரு உண்மையான ஏழையை நம்பினால் அவன் தன் சக்திக்கு இயன்ற வரை உன் நினைவுகளை நிறை வேற்றி வைக்கப் பாடுபடுவான். ஏழைக்கு ஏழையே சரி.

192. மனிதன் தன் க்ஷேமத்துக்காக மாத்திரம் இவ்வுலகத்தில் வசிக்கவில்லை. தன்னுடைய க்ஷேமத்துக்கும் பிறருடைய க்ஷேமத்துக்குமே அவன் வசிக்கிறான்.

193. எப்போதும் கீழே விழாமலே இருப்பது ஒரு பெருமை யன்று. ஆனால் விழுகிற ஒவ்வொரு சமயமும் தளராமல் மறுபடியும் நீ எழுந்திருப்பது தான் பெருமை.

194. உத்தம ஸ்திரீகள் போகும் மார்க்கத்தில் நிச்சயமாகவே புஷ்பங்கள் தூவப்படுகின்றன. அதன் ஸுவாஸனையோ அவர்கள் நடந்து சென்று மறைந்த பிறகே தெரிகின்றன.

195. உதவி செய்தோன் தான் புரிந்த உதவியை உடனே மறக்கக் கடவன். ஆனால் அவ்வுதவியைப் பெற்றவனோ அதற்குச் சரியானபடி கணக்கு ஒப்புவிக்கத் தன்னால் ஆமளவும் நன்றியின் பாதையில் செல்லக் கடவன்.

## பண்டிதை விசாலாக்ஷியம்மாள் காலஞ் சென்றார்.

ஸ்ரீமதி பண்டிதை விசாலாக்ஷியம்மாள் அவர்களைத் தமிழ் நாட்டில் அறியாதார் இரார். தமிழ்ப் பெண்மணிகளுள் முதல் பத்திராசிரியராயும், நூலாசிரியராயும் வெளிப் போந்தவர் அவர்தான். அவரது நூல்கள் யாவும் பெண்மணிகளுக்குக் கண்மணி போன்று இலங்குவனவாகும். பதி பக்தியையும், ஈசுவர பக்தியையும் போதிப்பதில் அம்மையார்க்கு அபாரமான நிபுணத்வம் இருந்து வந்தது. அவரது நூல்களெல்லாம் உத்கிருஷ்டம் பொருந்தியவைகள். அவரது தமிழ் பாஷா நயம் வேறு எவரானும் ஸ்வீகரிக்க முடியாத விதமாகப் பரிமளித்துக் கொண்டிருந்தது. அவர் 1902-ம் வருஷ முதல் "லோகோபகாரி"ப் பத்திரிகையின் உதவி ஆசிரியராயும், பின் பத்திராசிரியராயும் விளங்கி விசேஷித்த பிரக்யாதியை யடைந்திருந்தார். "லோகோபகாரி"ப் பத்திரிகையை விற்றுவிட்ட பிறகு "ஹிதகாரிணி" என்ற உயரிய மாத ஸஞ்சிகையைப் பல வருஷங்கள் வரை பிரசுரித்து வந்தார். பத்திரிகா முகமாய்ப் பிரதி பத்திரிகைகள் தோறும் சொரிந்து வந்த வேதாந்த மாரியின் அற்புதமும் அதன் அருமை பெருமைகளும் அதை வாசித்து வந்தோர் தான் அறியவல்லார். அவரை ஒரு ஞானாசிரியை என்றும் சொல்லலாம். இளமை முதல் ஞானபக்தி வைராக்கியங்களில் சிறந்து நின்றார். அதி பால்யத்தில் பர்த்தாவை இழந்து தமது வாணாள் முற்றிலும் தபஸ்வினி போன்றும் காலங்கழித்தார். ஸங்கீதத்தில் அவருக்கிருந்த ஞானம் அபாரமானது. அதை நேரிற் பார்த்தவர்கள்தான் சொல்ல வேண்டும். கன்னடம், தமிழ், ஆங்கிலம், ஸமஸ்கிருதம் இந்நான்கு பாஷைகளிலும் நன்கு தேர்ந்தவர். இவரால் எழுதப்பட்ட நாவல்கள் ஒரு முப்பது போல் இருக்கலாம். தர்க்கத்தில் மிகவும் வல்லவர். இத்தகைய பிரபாவங்கள் கொண்ட இந்த மாது சிரோமணியார் தமது 42-வது பிராயத்தில் சென்ற அக்டோபர் மாதம் 25-ம் தேதியன்று சென்னை ராயப்பேட்டையிலுள்ள தமது "லலிதா விலாஸ" மாளிகையில் காலஞ் சென்று விட்டாரென்று அறிய மிகவும் துக்கிக்கின்றோம். "விசாலாக்ஷி" எனும் ஞானாசிரியை அஸ்தமன மானதால் அவரால் அறிவுச் சுடர் கொளுத்தப்பட்ட நாம் இப்போது இருளில் அகப்பட்டு விழிக்கின்றோம். நம்முடைய வியஸனத்தைப் பரிகரிப்போர் யார்? பகவானே! உம்முடைய யோசனையும் காரியமும் அற்ப மனிதர்களாகிய எங்களால் அறிய முடியுமோ? மிகச் சொற்ப வயதில் அதி சீக்கிரத்தில் ஜீவன் பிரிந்தது பரம துக்கத்துக்கிடம். பத்திரிகை உலகத்துக்கும், முக்கியமாய் ஸ்திரீ ஸமூகத்திற்கும் அவரது அந்தியம் அளப்பரிய பெரும் நஷ்டமாகும். ஞானகலா விலாஸினியான இவ்வம்மையின் எதிர்பாராத வியோகத்தை நினைக்குந்தோறும் எம்முடைய மனம் துக்கத்தால் மூடப்படுகிறது. ஆகவே, இச்சமயம் எதுவும் எழுதத் தோன்றவில்லை. அவரது குடும்பத்தாருக்கு நமது அநுதாபம்.

## விநோதம்

காபி ஹோட்டல்:—

—"ஏது இன்றைக்கு ஹோட்டலில் விலையுள்ள பக்ஷணங்களையே வாங்கிப் புசித்தது? வருமானம் அதிகமோ?"

—"அப்படி ஒன்று மில்லை. நான் புசித்ததின் செலவை மற்றொருவர் தரக் காத்து நின்றார். அவர் வாய் திறந்து சாதாரணப் பக்ஷணங்களுக்குச் சொல்லு முன், நான் விலையுயர்ந்ததைக் கேட்டு வாங்கிவிட்டேன். எவ்விதமும் அவர் தரவேண்டியது தானே!"

—"இதனால் அவரை ஏமாற்றி விட்டதாக எண்ணாதே. நீ "பிடுங்கித் தின்கிறவன்" என்று அவர் தெரிந்து கொண்டு, இனி இவ்விதம் தான் ஏமாற்றப்படாத வழியில் அவர் எச்சரிக்கை கொண்டு விடுவார். அத்துடன் உன் மீது வைத்த மதிப்பிலும் ஓர் அளவு குறைந்துவிடும். நீ ஏமாற்றியதன் பலன் இனி இது தான்."

***

ஆண் பெண் குறிப்பு:—

—"பெண் எப்படி? ஆண் எப்படி?"

—"பெண்ணோ மயக்குவதில் சமர்த்தை. ஆடவனோ நம்பச் செய்து ஏமாற்றி மோசம்போக வைப்பதில் மிக்க சாதுரியவான்."

***

துக்கம் விசாரித்தல்:—

சுந்தரம்:—கோவிந்தா! அந்த வீட்டுக்குத் துக்கம் விசாரிக்க வந்தவர் அழுத அழுகையைப் பார்த்தாயா? எத்தனையோ பேர் தேற்றியும் கூட அவர் அழுகை ஓயவே இல்லை. இறந்தவர் விஷயத்தில் அவருக்கு அவ்வளவு அன்பு போலிருக்கிறது.

கோவிந்தன்:—உண்மையாகவே துயரப்படுவோரின் முகம் பார்த்தாலே தெரியாதா? அதற்கு அழுதால்தான் தெரியுமா? ஆயினும் துக்கம் விசாரிக்க வேண்டியதின் ஒழுங்கு அது. முதலில் பெரிய அழுகை! பிறகு தான் அழுதது போதுமா என்று தனக்குள்ளாகவே ஆலோசித்தல்! அதன் பின் கண்களில் ஜலம் அவ்வளவு வராவிடினும் மூக்கை முக்கி முக்கிச் சிந்துதல்! தான் அதிக துயரம் காட்டுவதாகப் பிறர் எண்ணுகிறார்களா வென்று ஜாடையாகப் பார்த்தல்! மற்றவர் எப்போது அழுது ஓய்வரோ வென்று எதிர் பார்த்து அவர்கள் ஓய்ந்த பிறகு அதற்குமேலும் கொஞ்சம் தான் அழல்! பிறகு மற்றவர் தேற்றப் பெருமூச்சு விடுதல்! அப்பால் தணிந்ததுபோல் காட்டி இறந்தவர்களது 'சாவு' விவரங்களை—சங்கதிகளை விசாரித்தல்! அதன்மேல் சற்று துயரத்தோடு இருப்பதாக அபிநயம் இவ்வளவோடு இந்தக் காட்சி முடிந்து விடும். அப்பால் 'அழுதவர்' விருதாளியாக மாறிவிடுவார்! அதன்பின் நடக்கும் சங்கதிகள் சிரிப்ப மகத்விருக்கும்!

***

உதவிப் பத்திராசிரியர் :—

—“ உதவி ஆசிரியரின் வேலை என்ன ? ”

—“ தனது சொந்த அபிப்பிராயத்தைக் குப்பையில் எறிந்துவிட்டுத் தலைமைப் பத்திராசிரியரின் எழுதுகோல் போகிற வழியில் தானும் பின் பற்றிச் செல்ல வேண்டியதே.”

—“ அவ்வாறில்லாமல் தன் சுதந்தர அபிப்பிராயத்தைக் காண பித்தாலோ ?”

—“ இது தெரியாதா ? அப்பால் அவர் விடுதலைபெற்றுக் கொண்டு வீட்டிற்குப் புறப்பட வேண்டியது தான்.”

***

சரியான பதில் :—

யுவகன் :—கண்மணி, இவ்வுலகிலுள்ள பொருள்கள் யாவற்றினும் உன்னையே மேலாக எண்ணுகின்றேன், என்னை நீ எப்படியும் மணக்க ஒப்ப வேண்டும்.

யுவதி :—இவ்விதம் அசட்டுத்தனமாய்க் கேட்பவர் எவரையும் விவாகம் செய்வதில்லை யென்று எற்கெனவே தீர்மானித்துள்ளேன். எதுவரையும் பெண்கள் ஆடவர்களின் வசப்படா திருக்கின்றனரோ அவ்வளவு வரைக்குமே கௌரவம். அதன் பிறகு—விவாகத்தால் ஒன்றுனாலும் கூட— அடிதடியும் திட்டுகளும் தொடங்கிக் கொள்கின்றன.

---

# பெரியாரின் மொழிகள்.

1. Education is the manifestation of the *perfection* already in man.

Religion is the manifestation of the *divinity* already in man *Vivekananda.*

கல்வி யென்பது மனிதனுள் ஏற்கனவே அந்தர்கதமான பூரணத்வத்தின் வெளி உத்பவம்.

மதம் என்பது மனிதனுள் ஏற்கெனவே உள்ள தெய்விகத் தன்மையின் வெளி உற்பவமாம். விவேகாநந்தர்.

2. Mankind progresses in Utopias. *H. G. Wells.*

மனித ஜாதி மனக்கோட்டை கட்டியே வளர்ச்சி யடைகிறது. ஹெச். ஜி. வெல்ஸ்.

3. The evil that men do lives after them
The good is oft interred with their bones. *Shakespeare.*

மனிதர் செய்யும் தீமை அவர் காலத்திற்குப் பின்னும் வாழ்கிறது; அவர் செய்யும் நன்மைகளோ அவருடனேயே புதைக்கப்படுகின்றன. ஷேக்ஸ்பியர்.



4. 'Tis excellent to have a giant's strength.
But it is tyranneous to use it so. *Shakespeare.*

அரக்கரின் பலம் பெறுவது ஆனந்தமே, அதை அரக்கர் வழியில் பிரயோகிப்பது கொடூரமாகும். ஷேக்ஸ்பியர்.

5. Some are born great; some acquire greatness; and some have greatness thrust upon them *Shakespeare.*

சிலர் மகான்களாகவே பிறக்கின்றனர். சிலர் மகத்வத்தை நாளடைவில் பெறுகிறார்கள். மற்றும் சிலர் மீது மகத்வம் புகுத்தப்படுகிறது. ஷேக்ஸ்பியர்.

6. Cowards die many times before their death.
The valiant never taste of death but once. *Shakespeare.*

கோழைகள் மரணத்திற்கு முன்பு பலதடவை இறக்கின்றனர்; வீரரோ ஒரு தடவையே மரணத்தை அடைகின்றனர். ஷேக்ஸ்பியர்.

7. The course of true love never did run smooth *Shakespeare.*

உண்மைக் காதல் தட்டுத் தடங்கலின்றிச் செல்லாது. ஷேக்ஸ்பியர்.

8. A thing of beauty is a joy for ever *J. Keats.*

அழகிய வஸ்து அநித்ய மில்லா ஆனந்தம் ஜான் கீட்ஸ்.

9. Beauty is Truth; Truth Beauty. That's all ye know on earth and all ye need to know *J. Keats.*

அழகே உண்மை; உண்மையே அழகு. மானிடர் அறிந்ததும் இதுவே. அறிய வேண்டியதும் இதுவே. கீட்ஸ்.

10. Every child bears the message that God is not yet despaired of man. *R. Tagore.*

புதிதாகப் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் கடவுள் மனிதனிடம் நம்பிக்கையற்றுப் போகவில்லை என்ற செய்தியை நமக்கு கொண்டு வருகிறது. ரவீந்திரநாத டாகூர்.

11. They also serve who stand and wait *J. Milton.*

சும்மா நின்று காத்துக் கொண்டிருப்பவரும் ஈசன் தொழிலையே செய்கின்றனர். மில்டன்.

12. Lives of great men all remind us
We can make our lives sublime *H. W. Longfellow.*

பெரியாரின் வாழ்க்கையானது நாமும் நம் வாழ்க்கையை மேன்மைப் படுத்தலாம் என்ற நீதியை நமக்கு உணர்த்துகிறது. லாங்பெல்லோ.

13. Beauty is Nature's gift; must not be hoarded; must be current *Milton.*

அழகென்பது இயற்கையின் அளிப்பு; அதைக் குவித்து வைப்பது கூடாது. யாவருக்கும் எடுத்து வழங்க வேண்டும். மில்டன்.

14. Just are the ways of God.
And justifiable to men. *Milton.*

ஈசனின் வழிகள் நியாயமானவை; [illegible]தன் அவைகளைக் குறை கூறுவது மதியின்மையே. மில்டன்

15. A little learning is a dangerous thing
Drink deep or taste not the Pierian Spring. *A. Pope.*

அல்ப வித்தை ஆபத்துக் கிடமாகும்; அறிவு எனும் ஊற்றை நன்ருகப் பருகு. அல்லது அதை தொடக்கூட தொடாதே போப்

16. Fools rush in where angels fear to tread. *A. Pope.*

தேவர் சொல்ல அஞ்சும் பாதைகளில் மூடர்கள் தைரியமாகச் செல்வர். போப்.

17. Procrastination is the thief of time *Pope.*

ஒத்தி யொத்துப் போடுதல் கால சோரனுகும். போப்

18. The child is the father of the man *W. Wordsworth.*

குழந்தையே மனிதனின் தந்தையாம் (விளையும் பயிர் முளையிலே) வெர்ட்ஸ் வொர்த்

19. The path of glory leads but to the grave *Gray.*

பிரதாப மார்க்கம் இடுகாட்டிற்கு இட்டுச் செல்கிறது க்ரே.

20. The path of duty is the way to glory *Tennyson.*

கடமையைக் கடை பிடிப்பதே பிரதாப மடையும் வழி. டென்னிஸன்

21. More things are wrought by prayer than this world dreams of. *Tennyson.*

ஈசனைத் தொழுவதால் உலக மாந்தர் எண்ணுவதைவிட அதிக காரியங்களைச் சாதித்துக் கொள்ளலாம். டென்னிஸன்

22. Art is long and Time is fleeting *H. W. Longfellow.*

கலைகளோ பல; காலமோ ஓட்டம். லாங்பெல்லோ.

23. Life is real ! Life is earnest !
And the grave is not its goal,
'Dust thou art, to dust returnest'
Was not spoken of the Soul. *Longfellow.*

வாழ்க்கை யென்பது உண்மை. வெறும் விளையாட்டுக் காரியமல்ல. சுடுகாடு அதன் முடிவும் அல்ல. மண்ணுல் ஆன நீ, மண்ணுகவே ஆவாய் என்பது ஆத்மாவைப் பற்றிச் சொல்லியதல்ல. லாங்பெல்லோ

24. Speech is shallow as Time;
Silence deep as Eternity *T. Carlyle.*

பேச்சு காலத்தைப்போல் ஆழமற்றது; மௌனமோ சாசுவதத்தைப் போல் ஆழமானது. கார்லைல்

25. If Winter comes can Spring be far behind? *P. B. Shelley.*

வர்ஷ ருது வந்தாலும், வசந்த ருது வெகு தூரமோ. (கஷ்டம் அந்தால் ... சீக்கிரமே வரும் என்ற கருத்து.) ஷெல்லி

(தொடரும்.)

R. இராமகிருஷ்ணன் B. A.

169819

27,000 ஜனங்களால் வாசிக்கப்பட்டு பிரபல்யம் பெற்றிருக்கிறது.

எமது லேடி டிரேட் மார்க் போட்டிருக்கும் புஸ்தகம் பார்த்து வாங்குங்கள்!!

# ஆங்கில ஆசான் அல்லது ஆங்கில போதினி

மூன்று சித்திரப்படங்கள் கூடியது.

கொஞ்சம் பிரதிகளே இருக்கின்றன.

குறைந்த விலை! 800-பக்கங்கள் அபரிமிதமான விஷயங்கள்!!

ஆர்டருக்கு முந்துங்கள், 60 நாளையில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளலாம்.

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் தெரிந்துகொள்ளலாம்.

அழகிய-கலிகோ பைண்டு. புத்தகம் 1-க்கு விலை ரூபா 2.

இதுவரையில் இம்மாதிரியான புத்தகம் வெளிவரவில்லை, உடனே எழுதுங்கள்.

உபாத்தியாயர் இல்லாமல் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இது தான். இதில் ஒரு சொல்லை உச்சரிக்கும் விதமும், அதன் இங்கிலீஷ் அர்த்தமும், மிருகம், பட்சி, கிழமை, மாதம், வருடம், புஷ்பம், ஆயுதம், ஊர்கள் முதலியவற்றின் பெயர்களும், கடிதம் எழுதுதல், உயில், பத்திரங்கள், கல்யாண, சீமந்த, கருமாதி நோட்டீஸ்கள் முதலியன இங்கிலீஷிலும், தமிழிலும் எழுதும் விதமும், சிறு கதைகளும், பழமொழிகளும், அவற்றின் இங்கிலீஷ் அர்த்தமும் வெகு சுளுவான நடையில் விளக்கப்பட்டிருக்கின்றன. மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும், தொழிலாளர்களுக்கும், உபாத்தியாயர்களுக்கும், கிராம முன்சீபு, கர்ணங்களுக்கும், போலீஸ் கான்ஸ்டேபில்களுக்கும், இலங்கை முதலிய தேயிலை காபி தோட்டங்களிலிருக்கும் கங்காணிமார்களுக்கும் மிகவும் முக்கியமானது. ஆநந்த குண போதினி சந்தாதாரருக்கு மட்டும் ரூ. 1-8-0.

பினங்கு, சிங்கப்பூர் தேசங்களிலிருந்து முன்பணம் அனுப்பினால் புஸ்தகம் ரிஜிஸ்தர் செய்து அனுப்பப்படும்.




தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

தி. இராஜகோபால் முதலியார்

# ஆயிரம் தலைவாங்கிய அதிசய சிந்தாமணி

**பிரபஞ்ச அநுபவங்களும், இயற்கையின் உண்மைகளும் உலக அதிசயங்களும், ஆழ்ந்த கற்பனைகளும், ஆநந்த ஊற்றுகளும் அடுக்கடுக்காகத் ததும்பிய விஸ்தாரமான சரித்திரமாய் 20-அத்தியாயங்களுடன் அமைத்துள்ள**

## அற்புதமான இனிய தமிழ் நாவல்

**ஹாப்டோன் படங்களுடன் ஜொலிப்பது.**

“பிரஜாநுகூலன்” பத்திராதிபர் – ஸ்ரீமான்

## S. G. இராமாநுஜலு நாயுடு அவர்கள் இயற்றியது.

ஆயிரம் தலைவாங்கிய அதிசய சிந்தாமணியின் வெற்றியை நீங்கள் வாசித்திருக்கிறீர்களா? “அதிசய சிந்தாமணி” என்னும் பெயராலேயே கௌரவம் பெற்ற இந்த அபூர்வ நாவல் அழகிய பதங்களால் தொடுக்கப்பட்ட இன்பகரமான வாக்கியங்களால் அலங்கரிக்கப்பட்டு நூல் முற்றிலும் உலக அநுபவங்களின் மயமாய் ஜ்வலிக்கின்றது.

சோகரஸம் ஒரு பக்கம், கருணாரஸம் ஒரு பக்கம், வீரரஸம் ஒரு பக்கம், ஹாஸ்யரஸம் ஒரு பக்கம் இப்படி நவரஸங்களும், நான் முன் நான் முன் என்று முன்பட்டு புத்தக முழுமையும் வியாபித்துக்கொண்டிருக்கிறது.

தலை வாங்கியதாய் இப்பொழுது எத்தனையோ கதைகள் பெருகிவிட்டன. உலகத்தில் பெயர் ஒன்றாயினும் மதிப்பு ஒன்றாகாது. மாடு என்னும் பெயர் எல்லா மாடுகளுக்கும் உரியது. ஆயினும் ஒன்றின் விலை பத்து ரூபாய். மற்றொன்றின் விலை நூறு ரூபாய். பெரிய கருங்கல்லின் விலை ஒரு ரூபாய். சிறிய ரத்நக்கல்லின் விலை பதினாயிரம் ரூபாய். என் இத்தனை வித்யாஸம்? அதன் குணத்துக்கும் நலத்துக்கும் தக்கபடி மதிப்பு வேறுபடுவதா லன்றோ? அவ்விதம் “தலைவாங்கியதான பெயர் பொதுவாயிருப்பினும், அவ்வித புஸ்தகங்களி லெல்லாம் அதியுன்னதமாய்க் கொண்டாடத் தக்கது அதிசய சிந்தாமணியே என்பதை அதைப் படித்தவர்கள் தாங்களே நிச்சயிக்கும்படி அத்தனை சொகுசாய் நவரஸங்களும் பொருந்தி வெகு அற்புதமாக இந்த நாவல் பரிமளிக்கின்றது.

ஆதலின் ஒவ்வொருவரும் உத்தமமும் உயர்தரமுமான இந்த அதிசய சிந்தாமணி நாவலைப் பெற்று தங்களின் குடும்பப் பொக்கிஷமாகக் கொள்ள வேண்டுகிறோம். இந்த நாவலின் விலை ரூபாய் ஒன்றே. உடனே எழுதுங்கள்.

## தி. இராஜகோபால் முதலியார்

“ஆநந்த குணபோதினி” ஆபீஸ்

302, தங்கசாலை வீதி, மதராஸ்.

ஆநந்த குண போதினி ஆபீஸ்

## ஸ்ரீ ராமாமுனிவர் சுகந்தரு மாத்திரைகள்




சர்வரோக நிவாரணி.

100 மாத்திரைகள் அடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1

ஏஜெண்ட் :—

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

---

வெளி வந்துவிட்டது!   புதிய பதிப்பு !!   வெளி வந்துவிட்டது !!!

# அங்கயற்கண்ணி

அல்லது

## அன்புள்ள மங்கை

இது ஓர் துப்பறியும் அபூர்வமான செந்தமிழ் நாவல். இந்த நாவலை ஆரம்ப முதல் முடிவுவரையில் எவ்விதவேலை இருந்தபோதிலும் படிக்கத் துவக்கியவர்கள் முடிக்கிறவரையில், புஸ்தகத்தை கீழே விடமாட்டார்களென்று திடமாகச் சொல்லலாம். இந்த நாவலில் கதாநாயகனாக வரும், ஒருவன் உயர்குலத்தில் பிறந்தவனும், அதிக செல்வவந்தனும், படிப்பில் மிக்க தேர்ச்சி உள்ளவனும், பல இடங்களில் மேன்மக்கள் சாவகாசமுள்ளவனும், நன்னடக்கை உள்ள ஒருவன் இக்கதையில் கதாநாயகியாய்வரும் அழகில் சிறந்த அங்கயற்கண்ணியின்மீது ஆவல் கொள்வதும், அவளையே விவாகம் புரியவேண்டுமென்ற எண்ணத்தினால் அவன் செய்யும் கொடூரமான கொலையும், பயங்கரமான விஷயங்களும், அதை வேறு ஒருவன்மீது பழிசுமத்துவதும், சமயத்துக்கு ஏற்றவாறு அவனுடைய திறமையும் படிப்பவர்களுக்கு ஊக்கத்தைத்தரும். கதாநாயகியாகிய அங்கயற்கண்ணியின் கற்பை வாசிக்க, வாசிக்க நமது சகோதரர், சகோதரிகளுக்கு மிக்க ஆச்சரியத்தையும், நன்னடக்கையையும் உண்டுபண்ணும். இந்த நாவலின் சிறப்பை அதிகமாய் எழுதுவதை சுருக்கி காட்டி இருக்கிறோம். (இது 350 பக்கமடங்கியுள்ளது.) [illegible]க்கமான பெரு அச்சில் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. |விலை ரூபா 1 12 0

**ஆநந்த குணபோதினி சந்தாதாரருக்கு விலை ரூ.1 —6—0.**

**302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.**

தி. இராஜகோபால் முதலியார்

அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற

சுகந்த

# கூந்தல் வளரும் தைலம்.

**5-பலம் தைலம் அடங்கிய டின் 1-க்கு விலை அணா 12.**

நேயர்களே! தாங்கள் அநேகவித கூந்தல் தைலங்களை உபயோகித்திருக்கக்கூடும். இருந்தபோதிலும் எமது சுகந்த கூந்தல் வளரும் பரிமளத் தைலத்தை ஒரு தடவை உபயோகிப்பீர்களானால், அதன் குணம், மணம் என்றும் தங்களைவிட் டகலாதென்பது உண்மை.




இந்த சுகந்த கூந்தல் வளரும் பரிமளத் தைலமானது அநேக வித திவ்ய வன மூலிகைகளால் சாஸ்திரப்படி தயார் செய்யப்பட்டது. இதன் பரிமளம் அன்று மலர்ந்த புஷ்பங்களின் வாசனைக்கு நிகராயிருக்கும். இது மயிரை உதிர்க்காமல், கூந்தல் நீளமாக வளரச்செய்யும். மூளையின் கொதிப்பைத்தணித்து கண்களுக்கு குளிர்ச்சியைத் தரும். சிரசிலுள்ள பல நோய்களையும் நிவர்த்தி செய்து கண்களில் நீர் வடிதல், தலையில் சுண்டு, புண், மயிர் வெடிப்பு, மயக்கம், தலை சுற்றல், தலைவலி, மனோவியாகூலம் ஆகிய இவைகளைப் போக்கடித்து தேகத்திற்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும்.

| | | | |
|---|---|---|---|
| சம்பங்கி எண்ணெய் 5-பலம் கொண்ட டின் விலை ரூ. | 0 | 12 | 0 |
| மல்லிகைப்பூ எண்ணெய் 5-பலம் கொண்ட டின் விலை ரூ. | 1 | 0 | 0 |
| மருடம்பூ எண்ணெய் 5-பலம் கொண்ட டின் | 1 | 0 | 0 |
| தாழம்பூ எண்ணெய் 5-பலம் கொண்ட டின் | 1 | 4 | 0 |
| ரோஜாப்பூ எண்ணெய் 5-பலம் கொண்ட டின் | 1 | 8 | 0 |

எமது விலாசம் :— **தி. இராஜகோபால் முதலியார்,**

**நெ. 302, தங்கசாலைத் தெரு, மின்ட் போஸ்ட், மதராஸ்.**

இத்தகைய நவீன

மும் சிறந்ததுமான வழி. இராஜகோபால் முதலியார் [illegible]
மாய் நடத்தப்படும். வெ[illegible]
வியாசங்கள் இதில் ஒவ்வொரு தடவையும் தான் [illegible]
வெளி வருவது. தடவைதோறும் 48-பக்கங்களுக்கு மேற்கொண்டது.

காலத்தை யொட்டிய கருத்துகள் ததும்புவது. "சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய" அலங்கார வசன மழை. ஒவ்வொரு விஷயமு வெகு ஆராய்ச்சியோடும் யோசித்து எழுதப்படுவது. படிப்பவர்களுக்கு [illegible] னடக்கையும், லௌகீக யுக்தியும், பாஷா ஞானம் சுதேச சிந்தனையு ஈசுவர பக்தியும், ஆழ்ந்த யோசனையும் உண்டாகக்கூடிய விதமாய், உ கத்திலுள்ள ஸர்வ ஜனங்களும், பொதுவாய், ஸகல மதஸ்தர்களுக்கும் இன் மாய் எல்லா ஜாதியார்களுக்கும் ஏற்றதாய், எப்போதும் நல்ல விஷயங்கள் இருக்கப்பெற்றதாய் சொல் நயம் பொருள் நயம் தோன்ற எழுதப்பட்டு தமிழ் உலகமெல்லாம் ஜொலிக்கும்படியாய் இருக்கும். எவர் கையிலும் இப்பத்திரிகையைக் காணலாம். எங்கும் இப் பத்திரிகையின் பெயர் வெகு பிரீதியோடும் சொல்லப்படும். எல்லோருக்கும் இன்பப் பொக்கிஷம் இது உடனே எழுதுங்கள்.

---

# ஆநந்த குணபோதினியின்

## வருஷ சந்தா விபரம்

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு வருஷ சந்தா ரூபாய் 1. வெளி நாடுகளுக்கு ரூபாய் 1—4—0. தனிப் பத்திரிகை அணா 2.

ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா இல்லை. எந்த மாதத்தில் சேர்ந்தாலும், படித்து தெரிவதற்குச் சௌகரியமாய் முதற் பத்திரிகையி லிருந்தே கணக்கிடப்பட்டு அப்பத்திரிகைகளையும் கூடச் சேர்த்து அனுப்பப்படும்.

சந்தா மணியார்டர் செய்தால் ரூ. 1-2-0 தான் ஆகும். வி. பி. யில் பெறுவதில் ரூ. 1-5-0 ஆகும். விலாஸம் மாறும்போது தெரிவிக்க வேண்டும். [illegible] தவறிய பத்திரிகைகளை அம் மாதத்திற்குள் எழுதினால்தான் அனுப்பப்படும். பதில் விரும்புவோர் ரிப்ளை கார்டு, அல்லது ஸ்டாம்பு அனுப்புவதே நலம். எப்போதும் தங்களின் சந்தா நெம்பரைக் குறிப்பிட்டு எழுத வேண்டும். நெம்பர் குறிப்பிடாத கடிதங்கள் கவனிக்கப்படுவது அதி பிரயாஸம்.

அன்பர்கள் இப்பத்திரிகையைத் தங்களின் சொந்தப் பத்திரிகையைப் போலும் தங்களின் குடும்பத்திற்குச் சேர்த்துவைக்க வேண்டிய பொக்கிஷம் போலும் பாவித்து என்றைக்கும் பிரீதியுடன் ஆதரித்துவரக் கோருகிறோம்.

☞ எல்லா கடிதங்களும், மணியார்டர்களும், போஸ்டல் ஆர்டர்களும் யாவும் அடியில் கண்ட விலாஸத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

தி. இராஜகோபால் முதலியார், புரொப்ரைட்டர்,
"ஆநந்த குணபோதினி" ஆபீஸ், 302, தங்கசாலைத் தெரு, [illegible]

# ...ாதினி

...றும் புகுந்து நிலவும்

ஒரு நூதன உயர்தர தமிழ் மாதப் பத்திரிகை.

"ஆநந்த குணபோதினி" எவ்வகைத் தொழிலுடையோர்க்கும் அதிக பலனைத் தரும். படிக்கப் படிக்க விஷய அறிவதன்றிப் பேரானந்தமும் வித்துவமும் பெருகும்.

"ஆநந்த குணபோதினி" ஸகலரும் அறியும்படி சுலப நடையில் எழுதப்படுகிறது. நமது நாட்டிற்கு நலமுண்டுபண்ணும் விஷயங்களையே கொண்டிருக்கும்.

"ஆநந்த குணபோதினி" ஆடவர், மகளிர், பெரியோர், சிறியோர், யாவர்க்கும் பிரியமான விஷயங்கள் உள்ளதாய் அறிவை விளக்கி உற்சாகத்தைக் கொடுப்பது.

"ஆநந்த குணபோதினி"யின் முதல் பக்கத்தில் "ஆநந்த தரிசனம்" என்ற தலைப்பின்கீழ் எப்போதும் தத்துவஞான விஷயங்களும், ஈசுவரபக்தியைப்பற்றிய விஷயங்களும் நிறைந்திருக்கும். இவை யாவும் ஸர்வமத ஸமரஸம். தேன்போல் இனித்து, பால் போல் ருசிக்கும்.

"ஆநந்த குணபோதினி"யின் மூன்றாம் பக்கத்தில் உயர்தர ஆங்கில மாத ஸஞ்சிகைகளை யொப்பத் தலையங்கம் உப அங்கங்களும் தோன்றி தேச நன்மையை நாடிய விஷயங்களும், ஆராய்ச்சிகளும் ததும்பி நிற்கும்.

"ஆநந்த குணபோதினி"யில் தடவைதோறும் "பழமொழிக் குறிப்புகள்" என்ற தலைப்பின்கீழ் பல பழமொழிகளின் ஆழ்ந்த கருத்துகளையும் உலக ரகசியங்களையும் விவரிக்கப்படும்.

"ஆநந்த குணபோதினி"யில் "பத்திரிகாசாரம்" என்ற தலைப்பில் எல்லாப் பத்திரிகைகளிலுமுள்ள சாரமான விஷயங்கள் காணப்படும்.

"ஆநந்தகுணபோதினி"யில் "பெண்கள் பக்கம்" எப்போதும் வெகு ஸ்வாரஸ்யமாய் இருக்கும்.

"ஆநந்த குணபோதினி"யில் "பிர[illegible]பஞ்ச தரிசனம்" என்ற தலைப்பில் ஸர்வதேச சம்பந்தமான ஆராய்ச்சிகளுடன் இந்தியாவையும் ஒப்பிட்டு அருமையான குறிப்புகள் எழுதப்படும்.

"ஆநந்த குணபோதினி"யில் ஒவ்வொரு தடவையும் "விகடப் பிரதாபன்" தோன்றுவான். மஹா விகடதூதன், விஜய விகடன் பத்திரிகைகளை யொப்ப விகடத் தலையங்கங்களும் ஹாஸ்யங்களும் தோன்றி சலித்துப்போன மனதையும் உல்லாஸப்படுத்திவிடும். எல்லாம் உலக அநுபவங்களே.

"ஆநந்த குணபோதினி"யில் பிரதி தடவையும் "சென்ற மாதம்" என்ற தலைப்பின் கீழ் மாதாந்த விசேஷங்களைக் குறித்து ரஸமான சிறு சிறு குறிப்புகள் வரையப்படும்.

"ஆநந்த குணபோதினி" பத்திரிகையே எவ்விஷயத்திலும் வெகு சிறந்த தென்பதை பிறருடைய சிபாரிசின்றி ஒவ்வொருவரும் தங்களுடைய அநுபோகத்தில் தாங்களே அறிந்து கொள்ளலாம்.

"ஆநந்த குண போதினி"யின் சொற்ப சந்தாவையும் உற்று நோக்குங்கள். வருஷ சந்தா ரூ. ஒன்றே.

"ஆநந்த குணபோதினி"ப் பத்திரிகைக்கு இணையாக வேறெந்த பத்திரிகையையும் சொல்ல முடியாது. உடனே சந்தாதாரராகச் சேர்ந்து ஆதரித்து ஆனந்த பரவசர்களாகும்படி வேண்டுகிறேன். இன்றே சேருங்கள். உடனே எழுதுங்கள்.

"ஆனந்த குணபோதினி" ஆபீஸ், 302, தங்கசாலைத் தெரு, மதறாஸ்